செப். 07 - செப். 13, 2008 Sept. 07 - Sept. 13, 2008 பக்கங்கள் - 28 [illegible].00

நூலகம்
படிப்பகம்
யாழ்ப்பாணம்.

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்



## இலங்கை விவகாரத்தில் கையாலாகாத இந்தியா!

ஒரிசா இந்து - கிறிஸ்தவ கலவரங்கள்; இந்திய ஜனநாயகத்தின் பலவீனம்

மாரி மழையுடன் அவலம் உச்சநிலையில்

வாளேந்திய வரவேற்பு



# வானேந்திய வரவேற்பு

''இரவு நேரங்களில் இடம்பெறும் விமானத் தாக்குதல்களை உடன் நிறுத்த வேண்டும்.''

- திருகோணமலைத் துறைமுகத்தினுள், இருளை ஊடறுத்துக் கொண்டு வான்புலிகள் கொடுத்த அதிர்ச்சி வைத்தியத்தால், 'பேதி' போய்க்கொண்டிருக்கின்ற படைத்தரப்பு விடுத்த பயக்கூச்சல் என்றே மேற்குறித்த செய்தியை எல்லோரும் கருதுவீர்கள். ஆனால்,இரவுநேரங்களில் கண்மண் தெரியாமல், வன்னிப் பிரதேசம் முழுவதையும் புலிகளின் 'முக்கிய' தளங்களென்ற நினைப்பில் அரச வான் படையினரின் விமானங்கள் பொழிகின்ற குண்டுமழையின் அகோரத்தை தாங்கமுடியாது உதிரம் வடிகின்ற சொற்களில் வடக்கு, கிழக்கு மனித உரிமைகள் செயலகமே மேலே தரப்பட்ட கோரிக்கையை அரசிடம் வைத்திருக்கின்றது. அந்தளவு தூரத்திற்கு இலங்கை விமானப்படையினரின் வெறியாட்டம், மக்களைச் சின்னாபின்னப் படுத்தி, அவர்களின் ஒட்டுமொத்த வாழ்வியலையே சிதிலமாக்கியிருக்கின்றது.

வன்னிமீதான பலவழிக் களத் திறப்பினை மேற்கொள்வதற்கு முன்னரேயே, தன்னுடைய விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்களை வன்னியை நோக்கி இலங்கை அரசு ஆரம்பித்திருந்தது. விமானத்தாக்குதல்கள் மூலம் மக்களையும் புலிகளையும் கொன்று அந்த உயிர்ப் பலிகள் மூலம் புலிகளை உசுப்பேற்றி, புரிந்துணர்வு உடன்படிக்கையைப் புலிகளைக் கொண்டே கிழித்தெறிய வைக்க மஹிந்த சிந்தனையாளர்கள் திட்டம் வகுத்திருந்தனர்.

ஒடுபாதை தேயுமளவிற்கு விமானத் தாக்குதல்களை நடத்தியும் செஞ்சோலைப் பிஞ்சுகள் முதலான பல நூற்றுக்கணக்கான மக்களையும் விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட புலிகளின் முக்கிய உறுப்பினர்களையும் கொன்ற பிறகும் கூட, புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைவிடுவது தொடர்பான எந்தவித 'அசுமாத்தமும்' காணப்படவில்லை. இலவுகாத்த கிளி போல, காலம் முழுதும் காத்திருக்க வேண்டிய நிலை வந்துவிடுமோ என்ற நினைப்பில் இரத்தவெறி கொண்ட நாவைச் சப்புக்கொட்டியபடி வேறு வழி இல்லாமல் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கான புதைகுழியை இலங்கை அரசே தோண்ட வேண்டியதாயிற்று. மூதூர், மட்டக்களப்பு எனக் கிழக்குப் பகுதிகளை மேய்ந்துவிட்டு, இப்போது வன்னியிலும் அரசு வாய் வைத்திருக்கிறது. புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலில் இருந்தபோதே 'சண்டித்தனம்' காட்டிய இலங்கைப் போர் விமானங்கள், போர் தொடங்கிய பின் சும்மாயிருக்குமா? மக்கள் மூச்சு விடக்கூட அவகாசம் எடுக்க முடியாத அளவுக்கு மாறிமாறி விமானத் தாக்குதல்கள் வன்னியின் மூலை முடுக்கெங்கும் நிகழத்தொடங்கின.

விமானங்களின் பேரிரைச்சலும், இரத்த 'வெடிலும்', மரண ஓலமும், ஒப்பாரியும் வன்னிமக்களின் செவிப்பறைகளையும் மனங்களையும் அதிரச் செய்தன. போதாக்குறைக்கு அரச யந்திரங்கள் வன்னிநிலங்களை வேகமாக விழுங்கியபடி நகர்ந்து வருவதால், அதற்கு ஈடுகொடுத்தபடி, இடம்பெயர்ந்து கொண்டேயிருக்க வேண்டிய கட்டாயத்துக்குள்ளும் வன்னிமக்கள் தள்ளப்பட்டனர்.

ஏறக்குறைய ஒருலட்சத்து முப்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்விடமிழந்து கிளிநொச்சியில் உள்ள 22 பாடசாலைகளில் தஞ்சமடைந்திருக்கிறார்கள். ஏறக்குறைய இதேயளவு எண்ணிக்கையான மக்கள் தமது உறவினர், நண்பர் வீடுகளில் அடைக்கலமாகியுள்ளனர். விமானக்குண்டு வீச்சு, எறிகணை வீச்சு, வாழிடமின்மை, உடமையிழப்பு, உயிரிழப்பு, தொழில் வாய்ப்புகள் அற்றுப் போனமை, பண நெருக்கடி, பொருளாதாரத்தடை, சுகாதார மருத்துவ சேவைகளின் பற்றாக்குறை என்பவற்றையெல்லாம் ஒன்றுசேர எதிர்கொண்டபடி தம் இயங்குதலை நிகழ்த்தவேண்டிய நிலையில் வன்னிமக்கள் உள்ளனர். வன்னிமக்கள் நிம்மதியாக நித்திரை கொண்டே வருடக்கணக்காகி விட்டிருக்கின்றன.

ஏனெனில், எப்போது விமானம் வரும், எங்கே குண்டுகளைக் கொட்டும் என்ற ஏக்கத்திலேயே வன்னி இரவுகள் கழிந்துகொண்டிருக்கின்றன.

இதற்கிடையில் மாணவர்களின் எதிர்கால வாழ்வைத் தீர்மானிக்கும் க.பொ.த. உயர்தரப் பரீட்சைகளும் வன்னியில் இடம்பெறவே செய்கின்றன. சாதாரணமாக வாழவே வழியற்றுப் போன வன்னியில் பரீட்சைக்காக மாணவர்கள் படித்துத் தம்மைத் தயார்படுத்துவதென்பது அசாத்தியமான விடயம். எனினும், மரணத்திலும் வாழப் பழகிக் கொண்ட வன்னிப் பகுதி மாணவர்கள் இடம்பெயர்ந்து கொண்டே, க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கும் தோற்றி வருகின்றனர். தினமும் ஒரு பிரதேசத்திலிருந்து இன்னொரு பிரதேசத்திற்கு மக்கள் ஓடிக்கொண்டேயிருப்பதால், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பரீட்சை நிலையத்தில் தம்முடைய பரீட்சைகளை பல மாணவர்கள் எழுதியிருக்கின்றார்கள். பகலில் போரின் வெம்மையால் பலவித மன உளைச்சல்களுக்குள்ளாகின்ற மாணவர்கள் இரவாவது கொஞ்சம் படிப்போமென்றால் இலங்கை அரசின்

**- பிரமன் -**

போர்விமானங்கள் அதற்கும் இடமளிப்பதில்லை. மாணவர்களைப் படிக்கவிடாது ஓடவைப்பதோடு, மாணவர்களின் உயிரைப் பலியெடுத்து வருகின்றன.

''பரீட்சை என்பது மாணவர்களின் எதிர்கால வாழ்வுக்குறுதி. அவர்களின் எதிர்காலம் பெரிதும் பரீட்சையைச் சார்ந்தது. மாணவர்களின் இந்த உரிமைகளைப் பிடுங்கக் கூடாது. மாணவர்களைப் பகடைக் காய்களாக்கி, அவர்களில் எதிர்காலத்தை நாசமாக்கக் கூடாது'' மாணவர்களின் நலன்மீது அக்கறையைப் பொழிகின்ற இந்த வார்த்தைகள் எந்தவொருமனிதாபிமான அமைப்பைச் சார்ந்தவருடையதோ அன்று. இந்த வார்த்தைகளுக்குச் சொந்தக்காரர் சாட்சாத் நம்முடைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள்தான்.

அண்மையில் தங்காலையில் நடந்த நிகழ்வொன்றிலேயே மாணவர்களின் எதிர்காலத்தை எவரும் பாழாக்கக்கூடாது என்ற தொனியில் ஜனாதிபதி உரை நிகழ்த்தியிருக்கிறார். இதே ஜனாதிபதிதான் வன்னி மாணவர்களின் எதிர்காலத்தைப் பாழாக்குவதோடு அவர்களின் உயிரையும் காவுகொள்கின்ற விமானத் தாக்குதல்களுக்கான ஆணையை வழங்குபவர். மாணவர் நலன் தொடர்பில் ஒரு கண்ணில் வெண்ணையையும் மறுகண்ணில் சுண்ணாம்பையும் வைத்துநோக்கும் இரட்டை வால்தனம் அவருடைய இப்பேச்சின் மூலம் புலனாகின்றது. வன்னிமக்கள் மீதான கண்மூடித்தனமான விமானத் தாக்குதலுக்கு ஜனாதிபதி உத்தரவிடுவதற்கு உள்நோக்கம் இல்லாமலுமில்லை.

யுத்தத்தின் இறுதி வெற்றியைத் தீர்மானிப்பது கைப்பற்றப்பட்ட பெருநிலங்களல்ல. மக்களற்ற வெற்றுநிலங்கள் போலியான வெற்றிப் பெருமிதத்தை உண்டு பண்ண முடியுமே தவிர, நிரந்தர வெற்றிக்கு அடிகோலப் போவதில்லை. எனவே, மக்கள் கூட்டத்தை தம்பகுதிக்குள் உள்வாங்கவேண்டிய தேவை போரில் ஈடுபடுகின்ற இருதரப்பினருக்குமே உண்டு. ஆனால், வெற்று நிலங்களை கையகப்படுத்துவதில் அண்மைக்காலமாக அரசாங்கம் வெற்றிபெற்று வருகின்றபோதிலும் மக்களை தம்பால் ஈர்ப்பதில் பாரிய பின்னடைவையே அது சந்தித்துள்ளது. மக்கள் கூட்டமல்லாத வெறும் நிலப்பரப்பை மட்டும் வைத்துக் கொண்டு, புலிகளின் பிடியிலிருந்து மக்களை மீட்டெடுத்து ஜனநாயகத்தை முளைகொள்ளச் செய்துவிட்டதாக மார்தட்டமுடியாது. மாறாகப் புலிகளின் பகுதியிலுள்ள மக்களைத் தன பகுதிக்குள் கொண்டு வந்துவிட்டால் தமிழ்மக்கள் வேறு, புலிகள் வேறு என்ற தோற்றப்பாட்டையும் சர்வதேசத்தின் முன் நிறுவிவிட அரசுக்கு வசதியாயிருக்கும். ஆனாலும் போரிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஓடிவராது, புலிகளின் பகுதிகளை நோக்கியே மக்கள் இடம்பெயர்ந்தபடி உள்ளனர். இது அரசாங்கத்தின் போர்வெற்றி பற்றியதான பெறுமதியினைக் கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றது.


எனவேதான், மக்களைத் தன்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான புதிய வியூகம் என்ற நினைப்பில் பழைய மொந்தையிலுள்ள பழைய கள்ளையே அரசு பயன்படுத்தத்தொடங்கியது. அதாவது, குண்டுகளோடு சேர்த்து, துண்டுப் பிரசுரங்களையும் வன்னியெங்கும் இலங்கைப் போர் விமானங்கள் வீசத் தொடங்கியுள்ளன. புலிகளின் பகுதிகளைவிட்டு உடனடியாக அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் மக்கள் வந்து சேரவும் என்ற அன்புக் கட்டளையை அரசாங்கம் துண்டுப் பிரசுரங்கள் ஊடாக வன்னிமக்களுக்கு அறிவித்துள்ளது. கூடவே, முன்னரைக் காட்டிலும் அதிகளவான விமானத் தாக்குதல்களையும் அது முடுக்கிவிட்டிருக்கின்றது.

மீன்பிடிப்பதற்குப் பலவழிகள் இருக்கின்றன. தூண்டில் போடுதல், வலை வீசு தல், களங்கண்ணி வைத்தல், வெடிவைத் தல் என்பன போன்ற வித்தியாசமான முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடிக்க லாம். இவற்றுள் வெடிவைத்து மீன்பிடிக்கும் பாணியையே அரசு தனது புதிய யுக்தியாகக் கைக்கொள்கின்றது. அதாவது, சுற்றிவர வெடிவைத்து, மீன்களைக் கிலி கொள்ளச் செய்து வெடிவைக்காத பகுதிக்கு மீன்களை நகரவைத்து அவற்றினைப் பிடிக்கும் முறையை ஒத்ததாகவே அரசின் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இருக்கின்றன. இடையறாத விமானக் குண்டு வீச்சுகளை நிகழ்த்தி, மக்களை உயிர்ப்பயத்துக்குள்ளாக வைதது பாதுகாப்புப் படையினரிடம் வருவதே வாழ்வதற்கான ஒரேயொரு தெரிவு என்ற வாசலைத் திறப்பதினூடாக வன்னி மக்களை வளைத்துப்போட அரசு முயற்சிக்கிறது. இதற்காகவே வன்னி மீதான விமானக்குண்டு வீச்சின் வீரியம் அதிகமாக்கப்பட்டுள்ளது.

வன்னியில் மக்கள் மீதான விமானக் குண்டு வீச்சுகள் எத்தனை தடவைகள் இடம்பெற்றுள்ளன என்பதனை சுலபமான சூத்திரமொன்றினூடாக விளக்கலாம். அதாவது வன்னி நோக்கியதான இராணுவ நடவடிக்கையில் எத்தனை புலிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்று அரசுத் தரப்பு கணக்குக் காட்டியுள்ளதோ, அதனை விடவும் அதிக எண்ணிக்கையான தடவைகள், வன்னியில் மக்கள் குடியிருப்புகள் மீது விமானக் குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றிருக்கின்றன.

வன்னிக்களமுனையில் தாம் சந்திக்கின்ற இழப்புகளை மறைக்கவும், மறக்கவும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களை அரச படைகள் பிரயோகித்து வருகின்றன. பிட்டுக்கு மண் சுமந்த சிவபெருமான் மீது பாண்டியன் அடித்த அடி உலகத்தார் எல்லோருக்கும் வலித்ததைப் போல, போர்க்களத்தில் தமக்கு ஏற்பட்ட இழப்பை வன்னிமக்கள் உணரவும், உயிரிழப்பை ஈடுசெய்யவும் வல்லூறுகள் போல எந்நேரமும் உயிர்ப்பசியுடன் வன்னி வான் பரப்பை வட்டமிடுகின்றன அரச விமானங்கள். நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்லுகின்ற விமானப்படையினரின் தாக்குதல் தீவிரத்தையும், அதனால் ஏற்படுகின்ற மனிதப் பேரவலத்தையும் பார்க்கச் சகிக்காத பல சர்வதேசத் தொண்டு நிறுவனங்களும்,

(4 ஆம் பக்கம் பார்க்க)





# நிறவெறிக்கு ஒபாமா பலியாகிவிடுவாரா?

வெள்ளை இனத்தவர்களால் பராக் ஒபாமாவின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற அச்ச உணர்வு அவர் ஜனாதிபதி வேட்பாளராக தன்னை அறிவித்த அந்த தருணத்திலிருந்து தோற்றம் பெற்றுள்ளது.

கறுப்பினத்தவர் ஒருவர் ஜனாதிபதியாக வருவதற்கு அல்லது பதவி வகிப்பதற்கு வெள்ளை இனத்தவர்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்ற தீவிர சந்தேகமே இதற்குக் காரணம்.

கடந்தகால வரலாறும் இவ்வாறான ஓர் அச்சத்துக்கு துணைபோயுள்ளது. ஆழமாகப் புரையோடிப் போயுள்ள அந்த நிறவெறி, ஒபாமாவின் உயிருக்கு ஏதோவொரு சந்தர்ப்பத்தில் ஆபத்தாக முடியும் என்பது பலரது வாதம்.

இவ்வாறான பின்னணியிலேயே டென்வரில் ஒபாமாவைக் கொலை செய்வதற்கு முயற்சித்த நால்வர் கடந்த வாரம் கைதுசெய்யப்பட்ட செய்தி உலகின் கவனத்தை தீவிரமாக ஈர்த்துள்ளது.

ஜனாதிபதி வேட்பாளராக ஜனநாயக கட்சி தன்னை நியமித்ததை ஏற்றுக்கொண்டு ஒபாமா, கட்சியின் மாநாட்டில் உரையாற்றவிருந்த தருணத்திலேயே அவரைக் கொலை செய்யத் திட்டமிடப்பட்டிருந்ததாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்கள் ஒபாமா மீது கடும் கசப்புணர்வு கொண்டிருந்தனர் என்றும் சினைப்பர் துப்பாக்கியைப் பயன்படுத்தி அவரைக் கொலைசெய்ய முயற்சித்தனர் என்றும் அமெரிக்க அதிகாரிகள் தற்போது தகவல் வெளியிட்டுள்ளனர்.

ஒபாமா ஜனாதிபதி ஆவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளமை குறித்து அச்சம் கொண்டிருந்த அவர்கள் அவர் வெள்ளை மாளிகையில் ஒருநாள்கூட வசிக்கக்கூடாது என்றெல்லாம் தமக்குள் சீறிக்கொண்டனர் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அவர்களுக்கு அரசியல் நோக்கம் எதுவுமில்லை. ஒபாமாவைக் கொல்வதற்கு அவர்கள் சிந்தித்தமைக்கு ஒரேயொரு காரணம் அவர் கறுப்பினத்தவர் என்பது மாத்திரமே என்கின்றன அமெரிக்க அரசஆவணங்கள்.

சந்தேக நபர்கள் போதையில் இது குறித்து பேசினார்களா அல்லது இது குறித்து தீவிரமாக உண்மையிலேயே சிந்தித்தார்களா என்றும் அதிகாரிகள் ஆராய்கின்றனர். ஏனெனில், சந்தேக நபர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமைப்பட்டவர்கள்.

எனினும், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகள் கென்னடி பாணி கொலையை செய்வதற்கு போதுமானவையாக காணப்பட்டன.

டென்வரின் புறநகர் பகுதியில் உள்ள அரோராவில் நள்ளிரவில் கட்டுப்பாட்டை இழந்து ஓடிக்கொண்டிருந்த பிக் அப் ரக வாகனம் ஒன்றை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தடுத்து நிறுத்திய வேளையே, இதுதொடர்பான பல விடயங்கள் தெரிய வந்துள்ளன.

போதைப் பொருளை வைத்திருந்ததற்காக வாகன சாரதி அனுமதி பத்திரம் இரத்துச் செய்யப்பட்டவரின் கார்டிரெல் எனும் நபர் குறிப்பிட்ட வாகனத்தைச் செலுத்திவந்தது தெரியவந்துள்ளது. மேலும் அந்த வாகனத்தில் பெருமளவு போதைப்பொருட்களுடன் சில துப்பாக்கிகளும் காணப்பட்டன.

குறிப்பிட்ட வாகனம் தன்னுடையதல்ல என்றும் டென்வரில் உள்ள ஹையட் ஹோட்டலில் தங்கியுள்ள சோவ்ன் அடோல்வ் எனும் தனது உறவினருடையது என்றும் கார்டிரெல் தெரிவித்தார் என பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

பல குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டிருந்த அடொல்வை தேடிக் குறிப்பிட்ட ஹோட்டலுக்கு பொலிஸார் சென்றபோதிலும் அவன் அங்கு காணப்படவில்லை. நதன் ஜோன்சன் எனும் 32வயது நபரே அங்கு காணப்பட்டான். குறிப்பிட்ட நபரிடமும் போதைப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

எனினும், சிலமணி நேரத்துக்குள் அடோல்வ் வேறொரு ஹோட்டலில் இருப்பது தெரியவந்து பொலிஸார் அங்கு சென்ற வேளை அடொல்வ் அந்த ஹோட்டலின் மாடியிலிருந்து குதித்து, தப்பமுயன்றான். எனினும் அது சாத்தியப்படவில்லை.

நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களில், கைதுசெய்யப்பட்டுள்ள மூன்றுநபர்களும் பராக் ஒபாமா குறித்து கடும் வெறுப்பை வெளியிட்டமை சாட்சிகளுடன் பதிவாகியுள்ளது.

கறுப்பினத்தவர் ஒருவர் அமெரிக்காவின் ஜனாதிபதியாக ஒரு போதும் வரக் கூடாது என அவர்கள் கதைத்துக்கொண்டிருந்தனர் என்று தெரிவித்துள்ள பெண்மணி ஒருவர் அவர்கள் நிறவெறியர்களாகவும் வெள்ளை நிறத்தவர்களே உயர்ந்தவர்கள் எனக் கருதும் கும்பலை சேர்ந்தவர்களாகவும் இருக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்தவர்கள் புகைப்படக் கருவி ஒன்றுக்குள் துப்பாக்கியை மறைத்துவைத்து ஒபாமாவைக் கொலை செய்வது குறித்து ஆராய்ந்தமையும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகத் தன்னை நியமித்ததை ஏற்றுக்கொண்டு ஒபாமா உரையாற்றும் தினத்தன்று அவரைக் கொலை செய்வது குறித்து அடொல்வ் ஒருமுறை தன்னிடம் தெரிவித்தார் என ஜோன்சன் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார்.

ஒபாமாவை கொல்லும் விடயத்தில் அடொல்வுக்கு உதவுவதற்காகவே கார்டிரெல் டென்வருக்கு வந்திருக்கலாம் என்றும் ஜோன்சன் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோன் கென்னடி கொலை செய்யப்பட்ட அதே பாணியைப் பயன்படுத்தி ஒபாமாவைக்

**- ரஜீவன் -**

கொலை செய்வது குறித்து அடொல்வும் ஜோன்சனும் விவாதித்துள்ளனர்.

சிறையிலிருந்து சி.பி.எஸ். தொலைகாட்சிக்கு வழங்கியுள்ள பேட்டியில் ஒபாமாவை கொல்வது குறித்துப் பேசியது உண்மை என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

ஒபாமாவைப் பற்றி கசப்புணர்வு கொண்டிருந்தீர்களா? அவர் ஜனாதிபதியாக வருவதை நீங்கள் விரும்பவில்லையா? என்ற சி.பி.எஸ். தொலைக்காட்சி செய்தியாளரின் கேள்விக்கு ஆம் என்ற பதிலே கிடைத்துள்ளது.

மிகவும் உயரமான ஓர் இடத்திலிருந்து ஒபாமாவை சுடுவதற்கு இவர்கள் திட்டம் தீட்டிஇருந்தனர்.

இன்வெஸ்கோ மைதானத்தில் ஒபாமா தனது ஏற்புரையை அளித்துக் கொண்டிருக்கும் தருணத்திலோ அல்லது அவர் மைதானத்திற்கு வருகை தரும் அல்லது அங்கிருந்து வெளியேறும் சந்தர்ப்பத்திலோ அவரைச் சுடுவதற்கு சந்தேக நபர்கள் திட்டமிட்டிருக்கலாம் என்கின்றனர் விசாரணையாளர்கள். எனினும் ஒபாமாவுக்கு அளிக்கப்பட்டுள்ள கடும் பாதுகாப்பைக் கருத்தில்கொள்ளும் போது இது இடம் பெற்றிருக்க வாய்ப்பில்லை என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள கார்டிரெல் குழுவினர் கடும் நிறவெறியர்களாக அல்லது நவநாஜிகளாக இருக்கலாம் என்பது அதிகாரிகளின் கருத்து.

ஆர்யன் நேஷன் எனப்படும் நவ நாஜி குழுவை சேர்ந்தவர்களாக இவர்கள் இருக்க கூடும் என்றும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஒபாமாவைக் கொல்லும் முயற்சி குறித்த தகவல்கள் அமெரிக்க சமூகத்தில் கடும் அதிர்ச்சி எதனையும் ஏற்படுத்தாதது முக்கியமானது.

''நான் இதனால் அதிர்ச்சியடையவில்லை. மாறாக ஒருவித விரக்தி நிலைக்கு தள்ளப்பட்டேன்'' என தெரிவித்துள்ள ஆய்வாளர் ஒருவர் ''ஜனாதிபதி கொலை செய்யப்படுவது என்பது அமெரிக்க கலாசாரத்தில் ஆழமாக ஊறிவிட்ட விடயமாகவும் அமெரிக்க வரலாற்றின் வழமையான கொடூரகதையாகும் விளங்குகின்றது'' எனத் தெரிவித்தார்.

சிலமாதங்களுக்கு முன்னர் நோபல் பரிசு பெற்ற நாவலாசிரியர் ஒருவரிடம் பராக் ஒபாமாவின் ஆயுட்காலம் குறித்து பேசிக்கொண்டிருந்தபோது அந்த நாவலாசிரியர் ''ஒபாமா நீண்டகாலம் வாழமாட்டார்.

(22ஆம் பக்கம் பார்க்க)

(intel) Core 2 Quad inside
Quad-core. Unmatched.




INTEL® CORE™2 QUAD PROCESSOR தொழில்நுட்பம்
சிறந்த கம்பியூட்டிங் துவங்குவது Intel Inside உடன்.

THE PANORA® E18 - PROBABLY THE FASTEST AROUND!
From Sri Lanka's No.1 Personal Computer Brand

intel Channel Partner Premier Member 2008
Built Right. Your technical experts for Intel-based solutions

PC HOUSE PRIVATE LIMITED
PC HOUSE (PVT) LTD
451, Galle Road, Colombo 3
Email : info@pchouse.lk
Phone : 11 472 42 42
077 302 89 38
077 340 35 88
Fax : 11 472 43 43
URL : www.pchouse.lk

panora®
PC Partner (Pvt) Ltd - 2 50 50 50

Panora® E18 — Rs. 91,750/=
- Intel® Core™2 Quad Processor Q6600
(8M L2 cache 2.4 GHz 1066 MHz FSB 65nm)2
- Intel® G33 Chipset
- 160 GB SATA
- 2 GB DDRII (1GB*2) 667MHz
- DVD Writer
- 15" LCD Monitor
- Panora® Optical Scroll Mouse & Full Size Keyboard
- Genuine Microsoft Windows Vista Starter Edition
- Three Years Warranty



*Available through 36 PC House Branches island-wide

PC HOUSE (PVT) LTD is responsible for and has verified any statements or computer system product specific claims contained herein.

©2008 Intel Corporation. அனைத்து உரிமைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளது. Intel, Centrino, Core Inside, மற்றும் Intel லோகோ அனைத்தும் யு.எஸ். மற்றும் இதர நாடுகளில் இருக்கும் Intel Corporation நிறுவனத்தின்

வடக்கு-கிழக்குப் பிரதேசத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து மீட்கும் மனிதாபிமான நடவடிக்கை தொடர்கின்றது.

எந்தவித எதிர்ப்பும் இன்றிக் கிழக்கைப் படையினர் மீட்டனர். எனினும் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் வடக்கின் கணிசமான பகுதிகள் படையினரால் மீட்கப்பட்டு



# மாரிமழையுடன் அவலம் உச்சநிலையில்

வருகின்றன.

மன்னாரில், வெலிஓயாவில் ஆரம்பமான நடவடிக்கை இப்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தொடர்கின்றது.

கடந்த 18 மாதங்களுக்கு மேலாக தொடரும் இந்த நடவடிக்கை காலக்கெடு எதுவும் விதிக்காத நிலையில் முன்னெடுக்கப்படுகின்றது.

கிழக்கை முழுக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது போன்று வடக்கையும் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் வரை இராணுவ நடவடிக்கை தொடரும் என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

"சில வெளிநாடுகளும், சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் செயற்படும் சில அரசசார்பற்ற நிறுவனங்களும் போர்நிறுத்தம் ஒன்றைச் செய்யுமாறு எமது அரசாங்கத்திடம் கேட்டு வருகின்றன.

ஆனால் அரசு அதற்கு எந்த வகையிலும் ஒருபோதும் மசியப்போவதில்லை.

எந்தத் தரப்பில் இருந்து எவ்வித எதிர்ப்பு வந்தாலும் கூட, வடக்கை மீட்டு எடுப்பதற்காக அரசு நடத்தி வரும் படைநடவடிக்கையை நாம் நிறுத்தப் போவதில்லை."

இப்படிப் பிரதமர் ரட்ணசிறி கூறியுள்ளார்.

பிரதமரின் கருத்துப்படி, வடக்கை மீட்கும் நடவடிக்கை தொடரப் போகின்றது. வன்னியை முழுமையாகக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்த பின்பே அங்கு அமைதி ஏற்படும் என்கின்றது அரசுத்தரப்பு.

வன்னி மீட்புப் போர் உச்சக்கட்டத்தை அடைந்துள்ள நிலையில், இடம்பெயர்ந்த மக்களின் அவலம் சொல்லில் அடங்காத நிலையில் அதிகரித்துக் கொண்டு போகின்றது.

கிடுகுகள், தறப்பாள் ஆகியவற்றைக் கொண்டு அமைக்கப்பட்ட சிறு சிறு கொட்டில்களில் மக்கள் தமது அவல வாழ்க்கையைத் தொடர்கிறார்கள்.

மாரி மழை பெய்யத் தொடங்கி விட்டது. தமது சின்னஞ்சிறிசுகளுடன் மரங்களுக்கு கீழும், சிறு கொட்டில்களுக்குக் கீழும் ஒதுங்கி வாழ்க்கையை ஓட்டுகிறார்கள் அந்த மக்கள்.

ஒரு பக்கம், ஷெல் மற்றும் விமானத் தாக்குதல் அச்சம், மறுபுறம் காட்டுப் பகுதியில் வாழும் விஷஜந்துகளின் அச்சுறுத்தல்.

உயிரைக் கையில் பிடித்தபடி நாடோடிகளாக அலைகிறார்கள் அந்த மக்கள்.

அங்குள்ள அரச அதிகாரிகளும் தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகளும் இன்னல்படும் மக்களுக்கு அபயக்கரம் நீட்டுகிறார்கள். அவர்கள் வழங்கும் உதவிகளைக் கொண்டு தமது அவல வாழ்க்கையைத் தொடர்கிறார்கள் அந்த மக்கள்.

சொந்த வீடுகளை, உடைமைகளை விட்டு, தமது வயல்களை விட்டு ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கு விடிவுகிட்டுமா என்ற ஏக்கமே விஞ்சி நிற்கிறது.

இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட மக்களை தங்க வைக்க வவுனியாவில் விசேட முகாம்கள் அமைக்கப் போவதாக அரசுத்தரப்பில் இருந்து அறிவிப்பு வருகின்றது.

வவுனியாவுக்குச் செல்லுமாறு கோரி துண்டுப்பிரசுரங்களை ஹெலிகள் மூலம் வன்னியில் படையினர் போட்டுள்ளார்கள்.

வன்னி மக்களை வவுனியாவுக்கு வரவழைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நடவடிக்கை குறித்து ஒரு சில நாள்களில் அறிவிக்கப்படும். அந்த மக்கள் எந்தப் பாதையால் வர வேண்டும், எப்படி வரவேண்டும் என் பன போன்ற அறிவிப்புக்கள் வெளியிடப் படும் என்று மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரசிங்க அறிவித்துள்ளார்.

## வன்னி மக்களுக்கு வவுனியாவில் முகாம் அரசு முன்வைக்கும் திட்டம்

அரசின் அறிவிப்பு வந்து ஒருவாரமாகியும் வவுனியாவுக்கு எவரும் வரவில்லை என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

"முன்னர் வவுனியாவை அண்டிய கிராமங்களில் இருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் வவுனியாவுக்கு அழைக்கப்பட்டு அங்கு முகாம் அமைத்து தங்க வைக்கப்பட்டனர். அவர்கள் இன்னமும் அந்த முகாம்களிலேயே தங்கியுள்ளனர். அந்த நிலை எமக்கு ஏற்படக்கூடாது. நாங்கள் அங்கு செல்ல விரும்பவில்லை" எனக் கிளிநொச்சியில் உள்ள அகதிகள் அரச அதிகாரிகளுக்கும் தொண்டர் அமைப்புப் பிரதிநிதிகளுக் கும் எடுத்துக் கூறியுள்ளனர் என்று தகவல்கள் கசிந்துள்ளன.

இந்நிலையில், ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ள உடனடியாகச் சகலரையும் பதுங்கு குழிகளை அமைக்குமாறு விடுதலைப்புலிகளின் அரசியற்துறை பொது மக்களிடம் கேட்டுள்ளது.

பொதுமக்கள் பதுங்கு குழிகளை அமைத்து அங்கேயே தங்கப் போகிறார்கள். அவர்கள் வவுனியாவுக்கு வர விரும்புகிறார் கள் இல்லை என்று கூறப்படுகின்றது.

கிளிநொச்சியை மீட்கும் போர் உச்ச மடையும் நிலையில் மக்கள் தங்களைத் தாங்களே பாதுகாக்கும் உத்திகளைக் கைக்கொள்வர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

உச்சமடையும் போர் மக்களை வாட்டிவதைக்கப் போகின்றது. அவர்கள் நிம் மதிப் பெருமூச்சுடன் எப்போது வாழ்வது என்ற ஏக்கத்துடன் காலத்தைக் கழிக்கிறார்கள்.

வன்னியில் மழைகாலம் ஆரம்பித்து விட்டது. களமுனையில் மாற்றம் வரும் என்று ஊகம் வெளியிடுகிறார்கள் நோக்கர்கள்.

அகலக்கால் வைத்து முன்னேறிவரும் படையினருக்குப் பதில் அடிகொடுப்போம் என விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் பா.நடேசன் கூறுகின்றார்.

களமுனைத் தளபதிகளும் இதே கருத்தை வெளியிட்டுள்ளனர்.

மாங்குளம் ஊடாக ஒட்டிசுட்டான் வரை முன்னேறி நிலை கொண்டிருந்த படையினரை ஒரு வாரத்துக்குள் விரட்டிய வரலாற்றைக் கொண்டது விடுதலைப் புலிகள் அமைப்பு எனத் தளபதிகள் கூறுகின்றனர்.

"இப்போது நாங்கள் முன் நகர்வைத் தடுக்கும் தந்திரோபாயத்தைத்தான் கைக்கொள்கிறோம். எமது பதிலடி ஆரம்பிக்கும் போதுதான் எங்கள் பலம் அரசுப்படைக்குப் புரியும்" என்று தளபதிகளில் ஒருவரான கேணல் தீபன் குளுரைத்துள்ளார்.

### யாழவன்


விடுதலைப் புலிகளின் தளபதிகளின் கருத்துக்களை உற்றுநோக்கும்போது, இனித்தான் வன்னிக்களம் சூடுபிடிக்கப் போகின்றதா என ஊகிக்க வேண்டியுள்ளது.

மாரி மழையுடன் அதிரப்போகும் வன்னிக்களம் என்ன கூறப் போகின்றது என்பதை அவதானித்துக் காத்திருப்போம் என்று கூறுகிறார்கள் நோக்கர்கள்.

அதிரடிகள், தற்கொலைத் தாக்குதல் என வன்னிக்களம் வெடிக்கப் போகின்றது என்று எதிர்வு கூறப்படுகின்றது.

***

# தாட்சருக்கு மறதி நோய்



பிரிட்டனின் இரும்புப் பெண்மணி என்று போற்றப்பட்ட, முன்னாள் பிரதமர் மார்க்ரெட் தாட்சருக்கு (82 வயது) மறதி நோய் அதிகரித்துள்ளது. பழைய சம்பவங்கள் எல்லாவற்றையும் அவர் மறந்து விட்டார். தான் பிரதமராக இருந்தோம் என்பதையே மறந்து விட்டார்.

மகள் கரோல் தாட்சர் சமீபத்தில் ஒரு புத்தகம் எழுதியுள்ளார். அதில் மறதி நோய்க்கு ஆட்பட்டு அவஸ்தைப்படும் தனது தாயார் தாட்சர் பற்றி அவர் குறிப்பிட்டுள்ளார்.

தாட்சருக்கு கடந்த 2000இல் தான் இந்த நோய் ஆரம்பமானது. முன்னாள் யூகோஸ்லாவியாவின் பொஸ்னியாவில் போர் நடந்ததை பற்றி தாட்சர் ஒரு சமயம் குறிப்பிடுகையில், "போக்லாந்தில் போர் உச்சக்கட்டத்தை அடைந்து வெற்றிபெற்று மக்களைக் காப்பாற்றினோம்" என்றார். போக்லாந்து போருக்கும் பொஸ்னியா போருக்கும் வித்தியாசம் தெரியாமல் அப்போது தாட்சர் பேசியது மருத்துவ நிபுணர்களுக்கு அதிர்ச்சியை தந்தது.

"இப்போது எனது தாயார் தாட்சரை மறதிநோய் மிகவும் மோசமாகத் தாக்கியுள்ளது. மறதி நோய் இருப்பது மட்டுமன்றி, அவர் சம்பந்தம் இல்லாமல் உளறுவதும் அதிகரித்துவிட்டது. அவருக்கு தான் யார் என்பது 90 சதவீதம் மறந்துவிட்டது. அவரால் எதையும் நினைவுகூர முடியவில்லை" என்று வருத்தத்துடன் மகள் கரோல் தன் புத்தகத்தில் எழுதியுள்ளார். தாட்சர் உடல்நிலை குறித்து இதுவரை தகவல் எதுவும் வெளிவரவில்லை. அவர் மகள் கரோல் சொல்லித்தான் தாட்சர் உடல்நிலை பற்றி முதன்முறையாக வெளி உலகுக்கு தெரியவந்துள்ளது. *

# வாளேந்திய...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனிதாபிமான அமைப்புகளும், மனித உரிமை ஆர்வலர்களும் வன்னி மக்கள் மீதான விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலை நிறுத்தும்படி பல தடவைகள் கோரிக்கைகள் விடுத்தபடியேயுள்ளன. ஆனாலும் இக்கோரிக்கைகள் எவையும் தன் காதில் விழாதது போலவே அரசு நடந்துகொள் கின்றது. ஆகக் குறைந்தது வன்னி மக்கள் நிம்மதியாகத் தூங்குவதற்காக இரவுநேரங்களில் மட்டுமாவது விமானக் குண்டு வீச்சை நிறுத்தும்படி இப்போது அரசாங்கத்தை வடக்கு, கிழக்கு மனித உரிமைகள் செயலகம் கேட்டிருக்கின்றது. இதற்கும் அரசாங்கம் செவிசாய்க்கப் போவதில்லை. மாறாக விமானக் குண்டு வீச்சை இன்னும் தீவிரப்படுத்தி, வெடி வைத்து மீன்பிடிக்கும் பாணியில் மக்களைத் தன்பிடிக்குள் கொண்டு வரும் பிரயத்தனங்களிலேயே அரசு தன்னுடைய கவனத்தைச் செலவிடப் போகின்றது. ஆனாலும் கடல் மீனுக்குச் சாத்தியப்படும் வெடி வைத்துப் பிடிக்கும் ஒரு முறைமையினை எழுச்சி கொண்ட மக்கள் கூட்டத் தின் மீது பிரயோகித்தால் அது எந்தளவு தூரம் சாதகமான அம்சங்களைத் தோற்று விக்கும் என்பதே இப்போது எழுகின்ற வினாவாகும். இலங்கைத் தேசியக் கொடியில் உள்ள சிங்கத்தைப் போன்று கையில் வாளேந்தியபடி - அதுவும் இரத்தம் வழிந்து கொண்டிருக்கும் நிலையில் - மக்களை வர வேற்கும் அரசின் திட்டம் எதிர்பார்த்ததை விடவும் எதிர்மாறான விளைவுகளையே தோற்றுவிக்கப் போகின்றது. *

# வன்னியில் புதுத் திருப்பம்!

வன்னிச் சமர் முனையில் பெரும் எதிர்ப்பு ஏதுமின்றி வீறுநடை போட்டு முன்னேறின எனக் கூறப்படும் அரசபடைகளுக்கு இந்த மாதத்தின் ஆரம்பத்துடன் தான் வினை ஆரம்பித்திருக்கின்றது போலும்.

வன்னியின் மேற்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் பரந்த படை நகர்வை வேகமாக முன்கொண்டு சென்ற இராணுவத் தரப்புக்கு இப்போது தான் - தேருக்குக் கட்டை போடுவது போல - முதல் தடவையாக முட்டுக்கட்டை ஆணித்தரமாகப் போடப்பட்டிருக்கின்றது.

வி.சிவராம்

விடுதலைப் புலிகள் மீது பெரும் எதிர் யுத்தம் ஒன்றை கடந்த ஆண்டு மாவிலாறு தாக்குதலோடு அரசுத் தரப்பு ஆரம்பித்துவிட்டது. ஆனாலும் பெரும் யுத்தத்தை எங்கு, எப்போது சந்தித்து, ஆரம்பிப்பது என்ற நிகழ்ச்சி நிரலை அரசுப் படைகளுக்கு அளிக்காமல் புலிகள் தாங்களே தீர்மானிப்பார்கள், தங்கள் எண்ணத்துக்கு ஏற்பவே வகுப்பார்கள் என்று பல இராணுவ ஆய்வாளர்களும் கூறிவந்தனர். அதன்படி, யுத்தத்துக்கான தமது நிகழ்ச்சி நிரலைப் புலிகள் இப்போது தீர்மானித்துச் செயற்படுத்தத் தொடங்கிவிட்டார்கள் என்றே தோன்றுகின்றது.

இம்மாத (செப்டெம்பர்) ஆரம்பத்தோடு வன்னி யுத்த முனையில் தங்கள் கைவரிசையைப் புலிகள் காட்டத் தொடங்கியிருப்பது அதைத்தான் உணர்த்தி நிற்கின்றது.

வன்னிப் பிரதேசத்தின் மேற்குக் கரையோரமாக - ஏ32 பாதை வழியாக - பூநகரி, சங்குப்பிட்டி, கேரதீவு ஊடாக - யாழ்.குடாநாட்டுக்கு ஒரு பாதை திறப்பதையும் -

வன்னியில் மேற்குப் புற பிரதேசங்களை ஆக்கிரமித்துக் கபளீகரம் செய்வதன் மூலம் கிழக்கு வன்னிக்குள் புலிகளை மடக்கி, நெருக்கி, முற்றுகைக்குள் ஆழ்த்தி சுற்றிவளைப்பதையும் -

தனது திட்டங்களாகக் கொண்டு வன்னி மேற்கு அரங்கில் பெரும் - பாரிய - படை நடவடிக்கையை அரசுப் படைகள் ஆரம்பித்துள்ளன என்பது வெளிப்படையான விடயம்.

1990களின் கடைசியில் யாழ்.குடாநாட்டுக்கு, புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசம் ஊடாக - ஏ9 வீதி வழியே - ஒரு தரைவழிப் பாதையைத் திறக்கும் நோக்குடன் பதினெட்டு மாதகாலமாகத் தான் மேற்கொண்ட 'ஜெயசிக்குறு' நடவடிக்கை மூலம் தான் கைப்பற்றிய பிரதேசங்களில் கணிசமான பகுதியை பின்னர் புலிகளின் பதினெட்டு மணி நேரத் தாக்குதல் நடவடிக்கையில் பறிகொடுத்த முன் அனுபவம் படைத் தரப்புக்கு உண்டு.

அது - எதிரியின் ஆதிக்கப்பகுதிக்குள் ஒடுங்கிய, குறுகலான, அதேசமயம் நீண்ட வடிவில் பிரதேசங்களைக் கைப்பற்றி முன்னேறியதால் வந்த வினை என்ற பட்டறிவு அரசுப் படைகளுக்கு இல்லாமல் இல்லை.

இதனால் இப்போது, வன்னியின் மேற்குப் புறத்தில் தனது முன்நகர்வை பரந்து, விரித்து, அகலமாக மேற்கொள்கிறது இராணுவம்.

அரசுப்படைகள் தரப்பில் இப்போது இரண்டு டிவிஷன் அணிகள் மேற்கு வன்னியில் புலிகளின் பிரதேசங்களை நோக்கி நகர்வை முன்னெடுக்கின்றன.

மேற்குக் கரை மற்றும் நடுப் பிரதேசங்களை அண்டி அடம்பன், விடத்தல் தீவு, இலுப்பைக் கடவை, வெள்ளாங்குளம், முழங்காவில் என்ற முன்நகர்வை 58 ஆவது படையணி அதன் பொதுக் கட்டளைத் தளபதி (ஜி.ஓ.ஸி.) பிரிகேடியர் சவீந்திர டி சில்வாவின் வழிகாட்டுதலில் முன்னெடுக்கின்றது. அந்த அணி அக்கராயன் வரை சென்று, அங்கு 57 அவது டிவிஷன் படையணியுடன் கைகோத்து நிற்கிறது.

அதேசமயம், மேற்கு வன்னியின் நடுமையப் பகுதியில் மடு, பாலம்பிட்டி, மூன்று முறிப்பு, பெரியமடு, நாட்டாங்கண்டல், கல்விளான், துணுக்காய், மல்லாவி, அக்கராயன் என்று முன்னேறிய 57ஆவது படையணிக்கு தளபதியாக ஜகத் டயஸ் செயற்படுகின்றார்.

இந்த இரு படையணிகளுக்கும் இதுவரை கிட்டிவந்த தொடர்வெற்றிகள் இந்த மாத ஆரம்பத்துடன் பெரும் சரிவு காட்டியிருப்பதுதான் - அவை, எதிர்பாராத வகையில் பெரும் அளவில் வாங்கிக் கட்டியிருப்பதுதான் - இப்போது புதிய திருப்பம் ஆகும்.

இதுவரை, படையினரின் முன்நகர்வுகளுக்கு இடமளித்து பின்வாங்கி வந்த புலிகள் தமது காவலரண்களை வன்னியின் மேற்குக் கடற்கரையான நாச்சிக்குடாவிலிருந்து கிழக்கு நோக்கி முழங்காவில்,



நாகபடுவான், வன்னேரி, அக்கராயன்குளம் என்று 'ஏ9' வீதிவரை கிழக்கு - மேற்காக அமைத்திருந்தனர்.

கிழக்குக் கரையோரத்தை அண்டி நாச்சிக்குடாவில் புலிகளின் காவலரணை உடைத்து முன்னேறி அதைக் கைப்பற்றுவதும் -

மறுபுறத்தில், வன்னேரிக்குளம், அக்கராயன்குளப் பகுதிகளில் புலிகளின் முன்னணி அரண்களை உடைத்து முன்னேறுவதும் -

என இரு முனைத்திட்டத்தைக் கடந்த முதலாம் திகதி ஆரம்பித்த படைத்தரப்புக்கு அந்த எத்தனத்தில் பலத்த அடி வீழ்ந்திருப்பது வெளிப்படையாகத் தெரியவந்திருக்கின்றது.

லெப்டினன்ட் கேணல் வெலிகல தலைமையிலான 4ஆவது சிங்க றெஜிமெண்ட், லெப்டினன்ட் கேணல் சேனக விஜயசூரிய தலைமையிலான 11ஆவது இலகு காலாட் படையணி, லெப்டினன்ட் கேணல் கமால் பின்னவல தலைமையிலான 6ஆவது கெமுனு வோச் ஆகிய படையணிகளே அக்கராயன்குளம், வன்னேரிக்குளம் இடையில் தாம் மேற்கொண்ட முன்நகர்வு முயற்சிகளின் போது வாங்கிக் கட்டியிருக்கின்றன.

58 ஆவது டிவிஷனின் கீழ்வரும் இவற்றில் சுமார் இருபது கிலோ மீற்றர் நீண்ட பிரதேசத்தில் முன்நகர முயன்ற 11வது இலகுக் காலாட்படை அணியும், 6ஆவது கெமுனு வோச் அணியும் புலிகளின் கடும் எதிர்ப்புக் காரணமாக நேரத்துடனேயே ஜாகா வாங்கிவிட்டதால் அதிகம் தப்பிப் பிழைத்தன.

ஆனால், அக்கராயன்குளத்தில் விடாது முன்நகர்வுக்கு முயற்சித்த நான்காவது சிங்கப்படையணிக்கு சேதத்திலும் சேதம். உயிரிழந்த படையினரின் சடலங்களையும் பெருமளவு ஆயுத தளபாடங்களையும் கைவிட்டு 'தலை தப்பினால் தம்பிரான் புண்ணியம்' என்று ஓடித்தப்பி பின்வாங்க வேண்டிய கட்டத்துக்கு அந்தப் படையணி புலிகளின் தாக்குதலில் சிதறடிக்கப்பட்டுவிட்டது.

இதேசமயம், நாச்சிக்குடா கடற்கரையிலிருந்து நாகபடுவான் வரையான பத்துக் கிலோமீற்றர் தூரத்தில் புலிகளின் முன்னரங்கை உடைத்து முன்னேற முயன்ற 58ஆவது படையணியின் பிரிவுகளுக்கும் செமத்தியாகப் பதிலடி வீழ்ந்திருக்கின்றது.

அதேவேளை, 57 ஆவ்து டிவிஷனின் கீழ் வருகின்ற - லெப்டினன்ட் கேணல் பிரதாப் திலகரட்ண தலைமையிலான - 573 ஆவது பிரிகேட்டின் சில அணிகள் மல்லாவியில் குறிப்பிடத்தக்க முன்நகர்வை மேற்கொண்டன என்றும் களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த பிரிக்கேட்டின் கீழ் லெப்டினன்ட் கேணல் கீத்சிறி லியனகேயின் வழிகாட்டலில் 7 ஆவது சிங்க றெஜிமெண்ட்டும், மேஜர் சஞ்சீவ் பொன்னாண்டோ தலைமை யில் மூன்றாவது கஜபா றெஜிமெண்ட்டும் மற்றும் ஒன்பதாவது விஜேபா இலகு காலாட்படை றெஜிமெண்ட்டும் மல்லாவியைப் சுற்றிச் சூழ்ந்திருக்கின்றன என்றும் கூறப்படுகின்றது.

கடந்த முதலாம், இரண்டாம் திகதிகளில் இடம்பெற்ற இந்தச் சமர்களில் - குறிப்பாக நாச்சிக்குடா மற்றும் வன்னேரிக்குளம் - அக்கராயன் குளம் ஆகியவற்றுக்கு இடைப்பட்ட பிரதேசங்களில் நிகழ்ந்த கடும்மோதல்களில் - குறைந்த பட்சம் எட்டு டசின் படையினர் உயிரிழந்திருக்கின்றனர் என்ற தகவலைக் கொழும்பில் உள்ள மேற்குலக தூதரகங்கள் உறுதிசெய்திருக்கின்றன. பல அதிகாரிகள் உட்பட நூற்றியைம்பதுக்கும் மேற்பட்ட படையினர் படுகாயமடைந்து யுத்த முனையிலிருந்து நிரந்தரமாக அல்லது நீண்டகாலத்துக்கு அகற்றப்படும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

இவர்கள் தவிர, முதலாம் திகதி யுத்தத்தில் உயிரிழந்த படையினரின் 29 சடலங்களைப் புலிகள் கைப்பற்றி செஞ்சிலுவைச் சர்வதேச குழு ஊடாக அரசுத் தரப்புக்கு அனுப்பி வைத்திருக்கின்றார்கள்.

வன்னி யுத்தகளத்தில் ஒரு புதிய திருப் பம் ஏற்பட்டிருப்பது எல்லோராலும் உணரப் பட்டிருந்தாலும் தென்னிலங்கை ஊடகங்கள் அதனைப் பிரதிபலிப்பவையாக இல்லை. வழமைபோல பாதுகாப்புத் தரப்பினரின் அறிக்கைகளை பிரதிபண்ணி, ஒரு தரப்புத் தகவல்களை மட்டும் முன்னிலைப்படுத்தும் போக்கே தொடர்கின்றது.

தென்னிலங்கை ஊடகங்களின் இப் போக்கு அவற்றுக்கு, விடயங்கள் தெரியாதமையால் வந்த விவகாரம் அல்ல. தெரிந்தவற்றை வெளிப்படுத்தப்போய் வினையாகி விடக்கூடாதே என்ற விவகாரம் புரிந்ததால் வந்த போக்கு .

கொழும்பு நிர்வாகம் எதிர்பார்ப்பது போல ஆங்கில, சிங்கள ஊடகங்கள் போரில் அரசுத் தரப்பின் பின்னடைவுகளை 'அமுக்கியே' வாசிக்கின்றன.

அதனால், செப்டம்பர் முதலாம் திகதியுடன் ஆரம்பித்த 'புதுத்திருப்பம்' தெற்கில் இன்னும் உணரப்படாமலேயே இருக்கின்றது. போகப்போக அது புரிய - உறைப்பாக உணரப்பட - தொடங்கும் என்று எதிர்பார்க்கலாம். ✱

## அரச படைகளின் தாக்குதலுக்கு பாக். தயாரிப்பு ஆயுதங்கள்



பாக். தயாரிப்பான - 'பக்தார் ஷிக்ஹான்' தாக்குதல் ஆயுதம்

இலங்கை யுத்தகளத்தில் டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளாக இவ்வளவு காலமும் பயன்படுத்தப்பட்டு வந்த 'லோ' என்ற ஆயுதத்துக்குப் பதிலாகத் தற்போதைய சமரில் முதன்முறையாக - பாகிஸ்தான் தயாரிப்பான - 'பக்தார் ஷிக்ஹான்' எனப்படும் புதியரக டாங்கி எதிர்ப்பு ஏவுகணை அரச படைகளினால் பயன்படுத்தப்படுகின்றது என்று இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

மூன்றாவது தலைமுறை ஆயுத வரிசையைச் சேர்ந்த 'லோ'வின் பயன்பாடும் பெறுபேறும் அதனை இயக்குபவரின் செயற்திறனிலேயே அதிகம் தங்கியிருந்தது.

ஆனால், அரசுப்படைகள் தற்போது பயன்படுத்தும் 'பக்தார் ஷிக்ஹான்' எனப்படும் ஏவுகணைக்கு இலக்கிற்கான கட்டளைகளை இலத்திரனியல் முறைமூலம் வழங்கிவிட்டு, அதனை இயங்கவிட்டால் அது தன்பாட்டிலேயே எதிரியின் இலக்கைக் குறிதவறாமல் தாக்கி, துவம்சம் செய்யக்கூடியது என்றும் -

இதன்மூலம் பாரிய பதுங்குகுழிகள், வலிமையான காவலரண்கள் போன்றவற்றையும் இலக்குப் பிசகாது அழித்து ஒழிக்கமுடியும் என்றும் கூறப்படுகின்றது.

தோளில் வைத்தோ அல்லது ஹெலியில் பொருத்தியோ பயன்படுத்தத்தக்க வகையில் இது வடிவமைக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது.

சுடர் ஒளி
செப்.07 - செப்.13, 2008
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன் 0114734401—6
பாக்ஸ் 0114734404
E-mail: editorial@sudaroli.com

# வகுப்புவாதமும் குறுகிய அரசியல் நோக்கமும்

"தமிழர்கள் இந்த நாட்டின் இரண்டாம்தரப் பிரஜைகள். அவர்களது பிரச்சினைக்கு பேச்சுகள் மூலம் தீர்வு காணக்கூடாது. எந்த ஓர் தீர்வும் இலங்கையில் வாழும் சகல இன மக்களுக்கும் ஏற்புடையதாக மாகாண மட்டத்திலோ அல்லது மாவட்ட மட்டத்திலோ மட்டும்தான் அமைய வேண்டும். சமஷ்டி ஆட்சிமுறை வழங்கப்படக் கூடாது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் அனைத்தும் இராணுவ நடவடிக்கை மூலம் மீட்கப்பட்டு புலிகள் முற்றாக ஒழித்துக் கட்டப்பட வேண்டும்."

சிங்களமக்களில் பெரும்பாலானோரின் சிந்தனை இன்று இப்படித்தான் இருக்கிறது.

தமிழ்மக்களின் போராட்டத்தை நசுக்குவதற்காக சிங்கள மக்கள் எந்த ஒரு தியாகத்தையும் செய்ய இன்று தயாராக இருக்கிறார்கள்.

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள ராக்கெட் வேக விலை உயர்வுகள் மற்றும் அடக்குமுறைகள், அராஜகங்கள் எல்லாம் இந்த இனவாதச் சிந்தனைக்கு முன்னால் தூசாகிவிட்டன.

சமீபத்தில் இடம்பெற்ற இரு மாகாண சபைத் தேர்தல்களிலும் மஹிந்த அரசு ஈட்டிய வெற்றிகள் இதற்கு நல்ல சான்று ஆகும்.

தமிழ்மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்று கோரிய எந்த ஒரு கட்சியாவது தென்னிலங்கையில் ஆட்சி பீடம் ஏறியது கிடையாது.

தமிழ்மக்களும் சிங்கள மக்களும் சம உரிமைகளுடன் வாழ வேண்டும் என்று கூறிய கட்சிகள் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறத் தவறியதை வரலாறு காட்டும்.

1956 இல் தனிச் சிங்களச் சட்டத்தை பண்டாரநாயக்கா கொண்டு வந்தபோது ஐ.தே.க.வும் சம அந்தஸ்து கொள்கையைக் கைவிட்டது. நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்தே தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து கோரி வந்த லங்கா சம சமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி போன்ற இடதுசாரிக் கட்சிகள் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறமுடியாத நிலையில் தமது கொள்கையைக் கைவிட்டதுடன் 1970 இல் சிறிமாவோ தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசிலும் இணைந்து கொண்டன. தமிழ்மக்களை இந்த நாட்டில் இரண்டாம் தரப் பிரஜைகளாக்கிய 1972 அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவரே லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்களில் ஒருவரான கொல்வின் ஆர்.டி. சில்வாதான். 1956 இல் பண்டாரநாயக்கா தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்த போது 'ஒரு மொழி இரு நாடுகள்; இரு மொழிகள் ஒரு நாடு' என்று கூறினவர்தான் இந்த கொல்வின் ஆர்.டி. சில்வா.

இப்படியாக தென்னிலங்கையின் வகுப்புவாதச் சிந்தனைக்கு ஏற்ப குறுகிய அரசியல் நோக்கங்களுடன் கட்சிகள் செயற்படுவது கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக இடம்பெற்று வருகிறது.

ஒஸ்லோ பிரகடனத்தில் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி ஆட்சி முறையை ஒரு தீர்வாக பரிசீலனை செய்வதற்கு ஐ.தே.க. இணங்கியது. ஆனால், கடந்தவருடம், இனப்பிரச்சினைக்கு சமஷ்டி ஆட்சிமூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்று தான் ஒருபோதும் தெரிவிக்கவில்லை என்று அது பகிரங்கமாக அறிக்கை விட்டது.

அரசின் தற்போதைய இராணுவ நடவடிக்கை குறித்து மௌனமாக இருந்த ஐ.தே.கட்சி தற்பொழுது ஆதரவு தெரிவிக்கும் நிலைக்குள் தள்ளப்பட்டு வருகிறது. சிறிகோத்தாவில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஐ.தே.க.வின் அரசியல் விவகாரக்குழுக் கூட்டத்தில ரணில் விக்கிரமசிங்க பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதற்கு ஐ.தே.க. முழு ஆதரவு தரும் என்று அறிவித்துள்ளார். இதன் கருத்து புலிகளுக்கு எதிரான தற்போதைய யுத்தத்தில் படையினருக்கு ஆதரவு அளிப்பது என்பது தான். அத்துடன், இனப்பிரச்சினைக்கு இலங்கையில் உள்ள சகல சமூகங்களுக்கும் ஏற்புடைய அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்றும் ரணில் தெரிவித்திருக்கிறார். இதனைத்தான் மஹிந்த சிந்தனையும் தெரிவிக்கிறது.

ஐ.தே.க.வுக்குள் இனவாதிகளின் கை ஓங்கி வருவதும் ரணிலின் தலைமைக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதுமே இதற்குக் காரணம் என்பதில் சந்தேகம் இல்லை.

ஆகவே, தென்னிலங்கைக் கட்சிகள் அனைத்துமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான். இந்தக் கட்சிகளை தமிழ்மக்கள் நம்புவதால் எதுவித பயனும் ஏற்படப்போவதில்லை.

# இலங்கை விவகாரத்தில் கையாலாகாத இந்தியா!

இலங்கை விவகாரத்தில் இரண்டும் கெட்டான் நிலையில் இழுபடுகின்றது இந்தியா.

ஒருபுறம் தனது நிரந்தர எதிரியாகப் புதுடில்லி கருதும் புலிகள் அமைப்பு. மறுபுறம் தனக்கே 'கயிறு கொடுத்து' தன்னை மீறி



எம்.கே.நாராயணன்

நடக்கும் கொழும்பு. இவற்றுக்கு நடுவில் இலங்கை விவகாரம் குறித்துத் தீர்க்கமாக முடிவெடுக்கமுடியாமல் தடுமாறுகிறது புதுடில்லித் தலைமை.

அமைதித் தீர்வு, அதிகாரப் பரவலாக்கம் பற்றியெல்லாம் இந்தியா அதிகப் பிரசங்கித்தனமாகக் கொழும்புக்கு பெரிய 'உபதேசங்களை' செய்தாலும் அவற்றைக் கொழும்பு ஒரு காதால் வாங்கி மறு காதால் வெளியே விட்டுவிட்டு, தன்பாட்டுக்குத் தனது போர்

**ஆதிரடி ரங்கு**

வெறித் தீவிர நிகழ்ச்சி நிரல் திட்டத்தைக் கனகச்சிதமாக நகர்த்திச் செல்கின்றது என்பது, அப்பட்டமாக - வெளிப்படையாக - தெரிகின்றது.

ஆனால், இந்தப் பிராந்தியத்தின் வல்லாதிக்க சக்தி என்று தன்னைக் கருதிக்கொள்ளும் இந்திய உபகண்டமே, தனது தென் மூலைக் கோடியில் இருக்கும் 'இந்த ஞாண்டு' நாடான இலங்கையின் இந்த விட்டேத்தியான போக்கைச் சரிபண்ணி, அதைத் தனது வழிக்குக் கொண்டுவர வழிதெரியாது தடுமாறுகின்றது.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் கையாலாகாத்தனத்துக்கு - செயற்றிறனின்மைக்கு - இலங்கை தொடர்பாக புதுடில்லி அரசியல் தலைமையிடம் திட்டவட்டமான, தெளிவான, பக்கச்சார்பு பற்றிய முடிவுடைய ஒருகொள்கை நிலைப்பாடு இல்லாமையே பிரதான காரணமாகும்.

பிரதமர் இந்திராகாந்தி, பிரதமர் ராஜீவ் காந்தி போன்று அரசியல் முடிவுகள் எடுக்கும் அதிகாரத் தைரியம் தற்போதைய பிரதமர் மன்மோகன் சிங்கிடம் இல்லை. அதே சமயம் புதுடில்லியில் மறைமுகமாக அதிகாரத்தைக் கையாளும் சோனியாகாந்தியிடம், இலங்கை விவகாரம் குறித்து வெளிப்படையாகப் பேசி, ஒரு வழிகாட்டுதலைப் பெற்று, அதனடிப்படையில் தன்னும் இலங்கை விடயத்தில் ஒரு கொள்கையை வகுத்துச் செயற்படும் துணிச்சல் சிந்தனை புதுடில்லி அதிகார வர்க்கத்திடமும் இல்லை.

இலங்கை விவகாரத்தால் தனது கணவர் ராஜீவ்காந்தியை இழந்து நிற்கும் சோனியாவிடம், இலங்கை விவகாரம் குறித்து நேரடியாகப் பேசும் தைரியம் புதுடில்லியில் உயர் இராஜதந்திர வட்டாரங்களில் யாரிடமுமே கிடையாது என்கின்றனர் மூத்த அதிகாரிகள்.

அதனால், பொதுவாக அயல்நாடு ஒன்றைக் கையாளுவது தொடர்பான சாதாரண விதிமுறைகளை இலங்கை விடயத்திலும் பின்பற்றுவோம் என்ற நிலைமை உயரதிகாரிகளுக்கு.

அதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு புதுடில்லி அதிகாரவர்க்கத்துக்குத் தண்ணி காட்டுகின்றது ராஜபக்ஷ நிர்வாகம்.

இலங்கை விவகாரத்தைப் புதுடில்லி கையாளும் 'சீத்துவத்தை' அறிவதற்கு இப்போது இடம்பெறும் - கட்டவிழும் - சில சம்பவங்களை நாம் நோக்கலாம்.

'சார்க்' மாநாட்டில் பங்குபற்றுவதற்காகக் கொழும்பு வந்திருந்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகளைச் சந்தித்திருந்தார். மேலதிகப் பேச்சுக்காக புதுடில்லிக்கு வருமாறு அவர்களை அழைத்திருந்தார்.

அதன்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகளுக்கு இப்போது புதுடில்லி வருமாறு அழைப்புக் கிடைத்திருப்பதாகத் தெரிகிறது.

ஆனாலும் அந்த அழைப்பு விடயத்திலும் குழப்பநிலைமை.

தனித்து தமிழ்க் கூட்டமைப்புக்குப் புதுடில்லி வருமாறு அழைப்புக் கொடுத்தால், அது கூட்டமைப்பு முழு அளவில் ஆதரித்து நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான அங்கீகாரமாகிவிடுமோ என்ற அச்சம் புதுடில்லி அதிகாரிகளுக்கு.

அதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்ப்புறத்தில் குந்தியிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, 'புளொட்' அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா அணி) தலைவர் ஸ்ரீதரன் (சுகு) ஆகிய முக்கூட்டு அணிக்கும் ஒரே சமயத்தில் புதுடில்லிக்கு அழைப்பு என்கிறது இந்திய அரச நிர்வாகம்.

அதாவது, இரு தரப்புக்கும் சம அந்தஸ்து தகுதி பேணுகிறதாம் புதுடில்லி.

அதன்மூலம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அதன் ஆதரவு சக்தியான விடுதலைப் புலிகளுக்கும் ஈழத்தமிழரின் ஏகப் பிரதிநிதிகள் அவர்கள் அல்லர் என்பதைத் தான் உணர்த்துவதாகத் தனக்குத்தானே கூறி திருப்திப்பட்டுக் கொள்ள முயற்சிக்கிறது புதுடில்லி.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான புதுடில்லியின் அழைப்பில் கூட தெளிவில்லாத நிலைமை நீடிக்கின்றது.

புதுடில்லிக்குப் பேச்சுகளுக்காக வரும்படி தமிழ்க்கூட்டமைப்பினருக்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி அழைப்பு விடுத்திருக்கிறார் என்று தகவல்.

ஆனால், இவ்வாரத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சின் கவனம் முழுவதும் அமெரிக்காவுடனான அணு ஆயுத ஒப்பந்தத்தை ஒப்பேற்றி முடிக்கும் பகீரதப் பிரயத்தனப் பக்




இரா.சம்பந்தன்

கம் திரும்பியிருக்கின்றது. இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சிவசங்கர் மேனன், இதற்காக ஏற்கனவே அமெரிக்காவில் 'டேறா' போட்டு - தங்கிநின்று - காய்களை நகர்த்தி வருகின்றார். இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் வியன்னாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் அலைகிறார்.

புதுடில்லியில் இலங்கை விடயத்தைக் கையாளும் இந்த இரண்டு முக்கிய தலைகளும் புதுடில்லியில் இல்லாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இப்போது புதுடில்லிக்குப் போய் பெரிதாக என்ன வெட்டி வீழ்த்தப் போகிறார்கள் - என்ன செய்யமுடியும் - என்று புதுடில்லி அதிகாரமட்டத்தினரே கேள்வி எழுப்புகின்றனர்.

வன்னிக் களமுனையில் பல பிரதேசங்களை இலங்கை அரசபடைகளிடம் புலிகள்



சிவசங்கர்மேனன்

தொடர்ந்து இழந்து வருகையில் - புலிகளின் இருப்பே கேள்விக்குறியாகி இருக்கையில் - புதுடில்லிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அழைத்தால், புலிகள் சார்பாக அவர்கள் தங்கள் காலில் வந்து விழுவரோ என்ற எதிர்பார்ப்பும் புதுடில்லியின் தற்போதைய அழைப்பில் பொதிந்து கிடந்ததாகச் சில வட்டாரங்கள் கருதுகின்றன.

ஆனால், புலிகள் தமது இராணுவக் காய் நகர்த்தல்கள் தொடர்பான விடயங்களை சர்வதேச சக்திகளுடன் அல்லது இந்தியா போன்ற நாடுகளுடன் நகர்த்துவதற்கான எந்த உரிமையையும், பிரதிநிதித்துவத்தையும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினருக்கோ அல்லது அவர்களை ஒத்த வேறு பிரதிநிதிகளுக்கோ அளிக்கப் போவதில்லை என்பதும் -

வன்னிக் களமுனை நிலைமை குறித்துக் கொழும்பு அரசின் அதீத பிரசார நடவடிக்கைகளின் அடிப்படையில் தான் கணித்த அளவுக்குப் புலிகளுக்கு நிலைமை இன்னும் மோசமடைந்து விடவில்லை என்பதும் -

களநிலைமை இப்போது தலைகீழாக மாறும் ஏது நிலைகளும் தென்படத் தொடங்கியிருக்கின்றன என்பதும் -

புதுடில்லிக்கு இப்போதுதான்-காலம் தாழ்த்தித்தான் - புதிதாகப் புரியத் தொடங்கியிருக்கின்றது.

அதனால் இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை புதுடில்லிக்கு அழைத்துப் பேசினால், களநிலைமை தொடர்பில் வன்னியில் தீவிர படை நடவடிக்கைகளினால் மனிதப் பேரவலம் ஏற்பட்டிருப்பது பற்றிய விடயம் மட்டுமே அதிகம் அவர்களால் பிரஸ்தாபிக்கப்பட வாய்ப்புண்டு என்றும் புதுடில்லி இச்சமயத்தில் கருதுகிறதாம்.

எனவே, இராணுவ வல்லமை நிலைமையில் புலிகள் மேலும் பின்னடைவு காணும் நிலைக்குச் சந்தர்ப்பம் அளிப்பது போல, மேலும் ஓரிரு வாரங்கள் தாமதித்து, கூட்டமைப்பினரைப் புதுடில்லி அழைத்தால், அச்சமயத்திலாவது புதுடில்லித் தலைமையின் காலில் தமிழ்க் கூட்டமைப்பினர் 'விழுந்து கெஞ்சுவது போன்ற' ஒரு களநிலை மாற்றம் வந்திருக்காதா என்று புதுடில்லி வட்டாரங்கள் கூட்டிக் கழித்துக் கணக்குப் போட்டுப் பார்ப்பதாகவும் ஒரு தகவல்.

எது எப்படியென்றாலும், புதுடில்லி அரசியல் அதிகாரக் கைகளில் பெரும் மாற்றம் ஏதும் ஏற்படாத வரையில் மோசமடைந்து வரும் இலங்கை இனப்பிரச்சினைப் போக்கு விவகாரத்தில் திருப்பம் எதையும் இந்தியாவினால் புதிதாகக் கொண்டு வந்துவிடவே முடியாது என்பது உறுதி.

இவ்விடயத்தில், அயலில் பெரும் வல்லாதிக்க நாடாகத் தான் இருப்பதைக் காட்டிக் கொள்வது போல, செய்திகளிடையே வந்து போவதைத் தவிர, இவ்விடயத்தில் இந்தியாவினால் இன்று ஆற்றக்கூடிய பங்குபணி வேறு அதிகம் இல்லை - அப்படிப் பணியாற்றுவதற்கான அரசியல் அதிகாரத் தைரியத்தைப் பிரயோகிக்கத்தக்க தலைவர்கள் எவரும் புதுடில்லியில் இல்லாத காரணத்தால். ✱

# ஒரிசா இந்து - கிறிஸ்தவ கலவரங்கள்; இந்திய ஜனநாயத்தின் பலவீனம்

இந்தியாவின் கிழக்கு மாநிலமான ஒரிசாவில் கிறிஸ்தவர்களுக்கெதிரான கலவரங்கள் மீண்டும் ஒரு முறை முழு நாட்டையும் உலுக்கி எடுத்துள்ளன.

மிகவும் வரண்ட மற்றும் பின்தங்கிய மாநிலமான ஒரிசாவில் பழங்குடியினர் அதிகமாக வாழும் கந்தாமால், கோரபட் ஆகிய மாவட்டங்களில் தான் இது தொடங்கியது.

விஷ்வ இந்து பரிஷத்தின் மாநில தலைவர்களில் ஒருவரான சுவாமி லக்ஸ்மணானந்தா சுட்டுக்கொல்லப்பட்டதை தொடர்ந்து சிறுபான்மை கிறிஸ்தவர்ஹுண்; மீது கட்டுக்கடங்காத வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. சுவாமி லக்ஸ்மணானந்தாவின் கொலைக்கு மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட சாதியினர். உயர்சாதி பிராமண இந்துக்களால் ஒடுக்கப்பட்டதை எதிர்த்து ஆயுதம் ஏந்தியவர்கள். இந்த மாவோயிஸ்ட்கள் கிறிஸ்தவர்களுக்கு சார்பாக இருக்கிறார்கள் என இந்துக்கள் தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

1980 களிலும் 1990 களிலும் பூலான்தேவி போன்ற தாழ்த்தப்பட்ட சாதியினர், இவ்வாறே தம்மை ஒடுக்கிய உயர்சாதியினரைத் தாக்க ஆயுதம் ஏந்தி கொலை, கொள்ளைகளில் ஈடுபட்டிருந்தனர். அவ்வாறே ஒரிசா, மற்றும் பீகார் மாநிலங்களில் அடர்ந்த காட்டுப் பகுதிகளை தளமாகக் கொண்டு மாவோயிஸ்ட்கள் இயங்கிவருகின்றனர். தமிழக - கர்நாடக எல்லையில் ஆதிக்கம் செலுத்திய வீரப்பனும் இவர்களை ஒத்தவனே! ஆனால், வீரப்பன் மற்றும் பூலான்தேவி கூட்டத்தினர் மத உணர்வுகளை பிரதிபலிப்போராக இருக்கவில்லை. மாவோயிஸ்ட்களோ இந்துக்களை குறிவைத்து தாக்குவதால் இந்து அமைப்புகள் பதிலுக்கு கிறிஸ்தவர்களை தாக்கத் தொடங்கி உள்ளன.

2002 இல் குஜராத்தில் ராமபக்தர்கள் சென்ற ரயில் கோத்ராவில் தீயிடப்பட்டதற்கு பழிவாங்குமுகமாக முழு குஜராத்திலும் முஸ்லிம்கள் வேட்டையாடப்பட்டனர். அதையொத்த ஒரு நிலையையே விஷ்வ இந்து பரிஷத் போன்ற அமைப்புகள் ஒரிசாவில் தோற்றுவித்துள்ளன. ஒரிசாவில் அடர்ந்த காடுகளை ஒட்டிய கிராமங்களில் வாழும் பழங்குடியினர் பெரும்பாலும் கிறிஸ்தவர்களாக மாறியுள்ளனர். இவர்களுடன் தாழ்த்தப்பட்ட சாதி இந்துக்களும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவியுள்ளனர். இது குறித்து, இந்து அமைப்புகள் எரிச்சலடைந்திருந்தன. 1999 இல் ஒரிசாவின் மற்றொரு பகுதியில் அவுஸ்திரேலிய கிறிஸ்தவ மிஷனரியான கிரஹாம் ஸ்டெய்ன் அவரது இரு புதல்வர்களுடன் இந்து வெறியர்களால் வாகனத்துடன் வைத்து தீயிட்டு கொளுத்தப்பட்டார். காலத்துக்குக் காலம் இவ்வாறு வெளிக்கிளம்பும் கிறிஸ்தவ விரோத மதவெறி இம்முறையும் இந்துத் தலைவரின் கொலையைக் காரணமாக்கி தனது பூதாகார முகத்தை வெளிக்காட்டியுள்ளது.

குஜராத்தை ஒத்த கலவரங்களே ஒரிசாவிலும் நடைபெறுகின்றன. எனினும், குஜராத் முதல்வர் நரேந்திர மோடியைப் போலன்றி ஒரிசாவின் தற்போதைய முதல்வர் நவின் பட்நாயக் ஒரு மிதவாதி. அவரது அரசு பாரதீய ஜனதாவின் தயவில் பதவியில் இருந்தாலும் முதல்வர் ஒரு மதவெறியர் அல்லர். நல்ல நிர்வாகி எனப் பெயர் எடுத்தவர். 1960களில் இந்தோனேசிய ஜனாதிபதி சுகார்ணோ சர்வாதிகாரி சுகார்டோவினால் பதவியில் இருந்து தூக்கியெறியப்பட்டபோது, நவின் பட்நாயக்கின் தந்தையார் சுகார்ணோவை தனிவிமானத்தில் இந்தியா கொண்டுவந்து காப்பாற்றியவர். அத்தகைய பெருமைக்குரிய அந்த பிஜூபட்நாயக்கின் புதல்வரே நவீன் பட்நாயக். தனது கட்சிக்கும் தந்தையின் நாமத்தையே - பிஜூ ஜனதா தளம் என சூட்டியுள்ளார்.

முதல்வர் விரைந்து செயற்பட்டு கலகம் அடக்கும் துருப்புகளை அப்பிரதேசத்துக்கு அனுப்பியபோதும் கலகக்கார இந்து அமைப்புகள் வீதிகளின் குறுக்கே பெரிய மரங்களை வெட்டி வீழ்த்தி தடை ஏற்படுத்தியுள்ளன. இதனால், மத்திய







அரசு அனுப்பிய படைகளும் கலகப் பிரதேசத்தை அடையமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ ஆலயங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ குடும்பங்கள் காடுகளில் தஞ்சமடைந்துள்ளன. கிறிஸ்தவர்கள் மீது வன்மம் சாதிக்க காத்திருந்த இந்துவெறியர்கள் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக்

### பக்கத்து வீடு

கொண்டமை தெளிவாகத் தெரிகிறது.

குஜராத்தில் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது, அவர்கள் பாகிஸ்தான் ஆதரவாளர்கள் எனக் கூறியே தாக்குதல் நடத்தப்பட்டது. இப்போது கிறிஸ்தவர்களை தாக்கும்போது, பாரதீய ஜனதாவும் விஷ்வ இந்து பரிஷத்தும் கிறிஸ்தவர்களை எந்த நாட்டின் ஆதரவாளர்களாக முத்திரை குத்தப்போகின்றன என்ற கேள்விக்கு விடை இல்லை. இதிலிருந்து தெளிவாகும் உண்மை என்னவெனில், இந்த இந்துவெறி அமைப்புகள் சிறுபான்மை மதங்களுடன் சகவாழ்வு வாழும் சகிப்புத் தன்மை அற்றவை என்பதே! முஸ்லிம்களை தாக்கும் போதெல்லாம் "அவர்கள் காஷ்மீரில் தனிநாடு கோருகிறார்கள்; இந்தியாவின் நகரங்களில் குண்டு வைக்கிறார்கள்" என விஷ்வ இந்து பரிஷத் விதண்டாவாத வியாக்கியானங்களை முன்வைத்தது. அப்படியானால் நாட்டில் எந்த இடத்திலும் கிறிஸ்தவர்கள் குண்டு வைப்பதில்லை; தமது மதத்தவருக்காக தனிநாடு கோருவதில்லை. எனவே, அப்படிப்பட்ட அமைதிவாழ்வு வாழும் கிறிஸ்தவர்களை ஏன் தாக்கவேண்டும் என்பதற்கான காரணத்தை விஷ்வ இந்து பரிஷத்தால் தரமுடியாது.

இந்தியாவில் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையே வேறும் பல வேறுபாடுகள் உள்ளன. முஸ்லிம்கள் போலன்றி கிறிஸ்தவர்கள் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட மத அமைப்பைச் சேர்ந்தவர்கள். முஸ்லிம்களுக்கென அகில இந்திய தலைவர் ஒருவர் கிடையாது. ஆனால், முக்கிய கிறிஸ்துவ பிரிவான கத்தோலிக்கர்களுக்கு அகில இந்திய தலைவராக கர்தினால் ஒருவர் இருக்கிறார். இதனால் ஒரிசா கிறிஸ்தவர்கள் தாக்கப்படுவதை கண்டித்து நாடளாவிய எதிர்ப்பு பேரணிகள் பல்வேறு மாநிலங்களில் நடந்துவருகின்றன. குஜராத்தில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டபோது, மற்ற மாநில முஸ்லிம்கள் இவ்வாறு கரம்கோத்து எதிர்ப்புத் தெரிவிக்குமளவு முஸ்லிம்கள் ஒரே குடையின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டு இருக்கவில்லை. மனித உரிமை அமைப்புகள் ஆங்காங்கு கண்டனம் தெரிவித்ததுடனும் எதிர்க்கட்சிகளான கம்யூனிஸ்ட், மற்றும் காங்கிரஸ் கட்சிகள் நாடாளுமன்றிலும் வெளியிலும் எதிர்ப்பு தெரிவித்ததுடனும் சரி. ஆனால், கிறிஸ்தவர்களுக்கு எதிரான விஷ்வ இந்து பரிஷத்தின் பாய்ச்சலுக்கு நாடுதழுவிய கண்டனம் கிறிஸ்தவ சமூகத்திடம் இருந்து ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் கூட கதவடைப்புப் போராட்டங்கள்

### எஸ்.சுரேந்திரஜித்

நடத்தப்பட்டன.

இந்திய முஸ்லிம்களைவிட கிறிஸ்தவர்கள் கல்வியறிவு கூடியவர்கள். இந்தியாவில் கல்வியறிவு அதியுயர்வான மாநிலமாகிய கேரளத்தில் தான் கிறிஸ்தவர்கள் பெருமளவு உள்ளனர். இதனால், முஸ்லிம்களை தாக்குவதை விட கிறிஸ்தவர்களை தாக்குவது இந்து வெறியர்களுக்கு சிரமமான விடயம் ஆகும்.



நவின் பட்நாயக்

தமிழகத்தில் கிறிஸ்தவர்கள் நடத்திய கதவடைப்பை தமிழக இந்து தலைவர் வேதாந்தம் கண்டித்திருப்பது இந்து வெறித்தனத்தின் உச்சம் என்றே கூறவேண்டும். சக கிறிஸ்தவர்கள் இலக்குவைக்கப்படுவதை அஹிம்சை வழியில் கண்டிக்க தமிழக கிறிஸ்தவர்களுக்கு எல்லா உரிமைகளும் உள்ளன. இதை மறுக்கும் வேதாந்தம் மனித உரிமைகளை பட்டவர்த்தனமாக மீறும் செயலை செய்துள்ளார். இவற்றிலிருந்து தெளிவாவது என்னவெனில் இன, மத, சாதி, மொழி சகிப்புத்தன்மையை வளர்க்க இந்திய அரசமைப்பு சட்டம் தவறிவிட்டது என்பதே. உலகின் உயரிய ஜனநாயகமாக துதிக்கப்படும் இந்திய ஜனநாயகம் இன்னும் பல பரிமாணங்களை எய்தவேண்டிய நிலை உள்ளது என்பது இக்கலவரங்களின் மூலம் படம்பிடித்து காட்டப்பட்டுள்ளது. அன்றேல் அரசமைப்பு சட்டத்திலுள்ள உரிமைகள் ஒவ்வொரு குடிமகனுக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்த அரச யந்திரம் தவறிவிட்டது எனக் கருத நேரிடும். அன்று குஜராத்தில் முஸ்லிம்கள், இன்று ஒரிசாவில் கிறிஸ்தவர்கள், மீண்டும் அயோத்தியில் முஸ்லிம்கள் என சிறுபான்மை மதங்களை கடித்துக் குதறும் இரத்தக் காட்டேரித் தனத்துக்கு முடிவு கட்டப்பட வேண்டும்.

நேற்று முஸ்லிம்கள், இன்று கிறிஸ்தவர்கள் எனத் தொடரும் இந்த 'மத சுத்திகரிப்பு' நாளை சீக்கியர், பௌத்தர் ஆகிய ஏனைய சிறுபான்மை இந்திய மதங்களையும் விட்டுவைக்கப்போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்.

இங்கு இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். முஸ்லிம்கள் மீது இரத்தக் களரியை இந்து வெறியர்கள் திணித்தால் அவர்கள் தனி முஸ்லிம் நாடுகோர அல்லது பாகிஸ்தானுடன் இணைய முனையலாம். ஆனால், கிறிஸ்தவர்கள் தனிநாடு கோரமுடியாது. காரணம், அவர்கள் இந்தியாவின் மூலைமுடுக்கெங்கும் பரந்து வாழ்கிறார்கள். ஆனால், கிறிஸ்தவ சமூகம் ஒட்டுமொத்தமாக பாரதீய ஜனதா கட்சியை நிராகரிக்கும் நிலைக்கே இது இட்டுச் செல்லும். சாதாரணமாக நகர்ப்புற இந்திய மக்கள் பெருமளவில் பாரதீய ஜனதாக் கட்சிக்கே வாக்களித்து வந்துள்ளனர். இவர்களில் பெரும் எண்ணிக்கையான நகர்ப்புற கிறிஸ்தவர்களும் அடங்குவர். இனிமேல் இந்த வாக்குகள் நிரந்தரமாக பாரதீய ஜனதாவை விட்டுத் தூரமாகும். இது மட்டுமன்றி தமிழகம் போன்ற மாநிலங்களில் தி.மு.கவுடனும் அ.தி.மு.கவுடனும் பாரதீய ஜனதா மாறி மாறி கூட்டணி வைப்பதும் இனிச் சிரமமாகலாம். காரணம், பாரம்பரியமாக, தமிழக கிறிஸ்தவர்கள் தி.மு.கவுக்கே வாக்களித்து வந்துள்ளனர். முன்பு பாரதீய ஜனதாவுடன் கூட்டணி வைத்ததுபோல இனியொரு தடவை தி.மு.கவானது பாரதீய ஜனதாவுடன் குலாவினால் தனது நிரந்தரமான கிறிஸ்தவ வாக்கு வங்கியை இழக்கநேரிடும். இவ்வாறு பலவகைகளில் ஒரிசா கலவரங்கள் இந்த சிக்கலின் பல்வேறு முகங்களை பகிரங்கப்படுத்தியுள்ளன எனலாம். *



# அரசின் பிரசாரமும் கள நிலைமையும்

லண்டனிலிருந்து வன்னியன்



கடந்த வாரங்களில் இடம்பெற்ற சண்டைகள் மன்னார் மாவட்டத்தைக் கடந்து முல்லைத்தீவு, கிளிநொச்சி என்று விரிவடைந்து கொண்டே செல்கின்றன. இது படைகளை உட்சாகப்படுத்தி மேலும் புலிகளின் பகுதிகளுக்குள் முன்நகர வைப்பதுடன் கிளிநொச்சி நகரை மிக விரைவில் கைப்பற்றி விடலாம் என்ற உணர்வுகளையும் படையினருக்கு ஏற்படுத்தியுள்ளது. புலிகள் தந்திரமான பின்நகர்வுகளை மேற்கொண்டு தமது வளங்களை எல்லாம் பின்நகர்த்துவதுடன் முன்னேறும் படையினருக்கெதிராக பெரும் அளவிலான யுத்தத்தை மேற் கொள்ளாததே இதற்குக் காரணம் ஆகும்.

மன்னார் - பூநகரி வீதியில் நாச்சிக்குடாச் சந்திக்கு அண்மையில் அதாவது ஏ32 வீதியில் (நாச்சிக்குடா செல்லும் வீதி ஆரம்பிக்கும் இடம்) இராணுவம் தரித்து நிற்கின்றது. இந்த இடம் பூநகரியில் இருந்து 21 மைல் தெற்கே அமைந்துள்ளது. அத்தோடு நாச்சிக்குடாச் சந்தியிலிருந்து மேற்காகச் செல்லும் வீதியில் மூன்று மைல் தொலைவிலே மேற்குக் கடற்பரப்பின் முக்கிய துறையான நாச்சிக்குடா ஓடத்துறை அமைந்துள்ளது. அதனை அடுத்து குமுழமுனை, வலைப்பாடு, பாலாவி ஆகிய ஓடத்துறைகள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. எனினும், மேற்குறிப்பிட்ட நாச்சிக்குடா, வலைப்பாடு, பாலாவி ஆகியவை பாக்குநீரிணையின் ஆழ்கடலை அண்மித்தே அமைந்துள்ளன. எனவே, இவற்றின் முக்கியத்துவத்தை புலிகள் உணராமல் இருக்க முடியாது. எனினும், இவற்றை மிஞ்சிய ஓர் இலக்கை எதிர் பார்த்துக் காத்திருப்பதனாலேயே நாச்சிக் குடாச் சந்திக்கு அண்மை வரையான நகர்வு இராணுவத்துக்குச் சாத்தியமாயிற்று.

நாச்சிக்குடாவை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிட்டால், அடுத்து வரும் பூநகரி வரையான பகுதி வெறும் பொட்டல் வெளிக் காடுகளையும் சதுப்பு நிலத்தன்மையையும் உடைய நிலத் தரைத்தோற்றமாக இருப்பதால் புலிகள் அந்த இடத்தில் நிலைகொள்வது சாத்தியமல்ல. எனவே, தாம் வேகமான முன்னகர்வது இலகுவானது என படைத்தரப்பு கணக்குப் போட்டிருக்கிறது.

அத்துடன் வவுனியாவிலிருந்து பார்த்தால் வடக்கு நோக்கி படையினர் நிலைகொண்டுள்ள பகுதி ஒடுங்கல் வலயப் பிரதேசமாகவே காணப்படுகிறது. ஆகவே தாங்கள் நாச்சிக்குடாவரை சென்றுவிட்டால் தாம் முன்னேறிய பாதைகள் எல்லாம் முனை வடிவாகவே இருக்கும் என்பது படையினருக்குத் தெரியும். இந்த நிலையில் படையினருக்கு பக்கவாட்டில் பாதுகாப்பு வழங்குவதற்குரிய பாதுகாப்பு வலயம் போதுமானதாக இருக்காது. புலிகள் பக்கவாட்டில் தாக்கினால் முன்னகர்ந்த படையினரின் நிலை அதோ கதிதான்.

எனவே, 57 ஆவது படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், துணுக்காய் மல்லாவிப் பகுதியைக் கைப்பற்றாது ஏ32 வீதியில் மேலும் முன்னேறுவதால் எதுவித பயனும் இல்லை என்றும், இது புலிகளின் ஊடறுப்புத் தாக்குதலுக்கு இலகுவாக வழிவகுக்கும் என்றும் கருதினார். புலிகள் ஓர் ஊடறுப்புத் தாக்குதலை நடத்திவிட்டால், பாரிய படைநடவடிக்கைகளை மேற்கொள்ளும் படைகளுக்கு அது பேரிடியாக அமைவதுடன் தப்பியோடும் படைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துவிடும் என்று எண்ணி உடனடித் திட்டம் ஒன்றை அவர் நடைமுறைப்படுத்தினார்.

அதாவது ஏ32 வீதியில் முன்னேறும் படையினருக்கு சமாந்தரமாக கிழக்கு நோக்கியிருக்கும் துணுக்காய் மற்றும் மல்லாவி ஆகியவற்றைக் கைப்பற்ற வேண்டும். அவ்வாறு செய்தால் ஏ32 வீதியில் உள்ள படைகளுக்கு பக்கவாட்டு ஆதரவை வழங்க முடியும்.

இத்திட்டத்தை உடனடியாக நடைமுறைப் படுத்த அவர் முனைப்புடன் இருந்தார். இதனால் கல்விளான் பகுதியில் இருந்த படையணிகள் (57 - 3) வெள்ளாங்குளத்தில் உள்ள படை யணிகளுடன் (58) இணைந்து தாக்குதலை ஆரம்பித்தன. அதன்படி 58 ஆவது படை யணி வெள்ளாங்குளத்திலிருந்து வேட்டை யடைப்பு நோக்கி திடீர் பாய்ச்சலை காடு களினூடாக மேற்கொண்டு அப்பிரதேசத்தைக் கைப்பற்றி உடனடியாக உயிலங்குளம் வரை முன்னகர்ந்திருந்தது. அதேபோல் கல்விளான், ஒட்டங்குளம் ஆகிய பகுதி களில் நிலைகொண்டுள்ள 57-3 படையணி, கல்விளானிலிருந்து கிழக்காக துணுக்காய் நோக்கியும் அதேவேளை ஒட்டங்குளத்திலிருந்து வடக்காக துணுக்காய் நோக்கியும் பாரிய தாக்குதலை மேற்கொண்டது.

இத்தாக்குதல்களுக்கு புலிகள் ஆரம்பத்தில் எதிர்ப்புக்காட்டிவந்தனர். ஆனால், உயிலங்குளம் கைப்பற்றப்பட்ட பின் அங்கிருந்தும் துணுக்காய் நோக்கிப் படைகள் ஒரு நகர்வை மேற்கொண்டு துணுக்காய் பகுதியில் நிலைகொண்டுள்ள புலிகளை பின்புறமாக வால்வளைப்புச் செய்து அவர்களை கொல்வது அல்லது உயிருடன் பிடிப்பது என்ற நோக்கத்தில் முன்னேறின. இதனை உணர்ந்த புலிகள், தந்திரமாக துணுக்காய் பகுதியில் இருந்தும் பின்நகர்ந்தனர். அதன்பின் அப்பிரதேசத் தைக் கைப்பற்றிய படைகள் தமக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்று அதைக் கொண்டாடின. இது சப்ரகமுவ மாகாண சபைத்தேர்தலுக்கு இறுதி நேரப் பிரசாரமாக அரசுக்கு அமைந்தது. அத்துடன் இம்மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்தில் வெளியிடப்பட்ட ஒரு செய்தி 'கிளிநொச் சியிலிருந்து நாங்கள் 12 கிலோ மீற்றர் தூரத்தில் நிற்கின்றோம். அக்கராயனையும் பிடித்துவிட்டோம்' என்பதே!

உண்மையில் இது சரியான தகவலா என நோக்கினால் இல்லை என்றே கூற வேண்டும். காரணம், கடந்த வாரம் அக்கராயன் பகுதிவரை இராணுவத்தின் ஆள ஊடுருவும் அணியுடன் ஒரு தாக்குதல் அணியும் ஊடுருவி அக்கராயன் வரை நகர்ந் திருந்தது. இவ்வாறே சிறுசிறு குழுக்களாக படைகள் உள் நுழைந்து புலிகளின் இலக் குகளை முன்னும் பின்னுமாக தாக்க புலிக ளும் படைகள் தமது நிலைகள் மீது பலமாக நுழைந்து விட்டார்கள் என்றெண்ணி பின் நகர்ந்து விடுவார்கள். இதுவே மன்னார் களமுனையில் படைகள் இதுவரை செய்து வந்த தந்திரோபாயமாகும். அதுபோல் ஒன்றே அக்கராயன் பகுதியிலும் நடந்தது. ஆனால், அத்தாக்குதல் பிசுபிசுத்துப் போனது. படையினர் அக்கராயன் காட்டுப்பகுதிக் குள் நுழைந்தவுடன் ஒரு வீடியோக் கிளிப் ஒன்றை வெளியிட்டனர். அதில் அக்கராயன் பகுதியில் தாங்கள் நிற்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. அவ்விடத்திலேயே இவை எடுக்கப்பட்டன என படைத்தரப்பு கூறினாலும் அதை ஆதாரப்படுத்துதற் கான ஆதாரம் அதில் இல்லை. இவ்வாறு வீடியோப்பதிவு வெளியிட்ட கையோடு, புலிகளின் தாக்குதல் அணிகளின் கண்களில், ஊடுருவிய இராணுவத்தினர் மாட்டுப்பட ஊடுருவிய கையுடனேயே அவர்கள் உயிலங்குளம் வந்துவிட்டனர். ஆனால், படையினர் முதலில் வெளியிட்ட வீடியோ கிளிப்பை வைத்துக்கொண்டு பிரசாரப் போரில் இறங்கினர். தாம் தற்போதும் அக்காராயனிலேயே நிற்பதாக தென்னி லங்கை மக்களை மட்டுமல்ல, புலம்பெயர் மக்களையும் நம்பச் செய்திருக்கின்றனர். எனவே, படையினர் தற்போது கிளிநொச்சியிலிருந்து 12 கி.மீ. தூரத்தில் நிற்பதாகக் கூறுவதில் எதுவித உண்மையும் இல்லை.

படைகள் தற்போது நிற்கும் உயிலங் குளத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி நகர வேண்டுமானால் அவர்களுக்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று, உயிலங்குளத் திலிருந்து தேறாங்கண்டல், ஜங்கங்குளம், புத்துவெட்டுவான், கொக்காவில், முறுகண்டி ஆகிய பகுதிகளை அடைந்து உயிலங்குளத் திலிருந்து கிட்டத்தட்ட 23 மைல் தூரத்தில் உள்ள கிளிநொச்சிக்குச் செல்ல வேண்டும்.



இரண்டாவது வழி உயிலங்குளத்திலிருந்து கோட்டை கட்டியகுளம், அம்பலப்பெருமாள், புதுமுறிப்பு ஆகிய பகுதிகளைக் கிட்டத் தட்ட 12 மைல் தூரம் கடந்து அக்கராயன் பகுதியை அடைந்து அக்கராயனில் இருந்து கோணாவிலை அடைந்து கிளிநொச்சியை அடைய வேண்டும். அல்லது அக்கராயனில் இருந்து ஏழு மைல் தூரத்தில் உள்ள முறு கண்டிச்சந்தி வந்து கிளிநொச்சியை அடைய வேண்டும். எனவே மேற்குறிப்பிட்ட அக்கராயனுக்கு இடைப்பட்ட பகுதிகளை படைகள் கைப்பற்றியதாக அறிவிக்க வில்லை. எனவே, இது அப்பட்டமான ஒரு பொய்ப் பிரசாரமாகும்.

அத்துடன் நாச்சிக்குடாச் சந்திக்குத் தெற்கே உள்ள படைகள் கிளிநொச்சி நோக்கி நகர வேண்டுமானால் நாச்சிக் குடாவில் இருந்து 4 மைல் தூரத்தில் உள்ள பல்லவராயன் கட்டை அடைந்து அங்கிருந்து ஆறுமைல் தூரம் கடந்து ஜெயபுரத்தை அடைந்து அங்கிருந்து கிட்டத்தட்ட 4 மைல் தூரத்தில் உள்ள வன்னேரியைத் தாண்டி 5 மைல் தூரம் நகர்ந்து அக்கராயனை அடைய வேண்டும். இங்கேயும் அக்கராயன் வன்னேரி தவிர்ந்த எந்தப் பகுதியையும் படைகள் கைப்பற்றியதாக அறிவிக்க வில்லை. எனவே, படைகள் ஆள ஊடுருவி பிடிக்கப்பட்ட ஒளிப்பதிவினைக் காட்டி பிரசாரம் செய்யப்படுகிறது. இது ஒரு நல்ல தந்திரோபாயமும் கூட. அத்துடன் கடந்த சில நாட்களாக காடுகளினூடாகச் சென்று வன்னேரிப்பகுதியைப் பிடிக்க மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்தது என்பதை இங்கு சுட்டிக் காட்டுகிறேன். மேலும் வன்னேரியைப் பிடிக்காது தாங்கள் அக்கராயனை கைப்பற்றி விட்டோம் என கூறுவதானது அவர்கள் தங்கள் பிரசாரப் போரை விஸ்தரித் துள்ளதையே காட்டுகிறது.

இனி துணுக்காய்ப் பகுதிகளை நோக்கி பார்த்தால் கடந்த 26 ஆம் திகதி படைகள் துணுக்காயிலிருந்து, துணுக்காய்க்கும் மல்லாவிக்கும் இடையில் உள்ள கொக்காவில் வீதி நோக்கி மேற்கொண்ட பாரிய ஆட்லறியுடன் கூடிய முன்னகர்வு தோல்வியில் முடிந்தது. படைகள் எப்பாடு பட்டாவது மல்லாவி, ஒட்டறுத்த குளம், வடகாடு ஆகிய வற்றைக் கைப் பற்றி வன்னி விளாங்குளம், மாங்குளம் பகுதி களை அடைய முனை கின்றன. அத்துடன் மல்லாவி நோக்கிய நகர்வில் துணுக்காயில் இருந்து ஒரு படையணி மாங்குளம் நோக்கி நகரவும், வவுனிக்குளம் பகுதியில் உள்ள 57-1 படையணி ஒட்டறுத்த குளம், வடகாடு ஆகியவற்றைக் கைப்பற்றி மல்லாவியைப் பின்புறமாக வால்வளைப்புச் செய்யவும் திட்டமிடப்பட்டது.

மேலும் உயிலங்குளத்திலிருந்து படைகள் தெற்குப் பக்கமாகத் திரும்பி ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தைக் கடந்து மல்லாவியைப் பின்புறமாக முற்றுகையிடவும் திட்டம் தீட்டப்பட்டது.

அத்துடன் படைத்தளபதி சரத்பொன்சேகா, அடுத்த இரண்டு வாரங்களில் தாம் மல்லாவி, வன்னிவிளாங்குளம், மாங்குளம் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றி பாலமோட்டையில் உள்ள புலிகளுக்கு ஆப்பு வைப்போம் எனக் கூறியிருக்கின்றார்.

(23 ஆம் பக்கம் பார்க்க)

# அழிக்கும் உயிரினம் மனிதன்

கோடானு கோடி உயிரினங்கள் கொப்பளித்துக்கொண்டிருக்கும் ஆச்சரியமான, வண்ணமயமான கிரகம் - பூமி! நம் அறிவுக்குத் தெரிந்தவரையில் சூரிய மண்டலத்தில் வேறு எங்கும் உயிரினங்கள் கிடையாது. பூமி ஓர் உயிருள்ள கிரகமாக மாற அது எடுத்துக்கொண்ட காலம் மனிதக் கற்பனைக்கு அப்பாற்பட்டது!

சுமார் ஐந்நூறு கோடி ஆண்டுகளுக்கு முன்பு உருண்டு திரண்டு பெரும் பாறையாக உருவானது பூமி. முதலில் கடல்கள் உருவாக, முன்னூறு கோடி ஆண்டுகளுக்கு முன்புதான் தண்ணீருக்கடியில் முதன் முதலில் தக்குனூண்டு உயிரினங்கள் தோன்றின. பூமியைச் சுற்றி, நிலப்பகுதி மீது காற்று மண்டலம் உருவாக இன்னொரு நூறு கோடி ஆண்டுகள் பிடித்தது! முப்பது கோடி ஆண்டுகளுக்கு முன்பு ஒக்ஸிஜன் 'உருவாக்கும்' தாவரங்கள் தோன்றின.

மற்ற எல்லாவித உயிரினங்களும் தோன்றுவதற்காக பூமியின் மேற்பரப்பு தயாரானது பத்து கோடி ஆண்டுகளுக்கு முன்புதான்!

மனிதன் - பூமியில் சில லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய 'லேட்டஸ்ட்' உயிரினம்!

மனிதர்கள் குரங்குகளுக்கு நெருக்கமான உறவு என்றால், மற்ற பாலூட்டிகளுக்கு குரங்குகள் நெருக்கமான உறவு. பாலூட்டிகள் பறவைகளுக்கு உறவு. பறவைகள் பாம்புகளிலிருந்து தோன்றியவை! இப்படியே பின்னோக்கிப் போனால் மைக்ராஸ்கோப் வழியாக மட்டுமே பார்த்தால் தெரிகிற ஒரே ஒரு செல் உள்ள உயிரினம்தான் எல்லாவற்றுக்கும் ஆரம்பம்!

சூரிய ஒளியில் கிடைக்கும் சக்தியை மட்டுமே பெற்றுக்கொண்டு உயிர் வாழ்ந்த 'ஸயனோ பக்டீரியா' என்கிற (ஒரே ஒரு செல் உள்ள) உயிரினம்தான் மனிதனின் முதல் உண்மையான முன்னோர்! (ஒரே செல் உள்ள இரண்டு விதமான பக்டீரியாக்களில் ஒன்றில் உயிர் பிறந்தது. மற்றொன்று நோயை ஏற்புடுத்தியது. இரண்டுமே ஒரே சமயத்தில் தோன்றியவை!) அதிலிருந்து படிப்படியாக இரண்டு செல், 4, 8... என்று முன்னேறி, பிற்பாடு 50 மில்லியன் மில்லியன் செல்கள் அடங்கிய ஆச்சரியமான, 'உயிருள்ள கட்டம்'தான் (ஆர்க்கிடேக்சர்!) மனிதன். ஒரு 'செல்லி'லிருந்து துவங்கி உண்மையிலேயே விஸ்வரூபம்!

பூமியின் உயிர்த்துடிப்பான வரலாறு பற்றித் தெரிந்துகொண்ட ஒரே உயிரினம் மனிதன்தான். மிகுந்த பொறுப்பு உணர்வைத் தரவேண்டிய அறிவு அது. ஆனால், மனிதனின் நடவடிக்கைகளில் அந்த அறிவு தெரிகிறதா?!

பூமியையும், இயற்கையையும், மற்ற படைப்புக்களையும் அறிவுபூர்வமாகக் காக்கும் ஓர் உயிரினமாக உருவெடுத்திருக்க வேண்டிய மனிதன் 'அழிக்கும் உயிரினமாக' மாறியது எப்படி?!

ஆபிரிக்கக் காடுகளில் சுமார் 20 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு செங்குத்தாக நிமிர்ந்து நின்று நடந்த 'குரங்கு மனிதன்' மற்ற குரங்குகளிடமிருந்து (சிம்பன்ஸி உட்பட) ஒரு விஷயத்தில் குறிப்பாக மாறுபட்டான். அவன் கற்களைத் தேய்த்துக் கூர்மையாக்கி ஆயுதங்கள் தயாரித்தான். தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் உலகெங்கும் சென்று தோண்டியெடுத்த இப்படிப்பட்ட கற்கால ஆயுதங்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஆயுதம் இல்லாமல் மனிதன் வெளியே கிளம்பியிருக்கவே மாட்டான் என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது!

மனிதன் தோன்றிய பிறகு சுமார் பதினைந்து லட்சம் ஆண்டுகளுக்கு ஆபிரிக்கக் காடுகளைவிட்டு அவன் வெளியே வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது! பிறகுதான் மெள்ள மெள்ள ஆசியாவுக்கு, ஐரோப்பாவுக்கு என்று அவனுடைய பயணம் துவங்கியது.

ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு மிஞ்சிய இரண்டு மனித இனங்கள் (நாமும் நியாண்டர்தால் இனமும்) உலகின் பல பகுதிகளுக்கு குடியேற ஆரம்பித்துவிட்டன. அப்போது மனிதன் கண்டுபிடித்த ஒரே விஷயம் - தீ!

மற்றப்படி மனித இனத்துக்கு மொழி கிடையாது, விவசாயம் கிடையாது, வீடு கிடையாது, கலை கிடையாது, குடும்பம் கிடையாது... தவிர, பெருமே நாற்பது வயதைத் தாண்டாததால் மாதவிடாய் நின்றுபோவது (Menopause) கூடக் கிடையாது!

ஆனால், மனிதர்களோடு கூடவே, பூமியில் வளைய வந்துகொண்டிருந்த வேறொரு (நியாண்டர்தால்) மனித இனம் சுமார் 40,000 ஆண்டுகளுக்கு முன் அடியோடு அழிந்தொழிந்து போனது.

தன்னைவிட சற்று புத்திசாலித்தனம் குறைச்சலாக இருந்த நியாண்டர்தால் இனத்தை வேட்டையாடித் துரத்திக் கொன்று தீர்த்தவர்கள் மனிதர்களே. கொலைகார ஆயுதங்களைத் தயாரிக்கக் கூடிய 'அறிவாற்றல்' அவன் வேலையைச் சுலபமாக்கியது! பிற்பாடு உணவுக்காகவும், நிலத்துக்காகவும், பெண்ணுக்காகவும் தங்களுக்குள்ளேயே மனிதர்கள் வன்முறையில் இறங்கினார்கள். எந்த உயிரையும் அழிக்க முடியும் என்கிற 'அறிவு' மனிதனுக்கு ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிவிட்டது!

சுமார் நாற்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதனின் பரிணாம வளர்ச்சியில் ஓர் ஆச்சரியம் நிகழ்ந்தது. அந்த நிகழ்ச்சியை 'கிரேட் லீப் ஃபார்வர்ட்' (Great Leap Forward) என்று ஆராய்ச்சியாளர்கள் அழைக்கிறார்கள். அதாவது, மனிதன் முழுமையான பரிணாம வளர்ச்சி அடைந்து பிரமாண்டமாகத் தாவி முன்னேறிய காலகட்டம் அது! மொழி, கலை, குடும்பம்... எல்லாமே துவங்கியது அப்போதுதான்.

கூடவே மனிதனின் அழிவுச் செயல்களின் வேகமும் அதிகரித்தது. உதாரணமாக 40,000 ஆண்டுகளுக்கு முன்பு அவுஸ்திரேலியாவில் மனிதன் குடியேறியவுடன் அங்கே வசித்த முக்கால்வாசி உயிரினங்களை அவன் வேட்டையாடி கொன்று தீர்த்தான். அப்போது அவுஸ்திரேலியாவில் யானை அல்லது காண்டாமிருகம் சைஸுக்கு ஏராளமான விலங்கினங்கள் வளையவந்தன. இன்று அங்கே உயிரோடு உள்ள ஒரேபெரிய சைஸ் விலங்கினம் கங்காரு மட்டுமே என்றால் மனித இனத்தின் வேட்டை வெறியைப் புரிந்துகொள்ளலாம்! (ஒரு காலத்தில் யானை உயர கங்காரு இனம் கூட அங்கே இருந்து, பிறகு மனிதர்களால் கொன்று அழிக்கப்பட்டது.)

'பூமியை இருண்ட மேகங்கள் அடியோடு மூடிக்கொண்டது போல' வன்முறை மேகங்கள் அப்போதே மனித சமுதாயத்தைச் சூழ்ந்துகொள்ளத் தொடங்கியது என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள் வருத்தத்தோடு.

பறவைகளை எடுத்துக்கொள்வோம். ஏதாவது ஓர் உயிரினம் உலகெங்கும் நுணுக்கமாகக் கவனிக்கப்பட்டு வருகிறதென்றால் அது பறவை இனமே! பறவைகள் ஒளிந்து கொள்வதில்லை. அவைகளுக்கு இரவு (Nocturnal) நடமாட்டம் கிடையாது என்பதால் அவைகளைச் சுலபமாகக் கண்காணிக்க முடியும். தவிர, பறவைகளை வெறித்தனமாக நேசிப்பவர்கள் உலகெங்கும் ஏராளமாக உண்டு. சுற்றுவட்டாரத்தில் குறிப்பிட்ட ஒரு பறவையைக் காணோம் என்றால் கூட அவர்கள் பதை பதைத்துப்போவார்கள்!

குரங்கு (Apes) இனத்தில் மனிதன், சிம்பன்ஸி, கொரில்லா, உராங் குடான், கிப்பன் என்று ஐந்து வகைகள் இருப்பதுபோல, உலகில் சுமார் 9,000 விதமான பறவை இனங்கள் உண்டு. இன்னும் கண்டுப்பிடிக்கப்படாத பறவை இனங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

கடந்த நானூறு ஆண்டுகளில் 108 பறவை இனங்களை அடியோடு மனிதன் அழித்துவிட்டதாக ICBP என்று அழைக்கப்படும் சர்வதேச இயக்கம் அறிவித்திருக்கிறது!

அண்மைக்காலத்தில் கடைசியாக அழிந்த பறவை அமெரிக்காவில், ஃப்ளாரிடா மாநிலக் கடற்கரையோரமாக வசித்த ஒருவித குருவி இனம். அங்கே, கடற்கரையோரக் காடுகளை மனிதன் அழித்தபோது அந்தக் குருவி இனமும் கூடவே அழிந்துபோனது. எப்படியோ தப்பிப் பிழைத்து உயிரோடு இருந்த ஆறு குருவிகளை பதை பதைப்புடன் 'ஸூ'வுக்குக் கொண்டுபோய் பாதுகாத்தும் பலனில்லை. ஒவ்வொரு குருவியாக இறந்துபோக, தன்னந்தனியாக கூண்டின் ஒரு மூலையில் வெறித்துப் பார்த்தவாறு முடங்கிக்கிடந்த கடைசிக் குருவி ஜூன் 16ஆம் திகதி 1987இல் உயிரைவிட்டது. மனிதனைப் போலவே பல கோடி வருடங்கள் எடுத்துக்கொண்டு உருவான படைப்பு அந்தக் குருவி. உலகின் அத்தனை விஞ்ஞானிகளும் இணைந்தால்கூட அந்தக் குருவியை மீண்டும் உருவாக்க முடியாது!

இதேபோல மனித அலட்சியத்தாலும், அவன் வேட்டையாடியதாலும், கவனக்குறைவாலும் ஏராளமான பறவையினங்கள் அழிந்துபோய்விட்டன.

'அழிந்த' ஒரே காரணத்தால் உலகப் புகழ்பெற்ற 'டோடோ' என்னும் (இறக்கையில்லாத) பறவை இனம் 17ஆம் நூற்றாண்டுவரை உயிரோடு இருந்தது. 1914இல் பாஸெஞ்சர் புறா என்றும் பறவையினத்தை மனிதன் முட்டாள்தனமாக அழித்தது அப்போது தலைப்புச் செய்தி! அதே ஆண்டில் கரோலினா பாரட் என்னும் கிளி வகை அழிந்தது. வட அமெரிக்காவுக்குப் போவோம். அங்கே சடை நாய் போல முடிவளர்ந்த, நீண்ட தந்தங்கள் கொண்ட ராட்சத யானைகள் (Mammoths), சிங்கம், சிறுத்தை எல்லாமே ஒரு காலத்தில் இருந்ததுண்டு. அவையெல்லாம் பிற்பாடு மனிதர்களால் அழிக்கப்பட்டன.

சைப்ரஸ் நாட்டில் தக்குனூண்டு சைஸ் யானைகள் மற்றும் மினி நீர்யானைகளும் இருந்த காலம் ஒன்றுண்டு. அவை ஒன்றுகூட இப்போது கிடையாது! தனித்தொடர் எழுதக்கூடிய அளவுக்குப் பல்லாயிரக்கணக்கான உயிரினங்களை மனிதன் அறிவில்லாமல் அழித்திருக்கிறான். தற்போதுகூட 1666 பறவையினங்கள் அழிவின் நுனியில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இப்படியாக, தான் அழிவுப் போதையில் போகிறோம் என்கிற உண்மைகூட மனிதனின் மூளைக்கு உறைக்கவில்லையோ என்பதற்கு உதாரணமாக ஒன்றைச் சொல்லலாம். கலிஃபோர்னியா மாநிலத்துக்கு என்று ஒரு கொடி உண்டு. அந்தக் கொடியில் உள்ள சின்னம் கலிஃபோர்னியா காடுகளில் மட்டுமே வசிக்கும் ஒரு விசேஷமான கரடி (Grizzly Bear). பல ஆண்டுகளுக்கு முன்பே அந்த ஸ்பெஷல் கரடிகள் மனிதர்களால் வேட்டையாடப்பட்டு அழிக்கப்பட்டுவிட்டன என்பது கலிஃபோர்னிய மக்கள் பலருக்கும் தெரியாது. கொடியில் மட்டும் கரடிச்சின்னம் தொடர்கிறது! எவ்வளவு விசித்திரமான சோகம் இது?! (இந்தியப் புலிகளுக்கும் அதே கதி ஏற்பட்டிருக்கும் Project Tiger திட்டத்தின் மூலம் புலிகளைக் காப்பாற்றிய பெருமை முழுதும் இந்திராகாந்தியையே சேரும்!)

மனிதனைத் தவிர, வேறெந்த உயிரினமும் மற்ற உயிரினங்களை முழுவதுமாக அழிப்பதில்லை. தேவைப்பட்டால் மட்டுமே அவை வேட்டையாடுகின்றன. அதேபோல, சாகபட்சிணிகள் சுற்றுச்சூழலைக் கெடுப்பதில்லை. அவை முட்டாள்தனமாக தாவரங்களை அழிப்பதில்லை.

மனிதனுக்கு இல்லாத ஏதோ நுண்ணறிவு மற்ற உயிரினங்களுக்கு உண்டோ என்று கூடச் சந்தேகம் வருகிறது!

உச்சக்கட்டமாக...

எந்த ஓர் உயிரினமும் தங்கள் இனத்தையே அழித்துக்கொள்ள முனைந்ததில்லை, மனிதனுக்கு மட்டுமே அந்த 'பெருமையும்' சேர்கிறது...!

(மனிதனின் அட்டகாசம் தொடரும்...)




மனித இனத்தோடு வன்முறையும் கூடவே வளர்ந்து அரக்க ரூபம் எடுத்த வரலாற்றை தனது 'மனிதனுக்குள்ளே ஒரு மிருகம்' என்ற தொடரிலே தலைக்கோரிய சிலிர்ப்பூட்டும் எழுத்து நடையில் தந்திருக்கின்றார் தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் மதன்.

'ஆனந்த விகடன்', 'ஜூனியர் விகடன்', 'ஜூனியர் போஸ்ட்' போன்ற பத்திரிகைகளின் இணை ஆசிரியராகப் பணி புரிந்த மதன் ஒரு புகழ்பெற்ற கார்ட்டூனிஸ்ட்.

மனித மூளைக்குள் கொடூரமாகப் புதைந்து கிடக்கும் 'வன்முறைக் கலங்களை' ஒவ்வொன்றாகத் தட்டி எழுப்பி அதன் உண்மைத்தன்மைகளை அவர் இத் தொடரில் தந்தார்.

'ஆனந்த விகடன்' இதழில் [illegible]









# நான் கண்ட பாரதி

6

இமயம் முதல் குமரி வரையும், குஜராத்து முதல் ஹூக்ளி வரையும் பரந்து கிடக்கும் இந்திய உபகண்டத்தை பாரதியார் வெறும் மலையாகவும், விடுதலைக்காகப் போராடுபவர்களிடம் நிமிர்ந்த நெஞ்சம், நேர்கொண்ட பார்வையும் இருக்க வேண்டும் என்று பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பித்த பாரதியார் பின்பு சுதந்திரம் என்பதை ஒரு தெய்வமாக்கிப் பொழிந்து தள்ளியிருக்கிறார்.



எஸ். டி.சிவநாயகம்

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகை உலகில் தன்னிகரற்ற ஜாம்பவானாக மதிக்கப்படுபவர் 'சுதந்திரன்', 'தினபதி', 'சிந்தாமணி', 'சூடாமணி' போன்ற பத்திரிகைகளின் ஸ்தாபக ஆசிரியராக மிளிர்ந்த அமரர் எஸ்.டி.சிவநாயகம் அவர்கள்.

ஈழத்துத் தமிழ் ஊடக உலகுக்குக் காத்திரமான பல பத்திரிகையாளர்களை வழிகாட்டி, உருவாக்கிவிட்ட பெருமைக்குரியவர் சிவநாயகம்.

27ஆண்டுகளுக்கு முன்னர் - பாரதியார் நூற்றாண்டு சமயத்தில் - தமது 'சிந்தாமணி' வார இதழில் 'நான் கண்ட பாரதி' என்ற தலைப்பில் தொடராக அவர் வரைந்த கட்டுரைகள் பரபரப்பாகக் பேசப்பட்டவை. மகாகவி பாரதியை புதிய கோணத்தில் தமிழ் உலகம் தரிசிக்கச் செய்தவர் சிவநாயகம்.

அக்கட்டுரைத் தொடரை மறுபிரசுரம் செய்வதன் மூலம் பெருமையடைகிறது 'சுடர் ஒளி'.

இக்கட்டுரைத் தொடருக்குள் புகமுன் வாசகர்களுக்கு ஒரு நினைவூட்டல். இத்தொடர் 27 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது. இத்தொடரில் எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் கோடிகாட்டிச் செல்லும் பாத்திரங்கள் சில அச்சமயம் நம் மத்தியில் வாழ்ந்தவர்கள். அவர்கள் இப்போது இக்கட்டுரை மறுபிரசுரமாகும் சமயத்தில் நம்மத்தியில் இல்லாமல் மறைந்திருக்கலாம்.

எனவே, 27ஆண்டுகளுக்கு முற்பட்ட பின்புலத்திலே உங்கள் நினைவுகளைச் சுழலவிட்டபடி இந்தத் தொடருக்குள் நுழையுங்கள்!

- ஆசிரியர் -

## அர்த்தமற்ற ஆசாரங்களைத் துணிவுடன் விட்டெறிந்த விடுதலைப் போராளி பாரதி

மண்ணாகவும், வனமாகவும், நதியாகவும் மதிக்கவில்லை.

பாரதியாரின் தரிசனத்தில் இந்திய தேசம் பாரத மாதாவாகவும், பாரத தேவியாகவும் தெய்வீகத் தோற்றம் அளித்து நின்றது.

அந்த பாரத தேவியிடம், பாரத மாதாவிடம், பாரதியார் பக்தி மிகக் கொண்டார். பற்றும் பரவசமும் கொண்டார்.

அந்த பாரத மாதாவை அவர் மிகுந்த பாச உணர்வோடு ''எங்கள் தாய்'' என்று சொந்தம் கொண்டாடினார்.

''எங்கள் தாய்'' என்ற தலையங்கம் சூட்டி பாரத தேசத்தின் சிறப்பை பாரதியார் பாடியிருப்பது போல வேறு எந்தக் கவிஞரும் தமிழில் பாடியதில்லையென்று துணிந்து கூறலாம்.

*தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு*
*சூழ் கலை வாணர்களும் - இவள்*
*என்று பிறந்தவள் என்று ணராத*
*இயல் பினளாம் எங்கள் தாய்*

*

*முப்பது கோடி முகமுடையாள் உயிர்*
*மொய்ம்புற வொன்றுடையாள் -*
*இவள்*
*செப்புமொழி பதினெட்டுடையாள் - எனிற்*
*சிந்தனை ஒன்றுடையாள்*

- என்று அவர் பாரத மாதாவை வர்ணிக்கும் அடிகளைப் படிக்கும்போது மெய் சிலிர்க்கின்றது.

அந்த பாரத மாதாவிடம், பாரத தேவியிடம் பக்தி செலுத்துவதைத்தான் பாரதியார் ஒரு மதமாகக் கொண்டார். அதனால் அவர் ஏனைய மத சம்பிரதாயங்களை எல்லாம் தகர்த்தெறிந்த ஒரு புரட்சியாளராக விளங்கினார்.

பிராமணர் சமூகத்தில், சமய அனுஷ்டானங்களை எல்லாம் தவறாது கடைப்பிடிக்கும் பிராமணோத்தமரான ஸ்ரீ சின்னசாமி ஐயருக்கு மகனாகப் பிறந்தவர் பாரதியார். உரிய உரிய வயதில் அவருக்கு சௌளம், உபநயனம் ஆதியாம் சடங்குகள் எல்லாம் நடைபெறத்தான் செய்தன.

ஆனால், பாரதியார் தேசபக்தி என்ற மதத்தில் சேர்ந்ததும் தமது குல ஆசார அனுஷ்டானங்களில் அர்த்தமற்றவையாகக் காணப்பட்டவற்றை எல்லாம் துணிவுடன் விட்டெறிந்தார்.

பிராமண குலத்தைச் சேர்ந்தவர்கள் தனியாக முறுக்கு மீசை வைத்துக் கொள்வதில்லை. பாரதியார் வீரச் சுவையில் ஈடுபாடுடையவர். தேச விரும்பியவர் அவர். ஆடவனுடைய வீரத்துக்கு அறிகுறி மீசை என்று சொல்லி முறுக்கிய அழகான மீசையை வைத்துக் கொண்டார். அதே வேளையில் பிராமண குலத்தவர் அணியும் பூணூலை அறுத்தெறிந்து விட்டார்.

தான் பக்தி செலுத்திய பாரத தேவி அடிமைத்தளையில் பிணிப்புண்டு கிடக்கிறாள் - அவள் விலங்கை அறுத்தெறிய வேண்டும். அதற்கு பாரத மாதாவின் புத்திரர்கள் அனைவரும் சாதி பேதம், இன பேதம் இன்றி ஒருமித்துப் போராட வேண்டும் என்பதே அவர் கோட்பாடாக இருந்தது. Home-rule, Independence, Liberation என்ற ஆங்கிலப் பதங்கள் அரசியல் மேடைகளில் அடிபடுவதற்கு ஆரம்பமான நாட்கள் அவை. சுயாட்சி, சுதந்திரம், விடுதலை என்று தமிழ்நாட்டில் இவை தமிழாக்கப்பட்டுப் பேச்சிலும் எழுத்திலும் இடம்பெறலாயின.

சுதந்திரத்தையும் விடுதலையையும் தமது தேசியப் பாடல்களில் கொஞ்சம் தாராளமாகப் பயன்படுத்தினார் பாரதியார். இது வழக்கத்துக்கு மாறான ஒரு புதுமையாக அமைந்தது.

பாரதியார் தேசபக்தி மார்க்கத்தின் சுவிசேஷப் பிரசாரகரான பின்னர் அவர் கனவு, நினைவு எல்லாம் பாரத மாதாவின் விடுதலையைப் பற்றியதாகவே இருந்தன.

தெய்வப் பாடல்கள் பாடினால் கூட அவர் விடுதலை வேண்டும் என்பதை எங்கோ ஓர் இடத்தில் புகுத்தியே பாடினார்.

''ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்'' என்பது ஒரு தோத்திரப் பாடல். அதில் முதற் கண்ணி விநாயகருக்கு உரியது. அந்தப் பாடலிலே எதற்கும் தலைவணங்காத பாரதியார் மிகவும் அடிபணிந்து கணபதியினுடைய இரு கால்களையும் பிடித்துக்கொண்டு கெஞ்சுகிறார்.

எதற்கு? லிபரேஷனுக்கு!

''அப்பா விநாயகரே எங்களுக்கு விடுதலை வேண்டும். அப்போது தான் எங்களுக்கு மகிழ்ச்சி உண்டாகும்'' என்கிறார்.

*கணபதி ராயன் - அவனிரு*
*காலைப் பிடித்திடுவோம்*
*குணமுயர்ந் திடவே - விடுதலை*
*கூடி மகிழ்ந்திடவே -*

என்பது பாரதியார் வாக்கு.

விடுதலை வேட்கைக்கு இப்படிப்

*வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்*
*வேறொன்று கொள்வாரோ? - என்றும்*
*ஆரமுது உண்ணுதற்கு ஆசை கொண்டார் கள்ளில்*
*அறிவைச் செலுத்து வாரோ?*

*

*விண்ணில் இரவிதனை விற்று விட்டு எவரும் போய்*
*மின்மினி கொள்வாரோ? -*
*கண்ணிலும் இனிய சுதந்திரம் போன பின்*
*கைகொட்டிப் பிழைப்பாரோ?*

*

*மண்ணில் இன்பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்*
*மாண்பினை இழப்பாரோ?*
*கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்*
*கைகொட்டிச் சிரியாரோ?*

என்றும் -

*என்று தணியுமிந்த சுதந்திர தாகம்?*
*என்று மடியுமெங்கள் அடிமையில் மோகம்?*
*என்றெமது அன்னை கை விலங்குகள் போகும்?*
*என்றெமது இன்னல்கள் தீர்ந்து பொய்யாகும்?*

என்றும் -

*இதந்தரு மனையில் நீங்கி*
*இடர்மிகு சிறைப் பட்டாலும்*
*பதந்திரு இரண்டும் மாறிப்*
*பழிமிகுத்து இழிவுற்றாலும்*
*விதந்தரு கோடி இன்னல்*
*விளைந்தெனை அழித்திட்டாலும்*
*சுதந்திர தேவி நின்னைத்*
*தொழுதிடல் மறக்கிலேனே.*

*

*தேவி! நின் ஒளிபெறாத*
*தேயம் ஓர் தேய மாமோ?*
*ஆவியங்கு உண்டோ? செம்மை*
*அறிவுண்டோ? ஆக்கம் உண்டோ?*
*காவிய நூல்கள் ஞானக்*
*கலைகள் வேதங்கள் உண்டோ?*
*பாவியர் அன்றோ நின்றன்*
*பாலனம் படைத்திலாதோர்.*

என்றும் -

*எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு - நாம்*
*எல்லோரும் சமமென்பது உறுதி யாச்சு*
*சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே - இதைத்*
*தரணிக் கெல்லாம் எடுத்து ஓதுவோமே*

*

*நாமிருக்கும் நாடு நம் தென்பதறிந்தோம் - இது*



பாரதியார்

*நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம் -இந்தப்*
*பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம் - பரி*
*பூரணனுக்கே யடிமை செய்து வாழ்வோம்.*

- என்றும் பாரதியார் சுதந்திர முழக்கம் செய்தார்.

வெள்ளைக்காரனிடம் இருந்து பாரதம் விடுதலை அடையவேண்டும் என்று விரும்பிய பாரதியார் ''விடுதலை'' உணர்ச்சியை அவ்வளவோடு, மண்டிப் போன சுயநலத்தோடு, வரம்பு கட்டி வைத்துக் கொள்ள விரும்பவில்லை.

வெளியிலிருந்து வந்து அடக்கியாண்ட வெள்ளைக்காரனோடு விடுதலைப் போர் தொடுத்த அதே வேளையில், உள்நாட்டிலே ஒரு சிலரை அடிமைப்படுத்தி வைத்திருந்த கொடுமையை சாடுகின்ற நேர்மையும், நெஞ்சுறுதியும், விறலும், வீரமும், பரிவும் பாரதியாரிடம் பரிணமித்தன.

பிலகரி ராகத்திலே அமைக்கப்பட்ட அவருடைய ''விடுதலை, விடுதலை, விடுதலை...'' என்ற பாடல் பாரதியார் பாடிய தேசிய கீதங்களுள் ஒரு ''மாஸ்டர் பீஸ்'' ஆகும்.

*பறைய ருக்கு மிங்கு தீயர்*
*புலைய ருக்கும் விடுதலை!*
*பரவரோடு குறவ ருக்கு*
*மறவ ருக்கும் விடுதலை!*
*திறமை கொண்ட தீமையற்ற*
*தொழில் புரிந்து யாவரும்*
*தேர்ந்தகல்வி ஞானமெய்தி*
*வாழ்வ மிந்த நாட்டிலே.*

*

*ஏழை யென்றும் அடிமையென்றும்*
*எவனு மில்லை, ஜாதியில்*
*இழிவு கொண்ட மனிதரென்பர்*
*இந்தி யாவில் இல்லையே*
*வாழி கல்வி செல்வமெய்தி*
*மனம கிழ்ந்து கூடியே*
*மனிதர் யாரு மொருநி கர்ச*
*மானமாக வாழ்வமே.*

*

*மாதர் தம்மை இழிவு செய்யு*
*மடமை யைக்கொளுத்துவோம்*
*வைய வாழ்வு தன்னி லெந்த*
*வகையி லும்ந மக்குளே*

- எஸ்.டி.சிவநாயகம் -

*தாதரென்ற நிலைமை மாறி*
*ஆண்க ளோடு பெண்களும்*
*சரிநி கர்ச மான மாக*
*வாழ்வ மிந்த நாட்டிலே*

இவ்வாறெல்லாம் பாரதியார் சொல் புதிதாய், சுவை புதிதாய், பொருள் புதிதாய் பாடிய புரட்சிகரமான சுதந்திர இயக்கப் பாடல்கள்தாம் அவரை, ஏனைய கவிஞர் கூட்டத்திலிருந்து பிரித்தெடுத்து, தனித்துவமான ஒரு தேசியக் கவிஞராக ஆக்கி வைத்தன.

ஆயினும், அவர் வாழ்ந்த காலத்தில் அவர் உணர்ச்சியையும், உள்ளத்தையும், திறமையையும், மதிப்பையும் தமிழ் மக்கள் பூரணமாக உணரத்தவறி விட்டனர். சுருங்கச் சொன்னால் அவர் புலமை, பண்டிதர்களால் அலட்சியப்படுத்தப்பட்டது.

பாரதியார் 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் காலமானார். அவர் இறந்த பின்னர் 1922 ஜனவரி மாதத்தில் அவர் மனைவி திருமதி செல்லம்மா பாரதி, தம் கணவருடைய பாடல்கள்

(22ஆம் பக்கம் பார்க்க)



# உங்கள் நடைப்பயிற்சி எப்படி இருக்க வேண்டும்?

கேள்வி: ஆண். வயது 28. எனது இரண்டு கால்களிலும் வட்டம் வட்டமாக வெள்ளைத் தோல் ஏற்பட்டுள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் இடதுகாலில் ஒரு சருமநோய் வந்தது. அந்த இடம் அரிப்பும் தந்தது. மருத்துவரிடம் காட்டியபோது அது ஒருவகை 'பங்கசு' (Fungus) தொற்று என்றார். அந்தத் தோலில்தான் பின்னர் நிறம் மாறி வெள்ளையாகிவிட்டது. அந்த Patch மெல்ல மெல்ல பெரிதாகி இப்போது 50 சத வடிவில் உள்ளது. சிறிதுநாட்களின் பின்னர் - இந்த இடத்தை விட்டு சற்று தூரத்திலும் - மற்றக்காலிலும் இம்மாதிரி வெள்ளை Patches வந்தன. இந்த வெள்ளை Patch உள்ள இடங்களில் அரிப்பும் உள்ளது. எனது சித்தப்பாவின் குழந்தைகள் இருவருக்கும் இதுபோல் சமீபகாலமாக ஏற்பட்டுள்ளது. இது எதனால் ஏற்படுகின்றது?

பதில்: இப்படி வெள்ளை நிறமாக தோல் மாறுவதற்கு பல காரணங்கள் உள்ளன. முக்கியமான காரணம் வெண்குஷ்டநோய் எனப்படும் Vitiligo நோயாகும். தவறாக இந்த நோயை தமிழில் வெண்குஷ்ட நோய் என்று அழைக்கின்றார்கள். உண்மையில் இந்த நோய்க்கும் குஷ்டநோய் எனப்படும் Leprosy நோய்க்கும் எதுவித சம்பந்தமுமில்லை. எப்படியென்றாலும் இது Vitiligo நோய் என்பது முதலில் உறுதிப்படுத்தப்படவேண்டும். சருமநோய் நிபுணரின் ஆலோசனை இங்கு அவசியமாகின்றது. Vitiligo என்கின்ற இந்தச் சருமவியாதி எந்தவயதிலும் ஏற்படலாம். இது ஒரு தொற்றுவியாதியல்ல. இந்த நோயால் உடல்நலம் பாதிக்கப்படமாட்டாது. முற்றாக இரு ஒரு Cosmetic எனப்படும் அழகியல் பிரச்சினை. ஆனால், இதனால் மனோநிலை பாதிக்கப்படும். ஒரு சிலருக்கு சிறிதுகாலத்திற்கு இது பரவி அதன் பின்னர் அப்படியே மேலும் பரவாமல் இருந்துவிடும். பின்னர் திடீரென்று உடலில் திரும்பவும் ஏற்படும். இப்படி பரவுவதும், நிற்பதும், பின்னர் பரவுவதும் தொடர்ந்து நடைபெற சந்தர்ப்பம் உண்டு. இதனை முற்றாக குணமாக்க ஒரு சிகிச்சையோ, மருந்தோ இதுவரை இல்லை. Psoralen, Steroids போன்ற மருந்துகள் தற்காலிக குணம் தரலாம்.

* * *

கேள்வி: வயது 45. ஆண். எடை 75 கிலோகிராம். எடை குறைவதற்காக தினமும் நடக்கின்றேன். எனது சந்தேகம் என்னவென்றால் - மெதுவாக நீண்ட நேரம் நடப்பது நல்லதா அல்லது விரைவாக குறைந்தநேரம் நடப்பது நல்லதா என்பதே. உங்கள் மருத்துவ கருத்து என்ன?

பதில்: விரைவாக குறைந்தநேரம் நடக்கும்போது உடலியலில் உள்ள சக்தித் தொகுதியில் (Energy System) ஏற்படும் மாற்றங்களும் மெதுவாக நீண்டநேரம் நடக்கும் போது அத்தொகுதியில் ஏற்படும் மாற்றங்களும் வெவ்வேறானவை. இரண்டு நடைப்பயிற்சிகளினாலும்

> இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
>
> நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
>
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 85, ஜயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை, கொழும்பு-14.


பலன்கள் உண்டு. இந்தப் பலன்கள் - எதற்காக - என்ன காரணத்திற்காக நடக்கின்றீர்கள் என்பதிலும், எப்படி அந்த நோக்கை அடைய எண்ணியுள்ளீர்கள் என்பதிலும் தங்கியுள்ளது.

விரைவாக நடப்பதென்பது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக இருக்கும். நடப்பவரின் வயது, நடப்பவரின் தேகநலம், நடப்பவரின் சக்தி - Fitness என்பவற்றை பொறுத்து வித்தியாசப்படும். எனவே, மருத்துவ உலகம் ஒருவர் என்ன வேகத்தில் நடக்க வேண்டும் என்று கணக்கிட்டுக் கூறியுள்ளது. அதாவது, ஒருவரின் அதிகளவான இருதய துடிப்பில் 60-85 வீதமான இருதயத் துடிப்பு ஏற்படும் வரை வேகமா[illegible] நடக்க[illegible]லாம் என்று மருத்துவ ஆய்வு கூறுகின்றது. ஒருத்தரின் அதிகளவான இருதயத் துடிப்பு Maximum Heart Rate என்பதை 220 இலிருந்து அவரின் வயதைக் கழித்து கணக்கிட லாம். உதாரணமாக, 45 வயதுள்ள உங்களுக்கு அதிகளவு இதயத்துடிப்பு (220-45) 175 ஆகும். எனவே, உங்கள் வேகம் இந்த இதயத் துடிப்பின் 65-85 வீதத்தினுள் இருக்கவேண்டும். அதாவது, 175 இன் 65 சதவீதம் கிட்டத்தட்ட 114 துடிப்புகள். 175 இன் 85 சதவீதம் கிட்டத் தட்ட 149 துடிப்புகள். எனவே, நீங்கள் உங்கள் நாடித்துடிப்பு 114 தொடக்கம் 149 வரை ஏறும் வரை விரைவாக நடப்பது ஆரோக்கியமானது. ஒவ்வொருவரும் தமது வேகத்திற்குரிய நடையை இந்தக் கணக் கீட்டின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். பொதுவாக நல்ல தேகாரோக்கியம் உள்ள ஆண்கள் நிமிடத்திற்கு 120 அடிகள் எடுத்து வைத்து ஒருமணி நேரம் நடக்கலாம். இந்த வேகத்தில் 6-8 கிலோ மீற்றர் தூரத்தை ஒருமணி நேரத்தில்



நடக்கமுடியும். அதேபோல ஆரோக்கியமான பெண்கள் நிமிடத்திற்கு 140 அடிகள் (Steps) என்றவகையில் இந்தத் தூரத்தை நடக்கலாம்.

எழுந்தமானத்தில் உங்கள் நடை வேகத்தை அதிகரிக்கக்கூடாது. மெல்ல மெல்ல வேகத்தை அதிகரிப்பதுதான் தசைகளுக்கு ஏற்படும் காயப்படுத்தலை குறைக்கும். அத்தோடு தேவையற்ற ஆரோக்கிய பின்விளைவுகளையும் தவிர்க்கும். நடக்கும்போது உடலை நேராக வைத்துக்கொண்டு (Streamlined Body) நடக்கவேண்டும். கைகள் இரண்டையும் பக்கவாட்டில் உடலோடு ஒட்டியபடி வைத்துக்கொண்டு முழங்கை மூட்டை 90 பாகை மடக்கி நடக்க வேண்டும். நடக்கும்போது முன்னும் பின்னும் அசையவேண்டும். இந்த அசைவுதான் உங்கள் உடலை இலகுவில் முன்னால் தள்ளிச் செலுத்தும்.



* * *

கேள்வி: எனது 2½ வயது மகளுக்கு கடந்த 45 நாட்களாகத் தடுமல். ஆனால், காய்ச்சல் இல்லை. மூக்கால் சளி வழிந்து கொண்டிருக் கின்றது. தும்மல், இருமல் சேர்ந்து இருக்கின்றது. அவர் முன்பள்ளி (Montessori) பாடசாலைக்குச் சென்றபின்னர்தான் இப்படி அடிக்கடி ஏற்படுகின்றது. பாடசாலை விடுமுறை நாட்களில் இந்த தடுமல் ஏற்படுவதில்லை. இப்படி அடிக்கடி தடுமல் ஏற்படுவதற்கு காரணம் என்ன?

பதில்: முன்பள்ளிக்கு குழந்தைகள் புதிதாகச் சேரும்போது அவர்களுக்கு தடுமல் ஏற்படுவது சாதாரணமாக நடை பெறும் விஷயம் ஒன்றே. முக்கியமாக தாயும் தகப்பனும் உத்தியோகம் பார்ப்ப வர்களாக இருக்கும்போது குழந்தை களின் உடலும் உள்ளமும் சரியாக விருத்திய டைய முன்னர் அவர்களை அவசரப் பட்டு, முன்பள்ளியில் சேர்த்து விடுகிறார்கள். மருத்துவ ஆய்வொன்றில் இப்படி யாக உடலும் உள்ளமும் முழுமைபெறும் முன்னர் முன்பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளிடையே ஒவ்வாமை, தடுமல், ஆஸ்துமா வியாதி என்பவை அதிகமாக காணப்படுவது மருத்துவ உலகில் அறியப்பட்டுள்ளது. பெற்றோருக்கு ஆஸ்துமா அல்லது ஒவ்வாமை இருந்தால் குழந்தைகளுக்கு இந்த வயதில் இவை ஏற்படும் சந்தர்ப்பம் முன்பள்ளிக் குழந்தைகளி டையே அதிகமாகக் காணப்படு வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இன்றைய பொருளாதார நெருக்கடியான காலத்தில் கணவன் - மனைவி இருவரும் உத்தியோகம் பார்க்கும்போது இத்தகைய நிகழ்வுகள் தவிர்க்க முடியாதவை. என்றாலும் பின்வரும் வழிமுறைகளை பின்பற்றிப் பாருங்கள். குழந்தைக்கு அந்த அந்த வயதில் தரப்படவேண்டிய தடுப்பூசி மருந்துகளை தவறாமல் கொடுத்து விடுங்கள். தடுமல் என்பது அநேகமாக வைரஸ் தொற்றாகத்தான் இருக்கும். இவற்றிற்கு Antibiotics எனப்படுகின்ற நுண்ணுயிர் கொல்லி மருந்துகளால் எதுவித பயனுமில்லை. எனவே, தகுந்த மருத்துவரின் ஆலோசனையின்றி இந்த மருந்துகளை அவ்சியமில்லாமல் உபயோகிக்கவேண்டாம். குழந்தைக்கு பழவகைகள், பாலுணவுகள் நிறையக் கொடுங்கள். ஒவ்வாமை எதுவும் இருப்பின் அதற்குரிய காரணிகளை தவிருங்கள். வீடு, கட்டில் மெத்தை என்பவற்றில் தூசிகள் சேராமல் கவனியுங்கள். கணவர் புகைபிடிப்பவராக இருப்பின் குழந்தை நலன்கருதி வீட்டில் இருக்கும்போது புகைத்தலை தவிர்க்கவேண்டுங்கள். தடுமல் காய்ச்சலுடன் வீடுவரும் விருந்தினர்கள் குழந்தையுடன் நெருங்கிப் பழகுவதை தவிர்க்க முயலுங்கள். குழந்தைக்குப் பெற்றோரின் கவனிப்பும், அன்பும் நிறைய கிடைப்பதற்காக குழந்தையுடன் அதிகநேரம் செலவழியுங்கள். அநேகமாக முன்பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு ஆரம்பத்தில் இப்படி அடிக்கடி தடுமல் வருவதும் ஓர் ஆறு மாத காலத்தின் பின்னர் இந்தப் பிரச்சினை மறைந்து போவதும் எனது அனுபவத்தில் சந்தித்திருக்கின்றேன்.

* * *

# பித்தன் பதில்கள்



ப.சுகு,
கண்டி.

**கேள்வி:** வாழ்க்கையின் ருசி தெரிய வருவது எப்போது...?

**பதில்:** பசி எழும் போது.

ராசீக்,
தெஹிவோவிற்ற.

**கேள்வி:** ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?

**பதில்:** ஐம்பதிலும் ஆசை வரும் என்கிறார்களே...!

பாரதி,
புண்டிருப்பு.

**கேள்வி:** வீட்டில் கிளிபோல மனைவி இருக்க வெளியில் குரங்கு போல சின்ன வீடுகளைத் தேடுவோர் எண்ணம்தான் என்ன பித்தூ...!

**பதில்:** 'கோழி முடமானாலும் குழம்பு ருசியாக இருந்தால் சரி' என்ற எண்ணம் கொண்டவர்கள் போலும்.

ரகுராம்,
தெகிவளை.

**கேள்வி:** 'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்' என்கிறார்கள். அப்படியானால் கணவன் அமைவதெல்லாம்...?



**பதில்:** இப்போதெல்லாம் பெரும்பாலும் சீதனம் கொடுத்த வரம்...!

எஸ்.குமார்,
வெள்ளவத்தை.

**கேள்வி:** 'அன்னநடை, மின்னல் இடை' என்றெல்லாம் பக்கத்து வீட்டுப் பெண்ணை வர்ணிக்கலாமா...?

**பதில்:** 'பல்லை உடை' என்று அவர் பதிலுக்குப் புறப்பட்டால் உம் கதி என்னவோ...?

விவேக்,
வவுனியா.

**கேள்வி:** சம்சாரத்தின் ஆழத்தை அறியமுடியவில்லையே பித்தூ...?

**பதில்:** சம்சார சாகரம் (சமுத்திரம்) என்பது இதனால்தானோ...!

இஸ்வான்,
அநுராதபுரம்.

**கேள்வி:** ரசிப்பதற்கும் ருசிப்பதற்கும் வேறுபாடு என்னவோ பித்தரே...!

**பதில்:** 'சைட்' அடித்தால் அது ரசிப்பது. அதை ருசிக்க முற்பட்டால்...?

ஹாஸன்,
சீனன்குடா.

**கேள்வி:** கட்டாக்காலிகளைத் திருத்த வழி என்னதான் பித்தரே...!

**பதில்:** (கால்) கட்டுப் போடுவதுதான்!

என்.சுரேஷ்,
கன்னியா.

**கேள்வி:** பகல் கனவின்போது மனைவி என்னைத் துரத்தித் துரத்தி அடித்து விரட்டுகின்றாளே...!

**பதில்:** நனவில் நடப்பதைப் பகல் கனவாய் கதை விடுகின்றீர். அவ்வளவுதான்!

ப.நிலா,
மன்னார்.

**கேள்வி:** கண்டதை எல்லாம் விரும்பலாமா?

**பதில்:** கொண்டதை மட்டும் விரும்பும்!

ராகுல்,
பட்டிருப்பு.

**கேள்வி:** முற்றும் துறக்கும் மனம் மனிதனுக்கு எப்போது வரும்...?

**பதில்:** அதுதான் அவ்வப்போது குளியலறையில் குளிக்கும்போது வருகின்றதே...!

பெ.கமல்ராஜ்,
திருமலை.

**கேள்வி:** நான் வாலை ஆட்டிக் குழைந்தாலும் என் மனைவி 'வள் வள்' என்று பாய்கிறாளே... எங்களில் யார் நாய்...?



**பதில்:** இருவரும்தான். அதனால் தினசரி கொழுவல்தான்...!

வி.ராஜன்,
நாவலப்பிட்டி.

**கேள்வி:** காதல் - யாருக்கு இனிக்கும்?

**பதில்:** நைன்ரீனுக்கு இனிக்கும். நைன்ரிக்குக் கசக்கும்.

நகுலன்,
யாழ்ப்பாணம்.

**கேள்வி:** என் நண்பனுக்கு வயது நாற்பது. இன்னும் நல்ல சீதனத்துடன் பெண் கிடைப்பாள் என்று காத்திருக்கிறானே...!



**பதில்:** கொக்கு சைவக் கொக்கு. கொழுத்த மீனுக்காகத் தவஞ்செய்கிறது...!

சுகு,
கொழும்பு.

**கேள்வி:** அணில் கடித்த கனியை ஏற்றுக்கொள்ளலாமா?

**பதில்:** தப்பு கனியில் இல்லை என்றால் ஏற்றுக்கொள்வதில் என்ன தப்பு...?

நிராஜ்,
நல்லூர்.

**கேள்வி:** காதலைப் பாசவலை என்று சொல்லலாமா?

**பதில்:** நிறைவேறினால் பாசவலை. காலை வாரினால் மோசவலை.

சுஹைர்,
மடக்கும்பர.

**கேள்வி:** ஸிக்ஸ்டீனில் கவர்ச்சியாக இருப்பது ஸிக்டியில்...?

**பதில்:** அலர்ஜியாக இருக்கும்.

மாதவன்,
வென்னப்புவ.

**கேள்வி:** தண்ணியில் மிதந்த அனுபவம் உண்டா பித்தரே...!

**பதில்:** தண்ணீரில் மிதந்த அனுபவம் உண்டு. தண்ணியில் மிதந்ததைப் பார்த்ததோடு சரி.



காஞ்சனா,
நீர்கொழும்பு.

**கேள்வி:** பெண்ணுக்குப் பெருமை சேர்ப்பது எதுவோ...?

**பதில்:** பெண்மைதான். மை இல்லாவிட்டால் பேனாவால் பயனில்லை. அதுபோல பெண்மையைப் பேணாவிட்டால் பெண்மைக்கு மதிப்பில்லை.

ப.மணியம்,
சுன்னாகம்.

**கேள்வி:** காதல் கல்யாணத்துக்கு சாதகப் பொருத்தம் அவசியமா...?

**பதில்:** மனப் பொருத்தம் இருந்தால் மற்றப் பொருத்தங்கள் எதற்கு...?

அமீனா பேகம்,
கிண்ணியா.

**கேள்வி:** பாதுகாப்புக் கெடுபிடி கடற்கரை வரை வந்துவிட்டது என சினந்து கொள்கின்றனவே காதல் ஜோடிகள்...?

**பதில்:** அப்படியானால், 'இடவசதி இல்லாததால் பதிவிரதைகள்' எண்ணிக்கை இனிக்கூடும் என்கிறீர்...!

# நலமோடு வாழ்க எம்மான்



பேராசிரியர் சபா ஜெயராசா

எம் நாட்டின் தவப்புதல்வர்களுள் ஒருவரைப்பற்றி எழுதத் தொடங்குகிறேன். அத்தருணத்திலே எனது மனப்பதிவிலே சில வரிகள் நினைவுக்கு வருகின்றன.

''வாயினாலும் சொல்லிடவும்



கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சட்ட நூலகத் திறப்பு விழாவின் போது, நூல்களை அன்பளிப்புச் செய்த பெரியோர்களின் திருவுருவப் படங்களை பேராசிரியர் சோ.சந்திரசேகரம் திறந்துவைக்கிறார். பேராசிரியர் சபா ஜெயராசாவும் படத்தில் காணப்படுகிறார்.

அடங்கா துப்பா
வரிசையுடன் எழுதி வைக்க
வகையுமில்லை''

என்பதே அவ்வரிகள். அத்தகைய பெருமைமிக்க ஆசான் என்னைப் போலவே பலரது மனங்களையுங் கொள்ளை கொண்டவர்.

வண்ணமும் மணமும் வாய்ந்த மலர்மாலையிலே பிணைக்கப்பட்டிருக்கும் நறுமலர் ஒன்று தன் மெல்லிதழ்களாலே மற்ற மலர்களையும் ஒன்று சேர பிணைத்து நிற்குமானால் அந்த மலரினது அழகையும் பண்பையும் என்னவென்று வியப்பது! எமது நாட்டின் பல்கலைக்கழகங்களில் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களுள் இவரும் ஒருவர். எம்போன்ற பலரை வழிநடத்தி வைத்தவர். அந்த வகையிலே ஏணி போல நின்று பலரது அறிவுக்கண்ணைத் திறந்து வைத்து அவர்கள் யாவரையும் புதுயுகம் படைக்க வைத்தவரே பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள்.

''தீதும் நன்றும் பிறர்தர வாரா'' என்பதற்கு இணங்க எமது பேராசான், ஆசிரியராக - கல்வியியல் விரிவுரையாளராக - கல்வியியல் துறைத் தலைவராக - பதில் கலைப்பீடாதிபதியாக - உயர்பட்டப் படிப்புக்கள் பதில் பீடாதிபதியாக நாளுக்கு நாள் தன் இருப்பை வளர்த்துக் கொண்டவர். அவரது விடா முயற்சி, வேகம் சக்தி, சுறுசுறுப்பு என்பன இத்தகையதொரு மேன்மையைப் பெற்றுக் கொடுத்தன எனலாம். நல்லன நாடுவதில் வல்லவர்; நல்லன செய்வதில் செயல் வீரர்; பிறர் நலம் காண்பதில் அன்புருவமானவர். அவ்வண்ணம் தான் பெற்ற அறிவு அனுபவங்களை உலகத்தவருக்கு எடுத்துரைக்கவும் அவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் விரும்பி பற்பல ஆக்கங்களை வெளிக்கொணர்ந்தவர்.

அறிவியல் எல்லைகள் நாளுக்கு நாள் விரிந்துகொண்டே வருகின்றன. ஆராய்ச்சித் துறைகளுமோ பல்கிப் பெருகி வருகின்றன. உலகிலே விரிந்து கிடக்கும் அறிவுப் பெருக்கத்தையெல்லாம் சுருக்கமாக ஆனால், விளக்கமாக அறிந்திருக்க மக்களை வழிநடத்த விரும்பினார். தான் வழிகாட்டும் மாணவரை மட்டுமன்றி இலங்கையில் ஏனைய பல்கலைக்கழகங்களில் கற்பவர்கள் கூட கருத்துகளை அறிந்திருக்க வேண்டுமென விரும்பினார். அதனால் அவரது பணிகள் பல்துறைகளிலே பல்கிப் பெருகின. அவை யாவற்றையும் நான் குறிப்பிட்டுக்காட்ட வேண்டிய அவசியமே இல்லை.

கல்வி உளவியல், கல்வியியல், கலை இலக்கிய திறனாய்வு சார்பான நூல்களை வெளியிட்டார். அந்த வெளியீடுகளில் ஐந்து நூல்களுக்கு அரச விருது கிடைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வுலகில் நல்லறிஞர்கள் பலரை நாம் அறிந்திருக்கிறோம். பேச்சிலே வல்லவர்கள் சிலர். எழுத்திலே வல்லவர்கள் சிலர். இவை இரண்டிலும் வல்லவர்களுக்கு பிறரோடு நயமாக உரையாடத் தெரியாது. இம்மூன்றிலும் சிறந்தவர்களுக்கு இலக்கியத்திறன் அதிலும் ஆக்கத்திறன் இருக்காது. இவை யாவற்றிலும் ஒப்பாரும் மிக்காரும் அற்றவராக பேராசான் திகழ்கின்றார்.

**பேராசிரியர் சபா ஜெயராசாவின் பணிநலன் பாராட்டு விழாவும் சிறப்பு மலர் வெளியீடும் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு வெள்ளவத்தை இராம கிருஷ்ண மண்டபத்தில் நடைபெறுகிறது. அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

அவர்களது கைவண்ணத்தையும் கருத்து வண்ணத்தையும் நல்ல உள்ளத்திலே பிறந்த நாவண்ணத்தையும் எம் நாட்டவர் நன்றாகவே அறிவர். அழகு மிக்க சொற்களை ஆற்றலோடு பயன்படுத்தி பிறரை ஈர்த்த சிறப்பு பேராசிரியருக்கு உண்டு. ''சொற்களுக்கும் உயிர் உண்டு'' என்னும் கூற்று அவரது பேச்சால் உறுதிப்படுகிறது. கண்டதையும் வாசித்து நுகர்ந்த அனுபவப் பதிவுகள் அவரது ஆக்கங்களிலே வெளிப்படுகின்றன.

தமிழாசிரியர்களது நிலை உயர வேண்டும் என்பது அவர்களது பேரவா. உளவியலை மையப்படுத்தி

**கலாநிதி த. முத்துக்குமாரசாமி**
அதிபர் - பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி

ஆசிரியர்களுக்கு வழிகாட்டக் கட்டுரைகள் மட்டுமல்ல நூல்களையும் எழுதினார். ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களை பல்கலைக்கழகங்களினுள் வழிநடத்தி வைத்தவர். அம்மாணவர்களுக்கு ஆய்வுக் கருத்துக்களை நயமாக எடுத்துரைப்பார். விளங்க முடியாத ஆய்வுச் செய்திகளை தமிழ்ப்படுத்திக் கூறி அவர்கள் மத்தியில் அறிவொளி ஊட்டியவரே பேராசிரியர். ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்பதே இவரது வாழ்வின் அர்த்தமாகவும் இருந்தது.

வாசிப்பினால் பெற்ற நூலறிவோடு சிறந்த நுண்மதியும் வாய்க்கப் பெற்ற பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களின் பணிகளை நினைவு கூர்ந்ததில் பெருமைப்படுகிறேன். அவரைப்பற்றி இன்னமும் எவ்வளவோ எழுதலாம். பொதுவாக பேராசிரியரிடம் நான் கண்ட பண்புகளைச் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். மொழிப்பற்று உடையவர்; சுருங்கச் சொல்லி விளங்க வைப்பவர்; நயமிக்க பேசுபவர்; நாகரிகமாக பழகுபவர்; சலியா உழைப்பாளி; பிறரது நிறைகாணும் திறமை மிக்கவர்; அடங்கிய தோற்றம் உடையவர்; தூய உள்ளம்கொண்டவர்; அன்புருவமானவர்; இத்தகைய பண்புகளை இவரிடம் கற்ற இளைஞர் உலகும் ஆசிரியர் உலகும் இப்பண்பின் வழி வாழ்ந்தாலே போதும் எமது நாடு முன்னேறும்.

அத்தகு பேராசிரியரை அவர்களின் பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் சார்பிலும் ஆசிரியர் சார்பிலும் வாழ்த்துவதில் பெருமைப்படுகிறேன். அவர்களை நான் வாழ்த்துவதில் பெருமைப்படுகிறேன். அவர்களை அன்போடு வாழ்த்துவதா? ஆம். நாம் வாழ அவர்களை அன்போடு வாழ்த்துகிறேன்.

பல்லாண்டு காலம்
நலமோடு வாழ்க ✱




(கடந்த வாரத் தொடர்ச்சி)

மனோகர் திடுக்கிட்டுப் பார்த்து, ''அதைப் பார்க்காதே! அணைச்சிரு'' என்றான்.

''அணைக்க முடியாதே, தெருவிளக்கு மாதிரியாச்சே இது! இரு, என்ன சொல்றாங்க உன்னைப் பத்தி? பார்க்கலாம்!''

தொலைக்காட்சி பேசத் துவங்கியது.

''நேற்றுவரை இந்திய அரசின் விஞ்ஞானத் தலைவராக இருந்த, இந்தப் படத்தில் உள்ள டாக்டர் முனுசாமி மனோகர் தலைமறைவாகிவிட்டார். கட்சிக் கொள்கைகளையும் அரசின் நோக்கங்களையும் ஆணைகளையும் மீறி அபாயகரமான ஆராய்ச்சி செய்த குற்றத்துக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார். இவரைக் கண்டவர்கள் உடனுக்குடன் அருகாமையில் உள்ள அரசொலி அலுவலகத்திற்குச் செய்தி தெரிவிக்கவேண்டும். இவருக்குச் சரண் அளிப்பதும் இவரைப் பற்றிய தகவல்களை மறைத்து வைத்திருப்பதும் மிகப்பெரிய குற்றம். அவர்களுக்கும் மரண தண்டனை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. நகரம் நகரமாக அரசு இந்தத் துரோகியைத் தேடிக் கொண்டிருக்கிறது. இந்தப் புகைப் படங்களை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள்...'' மனோகரின் முகத்தைப் பற்பல கோணங்களில் கரைந்து கரைந்து காட்டிக்கொண்டிருந்தது. ''இந்த அறிவிப்பு, செய்தியின் இறுதியில் மறுபடி காட்டப்படும். இதுகுறித்துத் தலைவரும் பேசியிருக்கிறார். இனி செய்தி. நாட்டில் இருநூறு கிராம் சோயா அதிகப்படியாக வழங்கும்படி எல்லா அரசாங்க அங்காடிகளுக்கும் உத்தரவு விடப்பட்டிருக்கிறது. புரதச்சத்து அதிகம் உள்ள சோயாவைச் சாப்பிடுவது மக்களின் கடமையாகும்...''

நான் திகைத்துப்போய் மதியைப் பார்த்தேன். மதி மனோகரையே பார்த்துக்கொண்டிருந்தாள். ''நான் அப்பவே நினைச்சேங்க'' என்றாள்.

எனக்கு அச்சமாக இருந்தது. ஜன்னல் கதவைத் தன்னிச்சையாக சாத்திவிட்டு வந்ததை மதி கவனித்தாள்.

''சொல்லுங்க. என்ன குற்றம் செய்தீங்க?''

மனோகர் சற்றுநேரம் மௌனமாக இருந்தான். ''நான் செய்த குற்றம் இதாம்மா'' என்று அட்டைப் பெட்டியைக் காட்டினான். ''ஒரு ஜந்து, ஒரு உயிர். இதை நான் என்னுடைய ஆராய்ச்சிச்சாலையில் சிருஷ்டி பண்ணினேன்.''

மதி கொண்டுவந்திருந்த கூழை ஒரு ஸ்பூன் கேட்டு, அதால் எடுத்து அதற்குக் கொடுத்தான். ''எப்படி உறிஞ்சிக்குது பாருங்க!''

மதி தயக்கத்துடன் எட்டிப்பார்த்தாள்.

''இது என்னங்க? என்னவோ கொசகொசன்னு... கடிக்குமா?''

''ஒண்ணும் செய்யாது. கண்ணில்லை, காலில்லை. ஒரு பிண்டம் இது. அவ்வளவுதான். கொஞ்சம் கொஞ்சமா கொடுத்த உணவை இரசாயன முறையில மாத்திக்குது. எத்தனை ஆச்சரியம் பாருங்க! இதைச் செஞ்சதுதான் தப்பாம். தேசத் துரோகமாம். அதுக்கு எனக்கு மரண தண்டனையாம்!''

''புரியலீங்க. இது வந்து... நீங்க சிருஷ்டி பண்ணீங்கன்னா எப்படி?''

''உங்களுக்குப் புரியறது கஷ்டம்தான். இருந்தாலும் சொல்றேன். ரொம்ப எளிய முறையில் சொல்லப்போனா ஒருவிதமா ஒட்டு வேலை கத்தரி வேலை செஞ்சேன். 'கோம்பினண்ட்டி என் ஏ'ன்னு சொல்வாங்க..''

''அதனால என்ன ஆகும்?''

''ரெண்டு மாலிக்யூல் இருக்குது சங்கிலி மாதிரி. அதை அதுல பாதி இதுல பாதின்னு வெட்டி ஒட்டி வெச்சு, அதை ஒருசெல்லுல போட்டா, அந்த செல்லுல புதிய உயிரா வளர்ந்து .. இத பாருங்க, இந்த ரூபத்துக்கு வந்திருக்கு! அதில் ஏதாவது ஆபத்தா? என்னமாதுவா இருக்குது, பாருங்க. முகமில்லை, காலில்லை, கையில்லை, பேச்சில்லை. 'இதைச்

''இதனால என்ன ஆயிடப்போவுது?''

''என்னவோ பயம்!'' என்று அந்த அட்டைப் பெட்டியை மூடிவிட்டு, ''ஷண்முகம், ராத்திரி எப்பப் பாரா வருவாங்க?''

''பதினொரு மணிக்கு.''

''அதுக்குள்ளே பொறப்பட்டுப் போயிடுறேன்.''

''எங்க போவீங்க?'' என்றாள் மதி.

''வேலி தாண்டித்தான். அண்டை நாட்டுக்குத்தான்.''

''ஐயோ, வேலியைத் தாண்டப்போறீங்களா? அதில முழுக்க முழுக்க கரண்டுன்னு சொல்றாங்க?''



''அதெல்லாம் பயப்படுத்தி வெச்சிருக்காங்க. யாரும் பரீட்சை பண்ணாம இருக்க. அவ்வளவு தூரத்துக்குக் கரண்டே நம்ம நாட்டிலே கிடையாது. யுத்தத்துக்கு அப்புறம் எல்லாத்திலேயும் பஞ்சம். ஷண்முகம், என்னால உங்க ரெண்டு பேருக்கும் ஆபத்து ஏதும் வரக்கூடாது. அவங்க என்னைத் தேடிட்டு வரதுக்குள்ளே நான் பொறப்பட்டுப் போயிட்டன்னா உங்களைத் துன்புறுத்த மாட்டாங்க.''

''நீங்க இந்த வீட்டில இருக்கிறது யாருக்கும் தெரியுங்களா?''

''தெரியாது. தெரிஞ்சுரும். இந்நேரம் அவங்க என் ஜாதகம் முழுக்க அலசிக்கிட்டு இருப்பாங்க. அதுக்கெல்லாம் கணக்கா கம்ப்யூட்டர் நல்லாத்தான் வெச்சிருக்காங்க...''

''சாப்பிட்டுப் போயிருங்க. சீனி மிச்சம் பிடிச்சுச் சேர்த்து வைச்சிருக்கேன். பாயாசம் பண்ணிடலாம்'' என்றாள் குரலில் சதியுடன்.

''இல்லை மதி, அவன் அவசரத்தில இருக்கானில்லை.''

''இப்ப நீங்க பயப்படறீங்க. என்ன ஆயிடும்? அவங்க யாராவது, வந்தா கூடைக்குள்ளே மறைச்சு வைச்சுரலாம். சாப்பிட்டுப் போங்க.''

''இல்லம்மா. என்னை இந்த வீட்டில அவங்க பார்த்தாக்கு உங்க உயிருக்கு ஆபத்து. அதுக்குத்தான்...''

''அதுக்குத்தான்...'' என்று நானும் இழுத்தேன்.

''வரட்டுங்க. ஆபத்து வந்தா என்ன செய்வாங்க? சுடுவாங்களா? சுடட்டுமே! அப்படியாவது சீவன் போயிரட்டும். ஆட்டு மந்தைல ஓர் ஆடு மாதிரி இருந்து என்ன பிரயோசனம்? மனோகர், நீங்க இருங்க. உங்களை ஒளிச்சு வெச்சே காப்பாத்தறோம். இத பாருங்க வாழ்க்கையில ஏதாவது பரபரப்பு இந்த மாதிரித் தேவை. ஐயா நீங்க இருங்க.''

''ஒளிச்சு வெக்கக் கூட இடம் இல்லையே மதி''

''சர்க்கார் குப்பைக்கூடை கொடுத்திருக்காங்களே எதுக்கு. வாங்க! அடைக்கலமா வந்தவங்களைக் காட்டிக்கொடுக்க மாட்டோம்'' என்றாள் மதி.

எனக்கு விலுக் விலுக் என்று மனசு உதைத்துக்கொண்டது. உண்மைதான். உயிரில்லாத வீரனாக இருப்பதைவிட உயிருள்ள புழுவாக இருப்பது மேல் என்பது என் நம்பிக்கை. மதியிடம் இத்தனை பிடிவாதம் இருக்கும் என்று நம்பவில்லை. அவளை மீறி நான் தகவல் சொல்லிவிட்டால் அந்தத் துரோகத்தை மன்னிக்கவே மாட்டாள். என்னைவிட்டுப் போய்விடுவாள். அவள் இல்லாமல், இருக்கிற ஒரு தின சந்தோசமும் போய்விடும். என்ன செய்வது? பணிந்து போக வேண்டியதுதான். எத்தனையோ பேரிடம் பணிந்தாயிற்று.

இவ்விதம் யோசித்துக்கொண்டிருக்கும் போது தலைவர் திரையில் வந்தார். அந்த நீண்ட முகம், எல்லோருக்கும் பரிச்சயமானது. அந்த நிதானப்பேச்சு, அந்தக் கண்கள்! என்னையே ஊடுருவிப் பார்க்கும் ஆயுதங்கள்!

''என் அருமைக் குடிமக்களே, இன்றைய தினம் முக்கிய செய்தியைக் கேட்டிருப்பீர்கள். முனுசாமி மனோகர் என்னுடைய வலதுகரம் போல இருந்தவன். இன்று துரோகியாகக் குற்றம்சாட்டப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கிறான். அரசின் கொள்கைகளில் உங்களுக்கு நிரந்தர விசுவாசம் ஏற்படுவதற்காக நான் ஏன் அப்படிச் செய்தேன் என்பதை மக்களுக்கு விளக்கவேண்டியது என் கடமையாகிறது. மனோகர் நம் தேசத்திற்கு எத்தனையோ செய்தவன். என் உயிர் நண்பன். அவன்மேல் ஒரு சகோதரனைப் போல பாசம் வைத்திருந்தேன்...''

''பொய். என்ன பொய் சொல்கிறான்! இருபத்து நாலு மணி நேரமும் கண்காணித்துக்கொண்டிருந்தாய்'' என்றான் மனோகர்.

''உயிர்த்தோழன் நண்பன் என்றாலும் உயிருக்குயிர் நேசனாக இருந்தாலும் நாட்டு நலம் என்று வரும்போது வலதுகையையும் வெட்டத் தயாராக இருப்பேன்! நான் என் சொந்த மகனை யுத்தத்தில் இழந்தது உங்களுக்கெல்லாம் நினைவிருக்கலாம்.''

''மற்றொரு பொய். மகனே கிடையாது உனக்கு.''

''மனோகர் செய்த குற்றம் என்ன? அதைக் கொஞ்சம் விவரமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மனித இனத்தின் விஞ்ஞானசக்தி பன்மடங்கு அதிகமானது. இரண்டுதுறைகளில்: ஒன்று அணுசக்தியில், மற்றொன்று உயிரியலில். ஒரு குழந்தையிடம் அபாயகரமான விளையாட்டுக் கருவிகள் அகப்பட்டது போல இந்த இரண்டு சக்திகளையும் பெற்றோம். அணுசக்தியின் விளைவு என்ன என்பதை நீங்களே கண்கூடாக அனுபவித்திருக்கிறீர்கள். சென்ற யுத்தத்தின் ரத்தச் சுவடுகள். அதன் தீப்புண்கள், அதன் வெடிப்புகள், விகாரங்கள் இன்னும் நம் கண்முன் மிச்சமிருக்கின்றன. எல்லா அரசாங்கங்களும் இந்த அணுசக்தி ஆராய்ச்சியை முழுவதும் தடைசெய்தது கண்டுபிடித்தபின் செய்த, இருக்கிற குருடர்கள் பிழைக்க, செய்த மிகத் தாமதமான செயல். அணுசக்தியில் செய்த தப்பை மாற்றத்தில் செய்யக்கூடாது என்று உயிரியலில் சில ஆராய்ச்சிகளை இந்த அரசு அறவே தடைசெய்திருக்கிறது. அதில் முக்கியமானதொன்று 'ரிகாம்பினண்ட் டி என் ஏ' என்கிற ஆராய்ச்சி. இதனால், சில நன்மைகள் உண்டு என்று சிலர் சொன்னாலும் இதனால், புறப்படப்போகும் பூதத்தின் வடிவமோ அளவோ தெரியாததால், இந்தத் துறையை அறவே தடைசெய்துவிட்டோம். மீறுவது தேசத்துரோகம் என்று மரண தண்டனையளவுக்குக் குற்றமாக்கினோம். இதனால் என்ன ஆபத்து என்று நீங்கள் கேட்கலாம். எளிமையாகச் சொல்லப் போனால் இந்த முறையால் சில உயிரினங்களை விஞ்ஞானிகளால் சிருஷ்டிக்கமுடியும். இதுவரை இயற்கையில் இல்லாத உயிரினங்கள் என்ன செய்யும், எப்படி வளரும் என்பதெல்லாம் தெரியவே தெரியாது. அதன் விளைவுகளும் தெரியாது. அந்த நூற்றாண்டிலேயே இதை 'கிமேரா' என்று அழைத்தார்கள். தலை ஒரு மிருகம், உடம்பு ஒன்று, வால் மற்றொன்று என்று வக்கிர கிமேரா மிருகங்கள் பழைய புராணத்தில்தான் இருந்தன. இன்று விஞ்ஞானிகள் புதிய கிமேராக்களைச் செய்துபார்க்க விழைந்ததைத் தடுத்து நிறுத்தியிருக்கிறோம். இந்தச் சூழ்நிலையில், முனுசாமி மனோகர் ரகசியமாக இந்தத் தடைசெய்யப்பட்ட ஆராய்ச்சியை நிகழ்த்தி ஓர் உயிரினத்தையும் செய்திருக்கிறான். விஷயம் வெளியே வந்ததும் அதை எடுத்துக்கொண்டு தலைமறைவாகிவிட்டான்!

என்னருமைக் குடிமக்களே! இந்த விஞ்ஞானிகளால் நாம் பட்ட பாடு போதும்! இவர்களை வேலி போட்டுக் கட்டுப்படுத்தி வைத்திருந்து, வேலியை மீறினால் தயை காட்டாமல் இவர்களை நீக்கிவிடவேண்டும். இந்தப் புல்லுருவிகள் நமக்குத் தேவையில்லை.

மனோகரின் புகைப்படங்கள் உங்களுக்குக் காட்டப்படும். யாரேனும் எங்கேனும் பார்த்தால் அருகாமை அரசொலி அலுவலகத்திற்கு உடனே தெரிவிக்க வேண்டும் என்று எச்சரிக்கிறேன். அந்த மிருகத்தை மறைத்து வைக்காதீர்கள்!''

தலைவரின் பேச்சு சற்று இடர்பட்டது. ஒரு குழந்தையின் முகத்தைக் காட்டி, 'குழந்தைகள் வேண்டுமா- உழையுங்கள்' என்று விளம்பரம் காட்டிவிட்டு, மறுபடி தலைவர் வந்தார். ''சமீபத்தில் கிடைத்த தகவலின்படி மனோகர் எல்லை நகரமான வையாபுரிக்கு சென்றிருப்பதாகத் தெரிகிறது. அங்கிருந்து அண்டைநாட்டுக்குத் தப்பிக்கமுயற்சி செய்யலாம். வையாபுரியில் யாரேனும் மனோகருக்குத் தெரிந்தவர்கள் இருந்தால்...'' தலைவர் என்னை மட்டும் தனிப்பட்டுப் பார்த்தார்... ''நண்பா, எச்சரிக்கிறேன். அவனைக் காட்டிக் கொடுத்துவிடு. நாடு வாழ்க!''

தலைவர் கரைந்து போனதும் மனோகர், ''ஷண்முகம், நான் அதிக நேரம் இருக்கமுடியாது. உனக்கும் எனக்கும் தொடர்பு இருப்பதை இன்னும் ஒருமணி நேரத்துக்குள் கண்டுப்பிடித்து இங்குவந்து விடுவார்கள். மதி, நீங்க என்னை ஒளிச்சு வைச்சாலும் பிரயோசனப்படாது. நான் உடனே வேலியைத் தாண்டணும். இங்கிருந்து பாதை தெரியுமா ஷண்முகம் உனக்கு?''

''தெரியாதே'' என்றேன்.

''ஏன் பொய் சொல்றீங்க வாங்க நான் காட்டறேன்,'' என்றாள் மதி.

''பாராக்காரன் இப்ப வரமாட்டான். இன்னும் வரலை.''

''இல்லைம்மா நான் போய் விடுறேன். வழி சொல்லிட்டா சரி.'' என்றான் மனோகர் பரிதாபத்துடன்.

''அண்டைநாட்டில் உங்களைச் சேர்த்துப்பாங்களா?''

''சேர்த்துப்பாங்க. நிச்சயம் கொல்ல மாட்டாங்க. அங்கேயும் கட்டுப்பாடுதான். அது வேறுவிதமான கட்டுப்பாடு. ஆனா உயிர் பிழைக்கமுடியும்.''

''ஒர் அட்டைப் பெட்டிக்குள் ஏதோ கொசகொசன்னு செஞ்சதுக்கா இந்தப் பாடு?''

''மதி நீ பாட்டுக்குப் பேசிக்கிட்டே நிக்காதே. சமயமாகுதில்லை!''

''அடிக்கடி உங்க கோழைத்தனத்தைக் காட்டறீங்களே பாருங்க. இந்த மாதிரி சந்தர்ப்பம் யாருக்கு வரும்? கொஞ்சம் தைரியமும் எடுத்துக்கப் பழகக்கூடாதா?''

மனோகர் யோசித்தான். ''மதி எனக்கு ஒண்ணு செய்வீங்களா?''

''செய்யறேன் சொல்லுங்க.''

''எனக்காக இதை வளர்ப்பீங்களா? அப்படியே வெயில்ல வைக்கணும். ஒருமணி நேரத்துக்கு ஒருமுறை வெந்தது ஏதாவது கொடுக்கணும். நான் போறேன். தப்பிக்க முயற்சி பண்ணிப் பாக்கறேன். அவ்வளவா நம்பிக்கை இல்லைதான். போய்ச் சேர்ந்துட்டன்னா அந்த நாட்டு வசதிகள் மூலமா எப்படியாவது இதைத் திரும்பிப் பெற முயற்சி செய்வேன். போய்ட்டன்னா - இருந்து போய்ட்டன்னா என் ஞாபகமா இதை வளருங்க. இது என்ன ஆகும், எப்படி மாறும் ஏதும் எனக்கு இன்னியத் தேதிக்குத் தெரியலை. 'இன்னும் எத்தனை நாள் உயிர் வாழும்? அதுவும் தெரியாது. இதையெல்லாம் கொஞ்சம் குறிப்பெடுத்து வைச்சுக்க. இந்த அரசு, தலைவர் எல்லாம் சாஸ்வதமில்லாதவங்க. எப்பவும் படிக்கத மயிலே சட்டிக்கிட்டு நியமத்துக்கு

(27 ஆம் பக்கம் பார்க்க)



சௌர்யம் தெலுங்கு படத்தில்
கோபிசந்த், அனுக்ஷா



# அன்னபூரணியை நம்பும் பாவனா!

'ஜெயம் கொண்டான்' படத்தில் நான் ஏற்று நடித்துள்ள அன்னபூரணி கரக்டர் தமிழில் எனது கேரியரை தூக்கி நிறுத்தும் என்ற நம்பிக்கையுடன் கூறுகிறார் தெற்றுப்பல் அழகி பாவனா.

பாவனாவை பெரிய திரையில் பார்த்து ரொம்ப நாட்களாகி விட்டது. மிகப் பெரிய இடைவெளிக்குப் பிறகு ஜெயம்கொண்டான் மூலம் ரசிகர்களைக் கலகலக்க வருகிறார் பாவனா. 'உன்னாலே உன்னாலே' புகழ் வினய்யுடன் இணைந்து இப்படத்தில் கலக்கியுள்ளார் பாவனா. கூடவே லேகா வாஷிங்டனும் இருக்கிறார்.

இப்படத்தில் பாவனாவுக்கு கிராமத்து பெண் வேடமாம். அதேசமயம் வொலிபோல் சாம்பியனாகவும் நடித்துள்ளாராம். படத்தில் பாவனாவின் பெயர் அன்னபூரணி.

"இந்தக் கேரக்டர் எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. ரசித்து செய்துள்ளேன். இப்படத்தில் நான் புத்தம் புதுப் பொலிவுடன் காணப்படுவேன். இதற்கு முக்கிய காரணம் எனது டிசைனர்தான். என்னைப் புத்தம் புதிய பெண்ணாக இதில் அவர் காட்டியுள்ளார். இப்படம் வந்த பின்னர் என்னை எல்லோரும் அன்னபூரணி என்று அழைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எனது நடிப்புக்கு நிறைய பாராட்டுகளும் கிடைக்கும்" என்கிறார் நம்பிக்கைச் சிரிப்புடன்.

இப்படத்தின் மூலம் தமிழில் நிறைய வாய்ப்புகள் வரும், கேரியர் நிலை பெறும் என்ற நம்பிக்கையுடனும் பாவனா உள்ளாராம்.

இப்போதைக்கு பாவனா கையில் தமிழ்ப்படம் ஏதும் இல்லை. தற்போது அவர் மலையாளம், தெலுங்கில்தான் தீவிர கவனம் செலுத்தி வருகிறார். ஜெயம் கொண்டானுக்குப் பிறகு தமிழிலும் தீவிரம் காட்டுவாராம்.



மேகம் படத்தில்
தமிழரசன், ராகி ராஜி







# திகில் மீ

ஷங்கர் தயாரிப்பில் உரு[illegible] திகில் படத்தில் மீரா ஜாஸ்[illegible] நடிக்கவுள்ளார்.

இயக்குநர் ஷங்கர் இப்[illegible] தயாரிப்பாளரும் கூட. அ[illegible] உருவான 'இம்சை அரச[illegible] 'வெயில்' ஆகிய படங்க[illegible] பெற்றன.

தற்போது 'ரோபோ' படத்[illegible] இருக்கும் ஷங்கர், சைட[illegible] திகில் ஒன்றையும் தயாரிக்கவுள்[illegible] இயக்கவிருப்பவர் நாகா. [illegible] தொடர்களை இயக்குவதி[illegible] கே.பாலசந்தரின் கண்டுப[illegible] இப்போது திரைப்பட இய[illegible] எடுக்கிறார்.

ஷங்கரின் தயாரிப்பில் உ[illegible] படம் ஒன்றை நாகா இயக்[illegible] படமும் அவருக்கு கைவந்[illegible] கதைதான்.

நாயகியாக மீரா ஜாஸ்மினை புக் செய்துள்ளனர். ஹீரோ உ[illegible] விவரங்களை இறுதிசெய்து [illegible] வித்தியாசமான கதையை[illegible] திரையையும் பயமுறுத்தப் [illegible] நாகா.



# சினேகா - வைஜெயந்தி ஐ.பி.எஸ்ஸில்

எண்பதுகளில் விஜயசாந்தி அதிரடி அக்சன் நாயகியாக நடித்து சக்கை போடு போட்ட படம் வைஜெயந்தி ஐ.பி.எஸ். இந்தப் படத்துக்காக தேசிய விருதெல்லாம் வாங்கினார் விஜயசாந்தி. ரீமேக் கலாசாரம் கொடிகட்டிப் பறக்கும் இந்தச் சூழலில் இந்தப் படத்தை ரீமேக்க நிறையப் பேர் முயற்சிகள் எடுத்தனர்.

முமைத்கான் கூட இதற்கான முயற்சியில் இறங்கினார். பின்னர் அதே பாணியில் மைசம்மா ஐ.பி.எஸ். என்று உல்டா செய்தார்கள்.

இப்போது ஒரிஜினல் வைஜெயந்தி ஐ.பி.எஸ். படத்தை இயக்குநர் ஆர்த்திகுமார் ரீமேக் செய்கிறார். இவர் சத்யராஜை வைத்து ஏற்கனவே 'சவுண்டு பார்ட்டி' என்ற படத்தை எடுத்தார். இந்த ரீமேக்கில் எந்த நாயகியை கதாநாயகியாகப் போடலாம் என் று யோசித்த ஆர்த்திகுமாரின் மனதில் பளிச்சென்று தோன்றியவர் புன்னகை இளவரசி சினேகாதானாம்.

விடயம் கேள்விப்பட்டதும் சந்தோஷத்தில் துள்ளிய சினேகா, உடனடியாக தனது கால்ஷீட்டு களை அள்ளி வழங்கிவிட்டாராம் இயக்குநருக்கு. இந்தப் படம் தமிழ், தெலுங்கு இருமொழிகளிலும் தயாராகிறது.



அலையோடு விளையாடு படத்தில்




நான் ஒரு மாதிரி படத்தில் இலியானா



சல்மான்கான்

பிரம்மராவ், முமைத்கான்



# நயன்தாராவாக விருப்பமில்லை - பூர்ணா

''எனக்கு தமிழ் திரையுலகில் அசின் மாதிரி வரவே விருப்பம். நயன்தாரா எனக்குப் பிடிக்கும். ஆனால், அவரது பாதை வேறு. எனக்கு அசின்தான் ரோல் மாடல்'' என்கிறார் முனியாண்டி விலங்கியல் 3ஆம் ஆண்டு புகழ் பூர்ணா.

முனியாண்டி படத்தின் பாடல் வெளியீட்டின் போது 'பூர்ணாதான் அடுத்த அசின்' என்று விஜய் வாயால் பாராட்டு பெற்றவர் பூர்ணா.

பூர்ணாவுக்குச் சொந்த ஊர் கேரள மாநிலம் கண்ணூர். மலையாளத்தில் திலீப்புடன் ஒரு படம், மோகன்லாலு டன் மூன்றுபடங்கள் நடித்துள்ளார். இப்போது பாசில் டைரக்ஷனில் ஒரு புதிய மலையாளப் படத்தில் ஒப்பந்த மாகி இருக்கிறார்.

தமிழில் இவர் நடித்த முதல்படம் 'கொடைக்கானல்', ஆனால், முதலில் திரைக்குவந்த படம் முனியாண்டி விலங்கியல் 3ஆம் ஆண்டு.

அடுத்து மணிரத்னம் உதவியாளர் சுஜா டைரக்ஷனிலும் ஒருபடம் பேச்சு வார்த்தையில் இருக்கிறதாம்.

கன்னடத்தில் 'ஜோஸ்' என்ற படத்தில் நடிக்கிறார். இன்னும் தெலுங்குக்குப் போகவேண்டியதுதான் பாக்கி.

ஏற்கனவே தமிழில் கேரள நாயகிகள்தான் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். இவர்களில் யாரைப் போல நடித்துப் புகழ்பெற விருப்பம் என்று கேட்டால் தயங்காமல் பதில் வருகிறது பூர்ணாவிடமிருந்து.

''நயன்தாரா நம்பர் வண் இடத்தில் இருக்கிறார். அவரை எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஆனால், அவரது பாதை வேறு. எனக்கு அசின் பாதையில் செல்லவே விருப்பம். ரேவதி, சுகாசினி, கோபிகா, தேவயானி... ஆகியோரைப் போல குடும்பப் பாங்கான வேடங்களில் நடித்துப் புகழ் பெற விரும்புகிறேன்...'' என்கிறார் பூர்ணா.



# ஏய்... நமீதா!

'மச்சான்ஸ்' என்ற வார்த்தையை நமீதா அடிக்கடி பயன்படுத்தினாலும் அவருக்குப் பிடித்த வார்த்தை 'ஏய்'...என்பதுதானாம்.

நமீதாவை பலருக்கும் பிடிக்கும், ஆனால், நமீதாவுக்கு என்னென்ன பிடிக்கும்?

அதை அவரே தனது திருவாயால் மலர்ந்தருளியுள்ளார் கோவையில். கோவையில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் நமீதாவின் டான்ஸ் இடம்பெற்றது. இந்த நிகழ்ச்சிக்காக வந்திருந்த நமீதா அங்கு செய்தியாளர்களிடம் மனம்விட்டுப் பல விஷயங்களைப் பகிர்ந்துகொண்டார்.

நமீதாவுக்கு மிகவும் பிடித்த விளையாட்டு கிரிக்கெட்டாம். ஒருவேளை நடிக்க வராமல் போயிருந்தால் ஸ்போர்ட்ஸில் புகுந்து பெரிய வீராங்கனையாகியிருப்பாராம்.

வேகமாக கார் ஓட்டினால் நமீதாவுக்குப் பிடிக்காதாம். வாழ்க்கை மிகவும் குறுகிய காலம். அதில் முடிந்தவரை சந்தோஷமாக இருக்கவேண்டும் என்பதுதான் நமீதாவின் குறிக்கோளாம்.

தம் அடிப்பது, தண்ணி அடிப்பது, போதை வஸ்துகளை நுகர்வது போன்றவை எல்லாம் நமீதாவுக்கு அறவே பிடிக்காத ஐட்டங்கள். இதுபோன்ற பழக்கம் உள்ளவர்களிடம் நமீதா தொடர்பு வைத்துக்கொள்ளவே மாட்டாராம்.

குழந்தைகள் என்றால் நமீதாவுக்கு ரொம்ப இஷ்டமாம். அதிலும் உடல் ஊனமுற்ற, சிறப்பு குழந்தைகள் என்றால் உயிராம். அவர்களிடம் செலுத்தும் அன்பும், பாசமும் கடவுளுக்கு செலுத்தும் காணிக்கைக்கு சமம் என்கிறார் நெகிழ்ச்சியுடன்.

தமிழ் இப்பதான் கொஞ்சம் கொஞ்சம் வாயில் வருகிறதாம். ரொம்பப் பிடித்த வார்த்தை ஏய் என்பதுதானாம்.

சரி யாருடன் நடிக்க ஆசை என்று கேட்டால் வேறு யார் ரஜினிதான், வாய்ப்பு கிடைத்தால் என்ன கேரக்டராக இருந்தாலும் நடிக்க ரெடி என்கிறார் நமீதா. அப்புறம் நமீதாவின் மனம் கவர்ந்த தமிழ்ப்பட நாயகன் விஷால்தானாம்.



...ாகவிருக்கும் புதிய
...ின் நாயகியாக
...து வெற்றிகரமான
...ரது தயாரிப்பில்
...23ஆம் புலிகேசி',
...ாபெரும் வெற்றி
...் பிசியாக
...் திகில் படம்
...ார். இப்படத்தை
...வர் திகில் டிவி
...மன்னர்.
...ப்பான நாகா
...ந்திரக அவதாரம்
...வாகவுள்ள புதிய
...கிறார். இந்தப்
...கலையான திகில்
...புக்
...ிட்ட
...கொண்டுள்ளனர்.
...புடன் பெரிய
...ாகிறேன் என்கிறார்



# மணமாகாத பெண்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?



திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பது ஒரு குற்றமல்ல, இந்த முடிவை எடுத்துவிட்டால் அதில் உறுதியாக இருங்கள். பிரம்மச்சாரிய வாழ்க்கையில் விரக்தியடைய வேண்டாம். சுயபச்சாதாபத்துக்கு இடம் கொடுக்காதீர்கள்.

தனியாக இருக்கும்போது கற்பனைத் திறனுக்கு வேலை கொடுங்கள். அதனால், நேரத்தைப் பயனுள்ள முறையில் கழிக்க முடியும்.

ஆண்களுடன் நட்பை ஏற்படுத்திக் கொள்வதில் கவனமாக இருங்கள். முன்பின் தெரியாதவருடன் நெருக்கமாகப் பேச வேண்டாம். உங்கள் அலுவலகம் மற்றும் வீட்டுத் தொலைபேசி இலக்கத்தை எவருக்கும் கொடுக்க வேண்டாம். அதைத் தவறாகப் பயன்படுத்தி எவராவது தொல்லைக் கொடுக்கக் கூடும். நம்பிக்கைக்குப் பாத்திரமான ஆண் நண்பரை உங்கள் பெற்றோரிடமும் அறிமுகம் செய்து வையுங்கள். பரிச்சயமானவர் என்றாலும் அவருடன் ஒன்றாக வெளியில் செல்லும் போது கவனமாக இருங்கள்.

அலுவலகம் மற்றும் விழாவுக்குப் போகும் போதும் வரும்போதும் பண்புடன் நடந்துகொள்ளுங்கள். தொட்டுப் பேசுவது, சத்தமாகச் சிரிப்பது கவர்ச்சியாக உடையணிவது ஆகியவை உங்களைப் பற்றிய மற்றவரின் நன்மதிப்பை பாழடிக்கச் செய்யும். அது போன்ற பெண்களை ஆண் வர்க்கம் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கவே செய்யும்.

உங்களிடம் எவராவது ஆபாசமாகப் பேசினாலோ, அத்துமீறி நடந்து கொண்டாலோ அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்பதில்லை. 'ஈவ் டீசிங்' செய்வது தற்போது தண்டனைக்குரிய குற்றம் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். நீங்கள் பொலிஸார் அல்லது உங்கள் அலுவலக மேலாளரிடம் எழுத்துபூர்வமான முறைப்பாடு கொடுத்து நடவடிக்கை எடுக்கச் செய்ய முடியும்.

வேலைக்குச் செல்பவர் எனில், அலுவலகத்தில் கூடுதலாக பணிச்சுமை இருக்கும் வேளைகளில் தவறாமல் வீட்டுக்கு தகவல் கொடுத்து விடுங்கள். இது அநாவசிய சந்தேகங்களைத் தவிர்க்க உதவும். திருமணமாகாத பெண்களிடம் பாலியல் உறவை எதிர்பாக்கும் மனோபாவம் மேற்கத்திய சமுதாயம் போல எங்கும் இருக்கவே செய்கிறது. அது வெளியில் தெரியவரும்போது சமூக நிந்தனைகளைப் பெண் தாங்கிக்கொள்ள நேருடுகிறது. ஆண்கள் தங்கள் காரியம் முடிந்ததும் பாதிப்பின்றி நழுவி விடுவார்கள். எனவே, இந்த விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருங்கள்.

போதைப் பொருட்களைத் தவிர்த்து விடுங்கள். இது பல தவறுகளை செய்யத் தூண்டி உங்கள் எதிர்காலத்தை இருட்டாக்கி விடும்.

குடும்ப உறுப்பினர்கள் உங்களை ஆதிக்கம் செய்ய அனுமதிக்காதீர்கள். சம்பளம் மற்றும் வைப்புத்தொகையை எந்த உறுப்பினரிடமும் கொடுக்காதீர்கள். உங்கள் மீது அநாவசியமான குற்றச்சாட்டு எழும்போது தைரியமாக பதில் கொடுங்கள்.

**திருமணத்தை புறக்கணிக்க காரணம்**

இன்றைய சமுதாயம் குறிப்பாக ஆண்வர்க்கத்தினர், பெண்கள் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பது குறித்து என்ன காரணம் கற்பிக்கிறார்கள் தெரியுமா? 'அவள் மனம் போன போக்கில் பல ஆண்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு உல்லாசமாக வாழ விரும்புகிறாள்' என்பதுதான்.

உண்மையில் இத்தகைய சிந்தனைப்போக்குத்தான் பெண்களுக்கு அதிக மன வேதனையைத் தருகிறது. திருமணத்தைத் தவிர்க்க பெரும்பாலும் பொருளாதார, உடல் மற்றும் மனரீதியான பிரச்சினைகளே காரணமாக இருப்பதை ஆண்வர்க்கத்துக்கு புரிய வைக்க வேண்டும். இன்னொரு விஷயம், மனதுக்குப் பிடித்த வாழ்க்கைத் துணைவரை தேர்ந்தெடுப்பதே ஒவ்வொரு பெண்ணின் கனவாக உள்ளது. அப்படி இருக்கும்போது, பெண்கள் மீது திருமணம் ஏன் நிப்பந்திக்கப்பட வேண்டும்? தங்கள் மனதுக்குப் பிடித்தவரை காத்திருந்து கைப்பிடிக்கும் சுதந்திரம் ஏன் பெண்களுக்கு இல்லை?

**பொருத்தமில்லாத திருமணத்தின் விளைவு**

பெரும்பாலான குடும்பங்களில் மகளின் வாழ்க்கைத் துணைவரை பெற்றோர்தான் தீர்மானிக்கிறார்கள். உறவை நிர்ணயிப்பதில் சம அந்தஸ்தும் ஒத்த சாதியும் முக்கிய

(22 ஆம் பக்கம் பார்க்க)

# குழந்தை பெற்ற பெண்கள் இளமையுடன் இருக்க ...

கருவுற்ற பெண்கள் குழந்தை பிறந்த பிறகு மேற்கொள்ள வேண்டிய உடற்பயிற்சிகள் சில உள்ளன. இந்த உடற்பயிற்சிகள் ஒவ்வொன்றும் குழந்தை பெற்ற பெண்ணுக்கு ஏற்படக்கூடிய சிக்கல்கள் பலவற்றையும் மருந்து, மாத்திரை இன்றித் தீர்த்துக்கொள்ள உதவுகின்றன.

**தோள்பட்டை உயர்த்துதல்:**

இந்த பயிற்சியைச் செய்வதற்கு நல்ல தூய்மையான காற்றோட்டமான இடத்தில் நின்றுகொண்டு கைகள் இரண்டையும் தொங்க விட்டுப் பின் தோள்பட்டையை மெதுவாக உயர்த்த வேண்டும். தோள்பட்டைகள் இரண்டையும் காது வரை உயர்த்திக் கொண்டு சென்று கீழே இறக்க வேண்டும்.



**தோள்பட்டையை அசைத்தல்:**

முதலில் குறிப்பிட்ட உடற்பயிற்சியில் தோள்பட்டைகளைக் காது வரை உயர்த்தினோம். இந்த பயிற்சியில் தோள்பட்டையை முன்னும், பின்னும் அசைக்க வேண்டும். கைகளைத் தொங்க விட்டு முன்னும் பின்னும் ஒரு பத்து முறை தினமும் அசைத்து வந்தாலே போதும்.

**தலை திருப்புதல்:**

நின்று கொண்டு முதலில் தலையை இடதுபுறம் திருப்ப வேண்டும். பின் நேராகத் தலையைக் கொண்டு வந்தபின் வலது புறம் திருப்ப வேண்டும். மீண்டும் மையத்திற்குத் தலையைக் கொண்டு வர வேண்டும். இவ்வாறு இரண்டு முறை செய்தாலே போதும்.

**கழுத்து வளைப்பு:**

கழுத்தை வளைத்து முதலில் இடதுபுறம் தலையைச் சாய்த்திட வேண்டும். பிறகு நிமிர வேண்டும். அதன் பின் வலதுபுறம் கழுத்தை வளைத்துத் தலையைச் சாய்க்க வேண்டும். அதன் பின் நிமிர வேண்டும். இப்படி இடது, வலது என்று பயிற்சி செய்ய வேண்டும்.

**பின்புறம் முன்புறம்:**

தலையை முதலில் முன்புறமாக மெதுவாகக் கீழ் நோக்கி இறக்க வேண்டும். பின் நிமிர வேண்டும். அதே போல் தலையை மட்டும் கழுத்தோடு சேர்த்துப் பின்புறம் முடிந்தவரை வளைந்து அண்ணாந்து பார்ப்பது போல் பார்க்க வேண்டும்.



**நின்று வளைதல்:**

நின்று கொண்டு இருகால்களையும் ஒன்றாக சேர்த்து வைத்துக்கொண்டு இரண்டு கைகளையும் மேலே உயர்த்தி அப்படியே குனிந்து கைகளையும், முழங்கால்களையும் வளைக்காமல் கால் விரல்களைத் தொடப் பழக வேண்டும். முதலில் கைகளால் தொட முடியாது போலிருக்கும். இரண்டு, மூன்று முறை மெதுவாகக் குனிந்து குனிந்து முயன்றால் எளிதாகி விடும். இது மிகவும் நல்ல பயிற்சியாகும்.

**மூச்சுப்பயிற்சி:**

இது ஒரு வகையான தியானப்பயிற்சியாகும். முதலில் கண்களை மூடி மூச்சை உள்ளே இழுக்க வேண்டும். அப்போது அடிவயிறு விரிய வேண்டும். சற்று நேரம் நிறுத்தி மூச்சை வெளியே விடவேண்டும். அவ்வாறு மூச்சை உள்ளே இழுக்கும்போது ஒன்று எனவும், வெளியே விடும் போது இரண்டு எனவும் மொத்தத்தில் பத்து முறை செய்ய வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும். கண்களை மூடிச் சற்று சாய்வாக இருக்க வேண்டும்.

**யோகா பயிற்சி:**

நின்று கைகளைக் குவித்து மூச்சை உள்ளே இழுக்கவும். மூச்சை வெளியிடுகையில் கையை உயர்த்த வேண்டும். மீண்டும் இழுத்து வெளியே விட்டுக் குனிய வேண்டும். மூச்சை உள்ளே இழுத்து வலது காலை முன்னதாகவும் இடது காலை பின்னதாகவும் நீட்ட வேண்டும். பின் மீண்டும் பழைய நிலைக்கு வரவேண்டும். கையை உயர்த்தி மூச்சை உள்ளே இழுக்க வேண்டும். பிறகு கையைத் தொங்க விடுகையில் மூச்சை வெளியே விட வேண்டும்.



**மசாஜ்:**

உடலை இதமாக வருடி விடுவது, நீவிவிடுவதற்குத்தான் மசாஜ் என்று பெயர். முகத்தை நீவிவிடும் முக மசாஜ், வயிற்றை நீவிவிடும் வயிற்று மசாஜ், கால் பாதங்களை நீவிவிடும் பாத மசாஜ் எனப் பல வகைகள் உள்ளன. இதற்கெல்லாம் நேரம் கிடைப்பது அரிது என்று எண்ணத் தோன்றலாம். ஆனால், இவைதான் முக்கியமானவை. இவற்றால் நல்ல

(22 ஆம் பக்கம் பார்க்க)

# சமைப்போம் சுவைப்போம்

## சில்லி சிக்கன்

*தேவையான பொருட்கள்:*

கோழிக்கறி ( எலும்பு நீக்கியது) - 200 கிராம்,
பூண்டு விழுது - 50 கிராம்,
இஞ்சி விழுது - 50 கிராம்,
கோதுமை மா - 50 கிராம்,
அரோரூட் பொடி - 50 கிராம்,
முட்டை - 2,
மிளகாய் விழுது - 1 சிறிய தேக்கரண்டி,
பம்பாய் வெங்காயம் - 2,
குடைமிளகாய் - 2,
காரட் - 2
சோயா சோஸ் - 1/2 சிறிய தேக்கரண்டி.



*செய்முறை:*

கோழிக்கறியில் எல்லா மசாலாக்களையும் சேர்த்து பிசறவும், அதை முட்டை, கோதுமைமா மற்றும் அரோருட் கரைசலில் முக்கி பகோடா போல் பொரித்து எடுக்கவும். ஒரு பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி அதில் இஞ்சி, பூண்டு சேர்த்து பொன்னிறமாக வதக்கியபின் வெங்காயம், காரட், குடைமிளகாய் சேர்த்து தொடர்ந்து வதக்கவும், பிறகு கோழிக்கறி வேகவைத்த தண்ணீர், மிளகாய் விழுது, உப்பு, வெள்ளை மிளகு மற்றும் கோழி பகோடாக்களைச் சேர்த்து தண்ணீர் வற்றும் வரை வதக்கவும். *

# குழந்தைகளுடன் வெளியூர் செல்லும்போது...



* பஸ் பயணத்தின்போது ஏற்படக்கூடிய தலைச் சுற்றலுக்கு கைவசம் எலுமிச்சம் பழத்தை வைத்திருங்கள்.

* பஸ்ஸில் பயணம் செய்ய நேர்ந்தால் உங்கள் பொருட்களை எதிர் வரிசைக் காலடியில் வைத்துக் கொண்டால் எப்பொழுதும் ஒரு கண் வைத்துக் கொள்ள வசதியாகயிருக்கும்.

* ரயிலில் பயணம் செய்ய நேர்ந்தால் ஜன்னல் பக்கம் தலை வைத்துப் படுக்க வேண்டாம். கழுத்தில் போட்டிருக்கும் நகை திருட்டுப் போகும் வாய்ப்புகள் அதிகம் உண்டு.

* விமானத்தில் பயணம் செய்யும்போது உங்கள் பெட்டிகளில், உங்களுடையது எது என்று கண்டறிய ஏதேனும் ஒரு ஸ்டிக்கரை ஒட்டியோ அல்லது ஒரு கலர் ரேப்பையோ அல்லது ரிப்பனையோ கட்டி வைத்தால் எளிதாகக் கண்டறியலாம்.

* தொலைதூரப் பயணம் என்றால் குழந்தைகள் விளையாடக்கூடிய சீட்டுக் கட்டு, லூடோ, டிரேட் போன்ற விளையாட்டுக்களையும், கொமிக்ஸ் புத்தகங்களையும் உடன் எடுத்துச் செல்லலாம்.

* வெளியூரில் உறவினர் அல்லது நண்பர் வீட்டில் தங்க நேர்ந்தால் அவர்களிடம் அன்றைய தினம் நீங்கள் எங்கு (அதாவது அவர்கள் வீட்டிலா அல்லது வெளியிலா) சாப்பிடப் போகிறீர்கள் என்பதை அவர்களிடம் தெளிவாகச் சொல்லி விட்டுச் செல்லுங்கள்.

* பிரயாணம் முடிந்ததும் வீட்டில் பெட்டிகளை அதற்குரிய இடத்தில் வைக்கும்போது அவற்றின் பூட்டுகள், திறப்புகளையும் அந்தந்தப் பெட்டியினுள்ளேயே போட்டு வைத்தால் அடுத்தமுறை வெளியூர் செல்லும்போது தேடவேண்டியதில்லை. *



# மார்டின் விக்கிரமசிங்க

இலங்கையின் இலக்கிய வரலாற்றில் முத்திரை பதித்த மூத்த எழுத்தாளராகிய மார்டின் விக்கிமசிங்க காலி மாவட்டத்திலுள்ள கொக்கல என்னும் கிராமத்தில் 29-05-1890 இல் பிறந்தார். இவர் மல்லகம லமாஹேவாகே டொன் பஸ்தியன் விக்கிரமசிங்க - மாகால்லே பலப்பிட்டியே லியனகே தொவிகாமி தம்பதியினரின் புதல்வராவார். அவர் வாழ்ந்த கிராமியச் சூழல் மிகவும் இரம்மியமானதாகும். ஒருபுறம் அலை மோதும் கடலும் மறுபுறம் கொக்கல ஓயா என்ற நன்நீர் வாவியும் அரணாக அமைந்திருந்தன. அக்கிராமத்தின் பின்புலமாக அமைந்த குறிஞ்சி நிலமும், அழகிய தாவரச் செல்வமும், கிராமத்து மக்களின் மாறும் வாழ்க்கைக் கோலங்களும் அவரது அமரத்துவம் வாய்ந்த நாவல்களுக்கும் சிறுகதைகளுக்கும் தளமாக அமைந்தன.

நமது நாட்டின் கிராமிய வாழ்க்கையிலும் பண்பாட்டிலும் உட்பொதிந்துள்ள தேசிய அடையாளங்களைக் கண்டறியும் பொருட்டு மார்டின் விக்கிரமசிங்க அவர்கள் இலக்கியம், மொழியியல், கலைகள், மெய்யியல், பௌத்தம், ஒப்பியல், சமயம், கல்வியியல், இயற்கை விஞ்ஞானம் மற்றும் சமூக விஞ்ஞானம் ஆகிய துறைகளில் நவீன ஆய்வுகளைப் பிரயோகம் செய்தார். அவரது அரும்பெரும் ஆக்கமுயற்சிகளினால் நவீன சிங்கள நாவல், சிறுகதை இலக்கியங்கள் முதிர்ச்சி பெற்றன.

1920 இல் 'லீலா' என்னும் ஆக்கத்தின் மூலம் நாவல் இலக்கியத்தில் நுழைந்தார். மிகப் பிரபலமான முற்போக்கு எழுத்தாளராக விளங்கிய இவர் ஒப்பற்ற சிறந்த எழுத்தாளருமாவார். கலைஞர், இலக்கிய கர்த்தா, உயிரியல் விஞ்ஞானி, இலக்கியத் திறனாய்வாளர், சமூக சிந்தனையாளர் ஆகிய பன்முகப் பரிமாணங்களுடன் விளங்கிய பழம்பெரும் எழுத்தாளர் இவர். இவரது நூல்கள் ஆங்கிலம், சீனம், ரஷ்யா, ருமேனியா, ஜெர்மன், தமிழ் ஆகிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

மார்டின் விக்கிரமசிங்க இலக்கியத் துறையில் மட்டுமன்றி பத்திரிகைத் துறையிலும் தமது கைவண்ணத்தைக் காட்டியவர்.'தினமின', 'லக்மின', 'சிலுமின' ஆகிய பத்திரிகைகளின் பதிப்பாசிரியராகவும் விளங்கினார்.

நாவல்துறையில் இவரின் பங்களிப்பு விசாலமானது. 'லீலா'வில் தொடங்கி 'சோமா', 'அயிறாங்கினி', 'சீத்தா', 'மிறிங்குதிய', 'ரோகினி', 'கம்பெரலிய', 'மடோல் தூவ', 'யுகந்தய', 'விராகய', 'கலியுகய', 'பவதரணய' என்று பலவகைப்பட்ட நாவல்களைத் தந்துள்ளார். இவரது மிகச் சிறந்த படைப்புகளாகிய 'கம்பெரலிய', 'மடொல் தூவ' ஆகியன திரைப்படங்களாக வெளிவந்து பல்லாயிரக்கணக்கான இரசிகர்களது அபிமானத்தைப் பெற்றன.

இவரின் 'கம்பெரலிய' என்னும் நாவல் 'கிராமப் பிறழ்வு' என்றும் 'மடொல் தூவ' என்னும் நாவல் 'மடொல் தீவு' என்றும் 'விராகய' என்னும் நாவல் 'பற்றற்ற வாழ்க்கை' என்றும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு புத்தகமாக வெளிவந்துள்ளன. இன்னும் அவருடைய நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு புத்தகமாக வெளிவரவுள்ளன.
பலசிறுகதைகளை எழுதிப் புகழ்பெற்ற மார்டின் விக்கிரமசிங்க அவர்கள் பல சிறுகதைத் தொகுதிகளையும் வெளிக்கொணர்ந்துள்ளார். இவரது 'விராகய' என்ற நூலுக்கு புறோலிஸ், பெர்ணாந்துப் பரிசு கிடைத்துள்ளது. 'மடோல் தூவ' என்னும் இந்த நாவல் 1954 இல் ரஷ்ய மொழியிலும், 1962 இல் ரூமேனிய மொழியிலும், 1963 இல் சீன மொழியிலும், 1965 இல் பல்கேரிய மொழியிலும், 1976 இல் ஆங்கில மொழியிலும், 1993 இல் தமிழ்மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளது. குழந்தை இலக்கியமாக இந்நாவல் திரைப்படமாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது. பல தரமான நாவல்களைத் தந்த திரு.மார்டின் விக்கிரமசிங்க குழந்தை இலக்கியம் படைப்பதில் வல்லவர் என்பதை இக்கதை மூலம் நிரூபித்துள்ளார். இவரது 'விராகய' (பற்றற்ற வாழ்க்கை) என்னும் நாவல் ஒரு மனிதனின் ஆன்மீக வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டும் உயர்ந்த உளவியல் கதையாகும்.




திரைப்படமாகத் தயாரிக்கப்பட்டு ஜனாதிபதிப் பரிசும் பெற்ற இக்கதை சிறந்த சிங்கள நவீனமாகவும் உள்ளது. இந்நாவலின் பாத்திரங்களின் உயிர்த்தன்மையும் ஆளப்பட்டுள்ள நயமிக்க உவமைகளும் மனதைக் கவர்கின்றன. தென்மாகாணத்தில் ஊர்மனை ஒன்றில் வாழும் பௌத்த மாணவன் ஒருவன் பௌத்த உணர்வு காரணமாக எவ்வாறு தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டான் என இக்கதை எடுத்துக் காட்டுகிறது.

யதார்த்த பூர்வமான கதைகளை எழுதுவதில் முதன்மைநிலை காட்டும் மார்டின் விக்கிரமசிங்க தாம் எழுதிய இந்நாவலின் பாத்திரங்களின் உயிர்த்தன்மையையும் நயம்மிக்க உவமைகளையும் மனதைக் கவரும் வகையில் எடுத்துக் காட்டியுள்ளார். இலக்கியம் ஓர் இனத்தின் கலை கலாசாரத்தை பிரதிபலித்துக் காட்டும் ஒரு கண்ணாடி. அந்த வகையில் தமது மக்களின் எண்ணங்களைப் பழக்கவழக்கங்களை, ஒழுக்காசாரங்களைப் பற்றி அறிந்து கொள்ளக்கூடிய வகையில் 'விராகய' நாவலைத் தந்துள்ளார். தலைசிறந்த எழுத்தாளரும் நாவலாசிரியருமான இவர் மிகச் சிறப்புமிகு கலைஞராகவும், சிந்தனையாளராகவும் இக்கதையின் மூலம் பிரகாசிக்கின்றார்.

'கம்பெரலிய' என்னும் நூல் கிராம மக்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு அந்த வாழ்க்கையின் அர்த்தங்களை பிரதிபலிக்கும் வகையில் எழுதப்பட்ட உயர்ந்த ஒரு நாவலாகும். வாழையடி வாழையாக வந்த மரபில் எமது நாட்டு எழுத்தாளர்கள் மூழ்கிச் சிங்களத்தில் நாவல் எழுதும் கலையை வேறு திசையில் செலுத்திக் கொண்டிருந்த சமயத்தில் அதனைத் தேசிய மரபிற்கிணங்க உருவாக்கிய பெரும் பணி 'கம்பெரலிய' என்ற நாவலுடன் ஆரம்பமாகிறது எனலாம். இதனாலேயே 'கம்பெரலிய' (கிராமப் பிறழ்வு) சிங்கள நாவல் வரிசையில் முதலாவது படைப்பாகக் கருதப்படுகிறது.

மார்டின் விக்கிரமசிங்க அவர்கள் ஆங்கிலத்திலும் பாண்டித்தியம் பெற்றவர். ஆங்கிலத்திலும் பல நூல்களை எழுதியுள்ளார். அவை பெரும்பாலும் சிங்கள, பௌத்த கலாசாரங்களைப் பிரதிபலிப்பனவாகவே அமைந்தமை, அவருக்கு கலை கலாசாரம், சித்திரம் போன்றவற்றிலுள்ள அக்கறையையும் மதிப்பையும் எடுத்துக் காட்டுவனவாக அமைந்தன எனலாம். மொழிபெயர்ப்புத் துறையில் அக்கறையுடன் ஈடுபாடு காட்டிவந்தார். 'மடொல் தூவ' (MADOL DOOVA), 'விராகய' (VIRAGAYA) ஆகிய தமது நாவல்கள் உட்பட, சிங்கள இலக்கியத்தின் இருப்புப்புள்ளி (LAND-MARKS OF SINHALA LITERATURE) என்ற நூலையும் மொழிபெயர்த்திருந்தார். பல்வகைப் பரிமாணங்களைக் கொண்ட மாபெரும் எழுத்தாளரான மார்டின் விக்கிரமசிங்க அவர்கள் என்றும் மதிக்கப் படுபவர். *

# நிறைவான கல்வி

சமுதாய வளர்ச்சியின் உந்து சக்தியாக விளங்கும் கல்வி, இன்று பரிணாம வளர்ச்சி கண்டு பலதுறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளது; கண்டும் வருகிறது.

''ஒருமைக் கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து''

என வள்ளுவரையே சொல்லவைத்து விட்டது. இருந்தும், முதலாளித்துவ நாட்டில் தொழிலாளர்கள் கீழ்ப்படிவுள்ளவர்களாகவும், ஒழுக்கசீலர்களாகவும் இருக்கவே பயிற்சிகளும் போதனைகளும் வழங்கப்பட்டன என்றும், முதலாளித்துவ சமுதாயத்தில் சமுதாய உழைப்பை முறைமைப்படுத்தும் திட்டங்கள் எதுவும் இல்லை என்றும் லெனின் முதலாளித்துவ கல்விமுறையை விமர்சித்தார். ''சோசலிஸ நாட்டின் பள்ளிக் கூடங்களில் கல்வி மக்களின் வாழ்க்கையுடனும், அக்கறைகளுடனும் நெருக்கமாகப் பிணைக்கப்படும்'' என்று அவர் கூறினார். இதன் பின்னணியில் தொழில், விவசாயம், மின்னிணைப்பு ஆகியவற்றைக் கொண்ட தொழில்நுட்பக் கல்வியின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.

''மனிதன் ஒருபுறத்தில் உழைப்பின் மையக் கருத்தாவாக உள்ளான். மற்றொரு புறத்தில் மனிதன் அறிவின் அல்லது விஞ்ஞானத்தின் உற்பத்தியாளனுமாவான்'' என மார்க்ஸ் எழுதினார். அறிவுரீதியான கல்வி, உடற் பயிற்சிக் கல்வி ஆகியனவற்றோடு எல்லா மாணவர்களும் தொழில்நுட்பப் பயிற்சியிலும் பங்கேற்பது அவசியம் என்றும், அது அவர்களுக்கு பொலிடெக்னிக்கல் போதனையூடாக வழங்கப்பட வேண்டும் என்றும் மார்க்ஸ் கூறினார்.

கல்வி ஒரு நபரிடம் அவனுக்கான அறிவு நிலைகளைத் தானாக உருவாக வழிவகுப்பதா? அல்லது கருத்துக்களையும் பயிற்சிகளையும் அவனில் திணிப்பதா? கால மாற்றத்திற்கும் சமூக மற்றும் இயற்கையின் சவால்களுக்கும் முகம் கொடுப்பதற்கு தனிமனிதனையும் சமூகத்தையும் அறிவாலும் பயிற்சியாலும் தகுதிபெறச் செய்வதா? இந்த வகையிலான கேள்விகளுக்கு அல்லது பிரச்சினைகளுக்கு கல்விக் கோட்பாடுகளிலிருந்து விடைகாண வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், **குழந்தையின் இயல்பில் உள்ளார்ந்ததாகக் காணப்படும் உள் ஆற்றல்களை அவன் அல்லது அவள் மூலமாகப் புறநிலைப் படுத்துவது கல்விக்குரிய பொறுப்புகளில் பிரதானமானதெனக் கருதலாம்.**

அதாவது, தகவல்களையும் அறிவுகளையும் மாணவனின் நினைவுகளில் களஞ்சியப் படுத்துவது அல்ல. தனிநபரின் அக ஆற்றல்களை நிர்மாண ரீதியாகப் புறநிலைப்படுத்தி சமூக மற்றும் மனிதப் பண்பாட்டின் மேம்பாட்டிற்கு மனிதனின் பங்காற்றுகையைப் பெறும் முயற்சி என்று இதனைக் கூறலாம். *

# உறவுகள் மேம்பட...!

குடும்பத்திலும் சரி, பணிசெய்யும் இடங்களிலும் சரி, மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும் ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்கவும் - நானே பெரியவன், நானே சிறந்தவன், நானே கெட்டிக்காரன் என்ற அகந்தை (EGO)யை விடுங்கள். அர்த்த மில்லாமலும், பின் விளைவுகளை அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள் (LOOSE TALKS). எந்த விசயத்தையும் பிரச்சினைகளையும் நாசூக்காகக் கையாளுங்கள் (DIPLO-MACY). விட்டுக் கொடுங்கள் (COMPRO-MISE). சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆகவேண்டும் என்று உணருங்கள் (TOLERANCE). எல்லோரிடத்திலும் எல்லா விசயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.

மேலும் உங்கள் கருத்துக்களில் உடும்புப்பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள் (FLEXIBILITY). மற்றவர்களுக்குரிய மரியாதையைக் காட்டவும், இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள் (COURTESY). புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாததுபோல் நடந்துகொள்ளாதீர்கள். பிரச்சினைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கிவர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத்தொடங்க முன் வாருங்கள். படித்தபின் நீங்கள் படித்தவற்றை முடிந்தளவு செயற்படுத்த முனையுங்கள். மன அமைதி நிச்சயமாகக்கூடும். *


# சிறப்புப் பிரதிகளும் நானும்

''கொழும்பில் புத்தக வெளியீடுகள் தாராளமாக மாதத்தில் ஐந்து, ஆறு என்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அநேக மானவர்களை எனக்குத் தெரிந்தபடியால் என்னையும் சிறப்புப் பிரதிவாங்கப் பட்டியலில் போட்டுவிடுவார்கள். மரியாதைக்கு அஞ்சி குறைந்தது ருபா ஐந்நூறு கொடுத்துப் புத்தகத்தை வாங்கவேண்டிய பரிதாப நிலை! நான் புத்தகங்கள் வாங்குவதை அறிந்து என்ரை மனிசிக்காறி சண்டப்பிரசண்டனம் ஆடுகிறாள். ஒரு மாதத்திலை ஒரு புத்தகம் வாங்கலாம். ஐந்து, ஆறு புத்தகங்கள் வாங்க காசுக்கு எங்க போறது? புத்தக வெளியீட்டுக்குப் போகாட்டி புத்தக எழுத்தாளன் கோவிக்கிறான். போனால் வீணாகக் காசைக் செலவு செய்கிறியள் எண்டு மனிசி திட்டுகிறாள். இரு தலைக் கொள்ளி எறும்பாகத் தவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

புத்தகம் அடிக்க வேண்டாம் எண்டு சொல்லேல்ல. தாராளமாக அடியுங்கள். புத்தக வெளியீடுகளை வையுங்கள். ஆனால், தயவுசெய்து சிறப்புப் பிரதி வாங்க மட்டும் பெயர் சொல்லி மேடைக்கு அழைக்காதீர்கள் என்று புத்தகங்கள் வெளியிடுகிறவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன். இது என்னுடைய வேண்டுகோள் மட்டுமல்ல, என்னைப் போன்ற பலருடைய வேண்டுதலுமாகும் என்று சின்னத்தம்பியர் ஆனந்தத்தாருக்குச் சொன்னவர்'' எண்டு அவற்ற மகன் குஞ்சிதபாதம் சொல்லிக்கொண்டிருக்கேக்கை எழுத்தாளர் பரமசிவம் வந்தார். உடனே பேச்சை நிறுத்திவிட்டார் குஞ்சிதபாதம்.

சாத்திரியார் சங்கர வேலாயுதம் விதண்டாவாதம் பேசுவதில் வல்லவர். அவர் குஞ்சிதபாதம் சொன்னவிசயத்தை எழுத்தாளர் பரமசிவத்துக்குச் சொல்ல பரமசிவத்தார் பேசிப்போட்டார். ஒருத்தரையும் திருத்தேலாது. வாழ்க்கைச் செலவின் உயர்வை எண்ணியாவது சிறப்புப் பிரதி வாங்கப் போடாமல் விட்டால் அதுவே புண்ணியம். இதும் ஒருவகைச் சுரண்டல்தான்! *

# பேராசான் மு.கார்த்திகேசன்



சமகாலத்தில் வாழ்ந்து ஆசிரியத்துவத்தின் உன்னதங்களை வெளிப்படுத்தியவர் கார்த்திகேசு மாஸ்டர் அவர்கள். மார்க்சிய இயலை திரிபு இன்றித் தெளிவாக விளங்கிக் கொண்டவர். மார்க்சிய இயலை அடியொற்றிய வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர். தமது சுய இலாபங்களுக்காகக் கொள்கையை விட்டுக் கொடுக்காதவர்.

உன்னத ஓர் ஆசிரியருக்கு இருக்க வேண்டிய அறிவுப் பலத்தைக் கொண்டிருந்ததுடன், கால வளர்ச்சியோடு திரட்டிய அறிவை புதுப்பித்த வண்ணம் வாழ்ந்தவர். அவர் ஒரு நிறுவனம். சோஷலிஸத் தின் குறியீடு. அரசியல் தீர்க்கதரிசி. ஒரு தலைசிறந்த புத்திஜீவி. ஆழ்ந்த சிந்தனையாளன். கார்த்திகேசன் மாஸ்டர் மார்க்ஸிஸ - லெனினிஸ - மாஓ சேதுங் சிந்தனைகளையும் கோட்பாடுகளையும் இலங்கைவாழ் அனைத்து மக்களின் விமோசனத்திற்கும், சுபீட்ச வாழ்விற்குமாக திரிபறக் கற்று, நன்கு ஆராய்ந்து, அதன்படி தமது இயக்கத் தோழர்களையும் ஏனையோரையும் வழிநடத்திச் செயற்பட்டவர். தனது எழுத்தால் - பேச்சால் செந்தமிழும் ஆங்கிலமும் பெருமைபெறச் செய்தவர். அவரது மொழியாற்றலையும், சிறந்த இலக்கிய, சமூக அறிவினையும், கணிதப் புலமையையும் பிரயோகித்து தலைசிறந்த ஆசிரியராகவும், அதிபராகவும் பிரசித்தி பெற்றவர்.

தமிழியல் சார்ந்த புலக்காட்சியை வளம் படுத்துவதற்குத் தமது வளமான ஆங்கில அறிவையும் மார்க்சிய அறிவையும் பிரயோகித்தவர். இந்த அணுகுமுறை அவரது மாணவராகிய பேராசிரியர் க.கைலாசபதியால் மேலும் ஆழமாக முன்னெடுக்கப் பட்டது. எதிர்ச்சவால்களைக் கண்டு சளைக்காது பிரதிகூலம் எய்திய மாணவர்களுக்காகவும், ஆசிரியர்களுக்காகவும் இறுகிய கல்வி நிர்வாகப் பிடிக்குள் இருந்தவாறு குரல் கொடுத்தும், வினைப்பட்டும் வாழ்ந்து காட்டியவர். நிலப்பிரபுத்துவக் கட்டமைப்பிலும், மத்தியதரவகுப்பிலும் காணப்பட்ட போலித்தனமான பெறுமானங்களை ஆழம் மிக்க நகைச் சுவையினால் வெளிப்படுத்தியவர். கல்வி பற்றிய தெளிவான தரிசனத்தைக் கொண்டிருந்தவர். அவரது கற்பித்தல் முறை என்பது தனித்துவமானது. மாணவர்களைஈர்க்கும் வல்லமை கொண்டது. இவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் உலகெங்கும் வாழ்ந்து அவரது பெயருக்குக் கௌரவம் வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். *

# பாலைவனத்துப் பூ

சிறுகதை

நெல்லியடி - பொன். சுகந்தன்.



மெதுவாக வீசிய தென்றல் காற்றும் அவளுக்கு இதமளிக்கவில்லை... சிறிது நேரத்தில் அக் காற்று குளிர்காற்றாக மாறியது... இந்தக் காற்றும் அவளுக்கு குளிரூட்டவில்லை... சிறிது நேரத்தில் கடும் இருள் வந்து சூழ்ந்துகொண்டது. அதுவும் அவளைப் பயமுறுத்தவில்லை. வாழ்க்கையே இருண்டு போனதால் அவள் இருளை கண்டு பயப்பட வில்லை. வானத்தையே வெறித்துப் பார்த்தபடி வெளிச் சுவரோடு சாய்ந்திருந்தாள். மடியிலே பத்து வயது மதிக்கத்தக்க அவளின் மகள் சோபனா உறங்கிக்கொண்டிருக்க... நித்திரையாகக் கிடக்கும் தன் மகளின் தலையைத் தடவிக் கொடுத்தபடி சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள் வள்ளிக்கொடி.

கணவன் காணமாற் போன நாளில் இருந்து கண்ணீரும் கவலையும்தான் அவளுக்கு சொந்தங்களாயின... ஆனால், உண்மையான சொந்தங்கள் எல்லாம் அவளை விட்டு வெகுதூரம் சென்று விட்டன. இந்நிலையில் வள்ளிக்கொடியும், மகளும் தனித்து விட்டனர். வறுமை என்னும் கோரப் பிடியில் சிக்குண்டு கிடந்தது அந்த ஏழைக் குடும்பம். கூலி வேலையும் இப்போது அவளுக்கு ஒழுங்காகக் கிடைப்பதில்லை... இந் நிலையில் மகள் சோபனாவின் எதிர்காலத்தை நினைக்க அவளுக்குப் பயமாகவிருக்கும். இனம் புரியாத வேதனையும் வலியும் அவளை ஆட் கொள்ளும்... அவளும் தேவைகளை நிறைவேற்ற முடியாத போதெல்லாம் அவளது உள்ளம் அளவற்ற வேதனைகளைச் சுமக்கும்... அவ்வாறானதொரு வேதனையும் வலியும்தான் இன்று அவளை வதைத்துக் கொண்டிருந்தன!

இன்று பாடசாலையால் வந்த சோபனா நொண்டி நொண்டித்தான் வந்தாள். என்ன நடந்தது என வள்ளிக்கொடி கேட்டபோது விம்மி விம்மி அழத் தொடங்கிவிட்டாள்... "எல்லாப்... பிள்ளைகளும்... செருப்பு சப்பாத்தெல்லாம்... போட்டு... வருகுதுகளம்மா. அதாலை முள்ளுக்... குத்தாது... எனக்குச் செருப்புமில்லை..." என அழுத சோபனாவை நாளைக்கு கட்டாயம் புதுச் செருப்பு வாங்கித் தருவதாக சமாளித்து விட்டாள் வள்ளிக் கொடி... ஆனால், என்ன செய்வதென்று கலங்கிக் கொண்டிருந்தபோதுதான்... கணவன் கனகராசாவின் நினைவுகள் நெஞ்சில் துளிர்த்தன.

கனகராசாவும், வள்ளிக்கொடியும் காதலித்து திருமணம் செய்து கொண்டவர்கள். அதனால், அவர்கள் குடும்பத்தில் பொருளுக்குப் பஞ்சம் இருந்ததே தவிர அன்புக்குப் பஞ்சம் இருக்கவில்லை. செம்மையாகவே வாழ்ந்தார்கள். இருவருமே மகள் சோபனா மீது அளவு கடந்த அன்பினைக் கொண்டிருந்தனர். சோபனாவின் ஒவ்வொரு பிறந்த நாளையும் சிறப்பாகத்தான் கொண்டாடுவார்கள். அதே போன்றுதான் அன்றைய பிறந்த நாளும் களைகட்டியிருந்தது. உறவினர், நண்பர்கள் எல்லாரும் வந்து விட்டனர். ஆனால், நெடுநேரம் ஆகியும் கேக் வரவில்லை. பொறுமையை இழந்த கனகராசாவும், "வள்ளி நான் போனால் தான்... சரி இன்னும் கேக் வந்தபாட்டில்லை. நான் ஒருக்கால் பேக்கரிப் பக்கம் போட்டு வாறன்..." என்று சொல்லி விட்டு பதிலுக்குக் காத்திருக்காது சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டான்.

கேக் வேண்டப் போன கனகராசா அன்று மாலையாகியும் வீடு திரும்ப வில்லை... பிறந்த நாளுக்கென வந்த நண்பர்கள் உறவினர்களும் அகன்று விட்டனர்... பேக்கிரியிலிருந்து கேக்கும் வந்துவிட்டது. ஆனால், கனகராசாவைப் பற்றி எதுவுமே தெரிய வில்லை... நாட்கள் நகருகின்றன... கனகராசா சென்ற சைக்கிள் மட்டும் ஒரு பத்தைக் காணிக்குள் இருந்து மீட்கப்பட்டது. எவ்வளவுதான் முயற்சிகள் செய்தும் கணவன் பற்றிய விவரம் எதனையும் பெற முடியவில்லை... கணவர் வருவார் என எதிர்பார்த்திருந்தும் ஏமாற்றத்தையே கொடுத்தது... அதன் பின்தான் தனது பிள்ளையை வளர்த்து ஆளாக்க வேண்டும் என்ற ஒன்றுக்காக கவலைகளை மறந்து கூலி வேலை செய்து தன் பிள்ளையை வளர்த்து வந்தாள்.

ஓரிரண்டு மழைத்துளிகள் கன்னங்களில் வீழ்ந்த போது சிந்தனைகள் கலையப்பெற்ற வள்ளிக் கொடி, கணவனின் சிந்தனையில் தன்னை மறந்து விட்டதனை உணர்ந்து கண்களில் வழிந்திருந்த நீரைக் கைகளால் துடைத்து விட்டு "புள்ளை எழும்பனை மழை வந்திட்டுது..."

சோர்ந்து வீழ்ந்த மகளை ஒருவாறு தூக்கிகொண்டு போய் உள்ளே பாயிலே கிடத்தி விட்டு தானும் அருகே சரிந்து கொண்டாள். மழை இரைச்சலுடன் பொழியத் தொடங்கியது.... இடையிடையே வீட்டினுள்ளே 'டொக்... டொக்...' என்ற சத்தமும் மழைத்துளி விழுவதனால் கேட்டுக் கொண்டிருந்தது. வள்ளிக் கொடியும் சிந்தனைகளுக்கு இடம் கொடாது உறங்கி விட்டாள்.

சரிந்த கிடுகுகளுக்கிடையால் சூரியக்கதிர்கள் கண்களைத் தொட்ட போதுதான்... கண்ணைக் கூசியபடி எழுந்த வள்ளிக்கொடி நேரம் சென்று விட்டதனை குறிப்பால் உணர்ந்து கொண்டு அவசரமாக எழுந்தாள்.

"பிள்ளை பள்ளிக்கூடம் போக நேரம் சென்று போச்சு கெதியாகப் பல்லை விளக்கு..."

சோபனாவும் பாடசாலை செல்வதற்கு தன்னை ஆயத்தப்படுத்திய போதுதான் ஏதோ நினைவு வந்தவளாய் "அம்மா சட்டை ஒன்று தைக்கோணுமனை இந்த... ஒரு சட்டையைத்தானே வைச்சுப் போடுறன்..." என்றவள் தாயின் பதிலுக்குக் காத்திருக்காது புத்தகம், கொப்பிகளை அடுக்கினாள். இன்றைக்கு கணித பாடத்திற்கும், விஞ்ஞான பாடத்திற்கும் புதுக்கொப்பி வாங்கிவரத் சொன்னது நினைவிற்கு வந்தது. "அம்மா இன்டைக்கு கொப்பி வாங்கி வரச் சொன்னவ... டீச்சர். வாங்கிக் கொண்டு போகாவிட்டால் அடி விழுமம்மா..." எனச் சிணுங்கிய மகளை அணைத்தபடி "பிள்ளை அழாதையம்மா நாளைக்கு எப்படியும் பிள்ளை கேட்ட கொப்பி, செருப்பு, புதுச்சட்டை எல்லாம் வாங்கித் தருவன். சந்தோஷமாய்ப் போய் படிச்சு கெட்டிக்காரியாக வரவேணும்."

"அச்சா அம்மா" என்றவள் தாய்க்கு முத்தமிட்டு விட்டு பாடசாலைக்கு துள்ளிக் கொண்டு சென்றாள்.

அந்த அழகைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தவள்... பெருமூச்சொன்றை விட்டபடி 'தகப்பன் இருந்தால் எப்படி வாழ வேண்டிய பிள்ளை... பாவம்... செய்தது... இப்படி எத்தனை பிள்ளைகள் தந்தைமாரை இழந்து தவிக்குதுகள்...' என எண்ணியபோது கண்களில் நீர் முட்டியிருந்தது... "என்ன வள்ளி யோசிச்சுக் கொண்டு நிற்கிறாய்" என பக்கத்து மங்களமக்கா கேட்ட போதுதான்... தன்னை ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு "அது, ஒன்று மில்லையக்கா, மகளுக்கு கொப்பிகள் அது இதென்று வாங்கோணும் அதான் யோசிச்சுக் கொண்டிருக்கிறன்..."

"இப்ப வேலைகளும் ஒன்டும் இல்லைதானே... இண்டைக்கு... சங்கக் கடையிலை நிவாரணம் குடுப்பாங்கள்..."

"ஓமக்கா அதைத்தான் நானும் நினைச்சு அந்த நம்பிக் கையிலேதான் நாளைக்கு வாங்கித் தாறதாய் பிள்ளைக்கு சொல்லி பள்ளிக் கூடத்திற்கு அனுப்பி விட்டனான். நிவாரணச் சாமான் கொஞ்சத்தை விற்றுப் போட்டு வாங்கிக் குடும்பம்" எனப் பெருமூச்சொன்றை விட்ட போதுதான்... "வேளைக்கு போனால் தானே வேண்டலாம். பிறகு, சனமெல்லாம் வந்து சேர்ந்திடும்" என்று சொல்லி விட்டு மங்களமக்காவும் செல்கின்றாள். சங்கக்கடைக்கு செல்வதற்காக வள்ளிக் கொடியும் வீட்டினுள்ளே செல்கின்றாள்.

அன்று பாடசாலையில் டான்ஸ் போட்டிக்கான தெரிவு நடைபெற்றுக் கொண்டு இருந்தது... அதிலே சோபனாவின் நடனம் அதிபர், ஆசிரியர் யாவருக்கும் பிடித்திருந்தது. அதனை அவர்கள் பாராட்டவும் தவறவில்லை.

"டீச்சர் இந்தப் பிள்ளையிட்டை நல்ல திறமை இருக்கு. கோட்ட மட்டத்திலேயே பெஸ்ற் அடிக்கிற கெட்டித்தனம் இந்தப் பிள்ளையிடமிருக்கு... அதற்கான ஒழுங்குகளைச் செய்யுங்கோ... டீச்சர்... நாளைக்குப் பத்து மணிக்குப் போக வேணும்..." என டீச்சரிடம் கூறிவிட்டு சோபனாவிற்கும் "கெட்டிக்காரப் பிள்ளை" என்று கூறி கைகொடுத்துப் பாராட்டியும் விட்டு அதிபர் சென்று விட்டார். சோபனாவின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அப்போது சோபனாவின் அருகே வந்த நடன ஆசிரியை, "பார்த்தாயா சோபனா எல்லோரும் உன்னிலை எவ்வளவு நம்பிக்கை வைச்சிருக்கிறம் என்று. நீ கெட்டிக்காரி. நாளை நடக்கிற கோட்ட மட்டப் போட்டியிலையும் நீதான் முதலாவது. அதிலை மாற்றமில்லை...."

இதனைக்கேட்டதும் சோபனாவின் உச்சி குளிர்ந்தது. "சரி டீச்சர் நான் போயிட்டு வரட்டா..." என்றபோது, விடைகொடுத்த டீச்சர் ஏதோ நினைவு வந்ததும், "சோபனா நில்லு பிள்ளை.. முக்கியமான விசயம் சொல்ல மறந்திட்டன். நாளைக்கு இஞ்சை இருந்து பத்து மணிக்கு போகவேணும். ...நேரத்துக்கு வரவேணும் ... வரேக்கை... ...ரென்...று புள்ளை..." என்று கூறி விட்டு ஒற்றையொன்று எடுத்து எழுதி விட்டு அதனைப் பத்திரமாக சோபனாவின் கையிலே கொடுத்து, "சோபனா... நடனத்திற்கு தேவையான பொருட்கள் எல்லாம் எழுதியிருக்கிறன்... இதை பத்திரமாய்க் கொண்டு போய் அம்மாவிட்டை குடுத்து... நாளைக்கு வரேக்கை வேண்டி வர வேணும் பிள்ளை... சரி கெட்டிக்காரப் பிள்ளை போட்டு நாளைக்கு வாணை." என்றதும் சோபனாவும் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடினாள்.

பாடசாலை விட்டு வரும் வழியெல்லாம் தனக்கு நடந்த மகிழ்வான விடயங்களை அசை போட்டு பார்த்தப்படியே வருகின்றாள். ஏதோ நினைவுக்கு வந்தவளாக கைக்குள் கிடந்த ரீச்சர் கொடுத்த அந்த ஒற்றையை விரித்துப் பார்க்கின்றாள். நடனத்திற்குத் தேவையான சலங்கை ஒட்டியாணம், நகை செற்றுகள், உடுப்புகள் எல்லாம் பட்டியல் படுத்தப்படிருந்தது. 'இதைப் பார்த்தாலே அம்மா சந்தோஷப்படுவா' என நினைத்துக் கொண்டு நடையின் வேகத்தைக் கூட்டுகின்றாள் சோபனா.

ஓட்டமும் நடையுமாக வந்தவள் சிறிது நேரத்துக்குள் வீட்டை நெருங்கி விட்டாள்.

அப்போது தான் சோபனாவிற்கு அதிர்ச்சி ஒன்று காத்திருந்தது... வீட்டுக்கு முன்னால் அயல் சனங்கள் நிற்கிறார்கள். சோபனாவுக்கு எதுவுமே விளங்கவில்லை. வீட்டை நெருங்கியதும் ஏதோ விபரீதம் நடந்து விட்டதனை உணர்கின்றாள். வேகமாகச் சென்றவளின் கால்கள் பயத்தில் நடுங்குகின்றன. 'கடவுளே எனக்கு அப்பாவும் இல்லை. அம்மாவுக்கும்... ஏதும் நடக்க விட்டுடாதே.. கடவுளே' என மனதுக்குள்ளே பிரார்த்தனையோடு வந்தவளை... உறவினர் ஒருவர் தடுக்கின்றார்... "பிள்ளை வீட்டுக்கை போகாதையனை உள்ளே டாக்டர் நிற்கிறார்..." இதனைக் கேட்டதும் சோபனா விம்மி விம்மி அழத் தொடங்கவே அருகே நின்ற வயோதிபர்... ஒருவர் தூக்கிக் கொள்கிறார். "பிள்ளை அழக் கூடாதனை அம்மாவிற்கு ஒன்றுமில்லை. அழாமல் இந்தப் பிள்ளையளோடை விளையாடிக் கொண்டு இருங்கோ..." என்று சிறு பிள்ளைகள் நின்ற இடத்தில் விட்டு விட்டு அந்த வயோதிபரும் சென்று விட்டார்... சோபனா வேலிப் பொட்டுக்கால் தலையை நுழைத்து ஒருவாறு உள்ளே வந்து விட்டாள். சிறிது நேரத்தில் வெளியே வந்த வைத்தியர், "பிரச்சினை ஒண்டுமில்லை லேசான மயக்கம்தான்; ஊசி போட்டிருக்கு கொஞ்ச நேரத்திலை சரி வந்திடும்..." என்று கூறி விட்டு வைத்தியரும் சென்று விட்டார்....

அருகே நின்ற பெண்கள் கதைப்பது சோபனாவின் காதுகளில் விழுகிறது. "சங்கக் கடையிலை எனக்கு முன்னாலை தானடி வரிசையிலை நின்டவள்... நிவாரணச் சாமான் இன்டைக்கு வரவில்லை என்று மனேஜர் சொல்ல மயங்கிப் போனாள். நல்ல காலமடி நான் பின்னுக்கு நின்டபடியால் பிடிச்சுப் போட்டன். கையெல்லாம் ஐஸ்கட்டி மாதிரி குளிர்ந்து போச்சுடி. பாவம்டி.. இப்படி எத்தனை குடும்பங்கள்..." எனப் பெருமூச்சு விட்டுக் கொண்டாள். இதனைக் கேட்டதும் சோபனா அழுதபடி ஒருவாறு உள்ளே நுழைந்து விட்டாள். தாய் மயக்க நிலையில் ஏதோ பிசத்துவது சோபனாவின் காதுகளில் விழுகின்றது.. "பிள்ளைக்குச் சட்டை ... பிள்ளைக்கு.... கொப்பி.... பிள்ளைக்கு செருப்பு...."

அந்தப் பிஞ்சின் வாய் வெம்புகின்றது. வாயைப் பொத்தியபடி விம்முகின்றாள்... கைகளுக்குள் அந்த ஒற்றை கசங்கி கிழிகின்றது...!

# கவிதைப்புனல்

## தேர்தல் நிவாரணம்

விலைவாசி அதிகரித்து
வானைமுட்டப் பார்க்குது - துயர்
நிலைபேசிப் பேசியேநம்
நெஞ்சமெல்லாம் வேர்க்குது! - இனி
மலைவாசி நிலையுயர
மார்க்கமென்ன தோழா? - நம்
தலையாரி மாரிடந்தான்
தக்கபதில் கேளாய்!

வாக்குறுதி அளிப்பதிலே
வல்லவராய் நிற்பார்! - தம்
நோக்குநிறை வேறிவிட்டால்
நம்மையுமே விற்பார்! - வரும்
வாக்களிப்பு வீதத்தால்
வரவிருக்கும் ஆட்சி - தன்
போக்குகளால் தரித்திரர்க்குப்
பகிர்ந்திடுமோ மீட்சி?

மாரியிலே குரல்நீட்டும்
மடுத்தவளைச் சத்தம் - புறஞ்
சேரியெலாம் முழங்குதல்போல்
பிரசாரம் நித்தம்! - இனி,
பாரியெனக் கொடைத்திறமும்
பாவலாய்க் கிடைக்கும்! - இப்
பாரிலிது போற்சிறப்பு
தேர்தலிலே நடக்கும்!

மந்திரிமார் தந்திரிமார்
மலைவாசல் வருவார்! - அவர்
அந்தரித்து நிற்போர்க்கு
அபயமொழி தருவார் - ஆம்!
இந்தவித இரட்சணியம்
இன்னும்சில நாளே! - தாம்
வந்துவிட்டால் மந்திரியாய்....
வளப்பாடு கீழே!

ஆக்கமான அபிவிருத்தி
அப்படியே தேங்கும் - அவர்
ஊக்கமெல்லாம் 'சுவிஸ்பேங்கில்'
உருப்படியாய் ஓங்கும்' - படு
சீக்கடைந்த நிலையினிலே
சிறிலங்கா நாடு - 'அட,
மூச்சுடைந்த நிலையாச்சு
நம்மவரின் பாடு'

■ ஏறாவூர் அனலக்தர்.

## அதிசய உலகமவள்

அப்பப்பா அன்றந்த
அழகுப் பதுமையொன்று
ஜப்பான் நாட்டிலிருந்து
ஜமாய்க்க வந்ததனால்
எப்போதும் என்றனுக்கு
இவள் நினைவு வரும்!போகும்!
அப்போதென் சொப்பனத்தில்
அந்நிலவாள் ஒளிநடக்கும்!

மெலிந்ததொரு வதனத்தாள்
மேலாடைப் போர்வையினுள்
நளினமுடன் புடைத்திருக்கும்
நல்ல கனியிரண்டும்!
தெளிவாய்ப் புலவன்முன்
திமிரோடு தலைகாட்டி
மலிவாய் மன்மதனின்
மலர்கொண்டு தேன்வார்க்கும்!

இல்லாத இடை இறுக்கி!
இளவாழைத் தொடையிறுக்கி!
பொல்லாங்கு செய்கின்ற
பேடையிவள் ஜீன்ஸ்புறத்தை
மெல்லென் றவளைக்கண்
மீளாய்வு செய்தாங்கே
கள்ளப் பார்வையொன்றை
கன்னியிவள் மீதெறியும்!

செம்பட்டை விரிகூந்தற்
சிலுப்பல் மயில் ஒயிலாய்
தம்பட்டம் அடிக்கையிலே
அதுதாங்கா மனம் வெடிக்கும்
எம்புட்டுப் பொழுதுவரை
எழில்திருடிப் பார்த்தாலும்
அம்மாடி! சலிக்காதே...
அப்படியோர் அழகுரதம்!

கொவ்வைச் செவ்விதழால்
குறும்பு செய்யுமிவள்
அவ்வைக் கிழவியல்ல...
அமுதச் சுரப்பியன்றோ...?
இவ்வளவு கொடைதாங்கி
இருக்குமந்தச் செம்பருந்தி
அவ்வளவுக் கவ்வளவாய்
அதிசயிக்கும் உலகமடா!

■ கவிஞர் ஏ.ஆர்.நாசுவர், திருமலை.

## நாளை, வாழ்வான் ஏழை!

நேரிய ஏழை இந்த
நிலமிசை அழுத கண்ணீர்
கூரிய வாளை ஒக்கும்
கூறுசெய் துடலை வீழ்த்தும்!
பாரிடை தொல்லை நல்கும்
பண்பினை மறந்த மாந்தர்
சீரிலா வாழ்வு தன்னைச்
சிதைக்குமே ஏழைக் கண்ணீர்!

ஆலையில் மாடாய் நின்று
ஆனதோர் உணவு மின்றி
வேலைதான் செய்வார்; வந்தால்
வீட்டிலும் வறுமைக் கோலம்!
மூலையில் ஓலைப் பாயில்
முடங்கியே வாழ்வை ஓட்டிக்
காலையில் மீண்டும் வேலை
களிப்பினைக் காணா வாழ்க்கை!

விண்தொடும் அரிசி, மாவு
விலைகளும் ஏற்றங் கண்டு,
புண்படும் உள்ளத் தோடு
புன்னகை மறந்த பேர்கள்
நன்மைகள் நாடும் அந்த
நாளையே பார்த்துக் காத்து
இன்னிலம் வாழும் வாழ்வில்
இன்பமோ பெற்றா ரில்லை!

பட்டினி கிடந்தே வாடும்
பாமரர் ஓலம் ஓர்நாள்
தொட்டிடும் வானம் தன்னை
தொடங்கிடும் புரட்சி நாளை!
வட்டியால் உழைப்போர் தம்மின்
வளங்களை உறிஞ்சு கின்ற
மட்டிலாத் தனம்ப டைத்தோர்,
மாளுவார்; வாழ்வான் ஏழை!

■ கவிஞர் அ.கௌரிதாசன்.

## மாலை மீள்வோம்

தலைசுற்று வயிற்றுவலி உளைச்சல் கால்கள்
தடிமலொடு உட்காய்ச்சல் இவற்றி னாலே
நிலைதளர்ந்து இருந்தாலும் சுமந்து கூடை
நிரைபிடிக்க வருவோரு முள்ளார்; கூடி
மலைக்காமல் கொழுந்தாய்வோம்; பின்னர் மீண்டும்
மலையிறங்கி வந்திடுவோம்; அடுத்த டுத்து
விலையேறுங் கொழுந்துகளைத் தட்டிற் கொட்டி
எடைபார்ப்பு; பகல்வேளை; செல்வோம் வீடு!

பகலுணவு பழஞ்சோறு; இல்லை யாகில்
பக்குவமாய் அப்போதே போடும் ரொட்டி
அகமகிழ்ந்து பிள்ளையவன் பள்ளி விட்டு
அடைந்திருப்பான் இல்லத்தை அதனைப் போல
இகத்திற்கு பராமரிப்பு இல்ல மேகி
இன்முகத்துத் தாய்கொணர்வாள் சேயை; என்றுஞ்
சுகவாழ்வா? அஃதில்லை; மீண்டும் வேலை
சுறுசுறுப்பு; கொழுந்தாய்வு; மாலை மீள்வோம்!

உச்சிமலை கற்பாறை; சாரல் காடு
ஊளையிடும் நரிக்கூட்டம் இராக் காலத்தில்
பச்சைமலை இதையடுத்து; வேலைக் காடு
பாங்குவொளிர் தேயிலைகள், சவுக்கை, வாகை!
நச்சரவம் நெளிந்துவரும்; காட்டுப் பன்றி
நடமாட்ட மங்குண்டு; முயல்கள் தாவி
அச்சமுற்றுப் பாய்ந்தோடும்; காட்டுக் கோழி
அற்புதமாய் விரைந்தோடும்; பறந்துஞ் செல்லும்!

மலையடியில் ஒதுக்கிவிட்ட தேயி லைக்குள்
மட்பானை யொத்ததொரு குளவிக் கூடு
கலைந்ததுகாண் அன்றொருநாள் நாய்கள் கூடி
கடுஞ்சமரில் ஈடுபட்டு வீழ்ந்த தாலே
அலையலையாய்க் குளவிகளும் வந்து கொட்ட
அவலக்குரல்; அபயக்குரல்; வேலைக் காட்டில்!
தலைதெறிக்க ஓடிப்பலர் தப்ப, மற்றோர்
தவறாது 'ஆஸ்பத்திரி' முனகிச் சென்றார்.

(தொடரும்)

■ கவிஞர் ஸி.எஸ்.காந்தி

## செந்தாமரை

குருதியுண் வேலோ தீயின்
கொள்ளியோ பாம்பின் சோரி
சொரிதலை தானோ செம்மை
தோய்சிறு சங்கோ என்று
மெருகுறு கமலப் பூவின்
விரைபொதி மொட்டே உந்தன்
பெருமெழில் போற்றல் காற்றைப்
பிடிப்பதே கையால் ஆகா!

நறுமண முலவ வண்டு
நண்ணிட விரியும் வேளை
மறுவறு குளவி தன்னின்
மலர்திரு முகமோ மாதின்

உறவிணைந் தலரும் கையோ
உள்நறுஞ் சாந்துஞ், செம்மை
நிறமுமார் சிமிழோ என்றன்
நின்னெழிற் கொவ்வாக் கூற்றே!

வாழ்ந்தது முடித்து மூப்பில்
வளைந்தவர் போலக் கூம்பி
தாழ்ந்துநீ நிற்குங் காலும்
தாழ்ந்திலை அழகில் துன்பம்
சூழ்ந்தபெண் முகமோ ஒன்றித்
தோன்றவர் விரலோ என்று
ஆழ்ந்தெண்ணிப் புகழ்வ தும்உன்
அழகினை அடக்கா தம்மா!

■ ச.வே.பஞ்சாட்சரம்.

நன்றி: தமிழின்பம்.

## சுடர்ப்பூக்கள்

அகரம் எழுதினாய்
நீ
வரிசையாகக்
காத்துக்கிடந்தன
அத்தனைமொழிகளும்
எழுதமாட்டாயா என்று!

தமிழ்மொழியில்
தேன் இருப்பதை
ஒப்புக்கொண்டேன்
நீ
உச்சரித்தபோது!

வீணை தொட்டாய்
இசைவந்தது
உன்
விரல்களிலிருந்து!

ஆற்றில்
கால்நனைத்த நீ
கூடிக்கிறதே என்றாய்
மீன்கள்
முத்தமிடுவது புரியாமல்!

அசைகிறது
உன்
அழகிய இமைச்சிறகுகள்
பறப்பது
நானல்லவா!

சொர்க்கம் காட்டு
என்றேன்
உன்னைக்காட்டினான்
கடவுள்.

ஒரு சொல்
சொன்னாய்
அகராதிகள் கோடி
பார்த்தார்கள்
கோடிப்பேர்
காதல் என்ற
அர்த்தம்
இருக்கிறதா என்று!

உலகின்
தலைசிறந்த சித்திரவதை
உன்
பார்வைதான்

உலகிலுள்ள
அத்தனை பூக்களுக்கும்
வலித்தன
உன் இதழ்களை
தேனீ
தீண்டியபோது!

ஐயோ...!
மெல்லிய கண்ணாடியில்
சிவப்புத்தேன்
கசிகிறதே என்றன
தேனீக்கள்
உன்
இதழ் பார்த்து!

விண்ணப்பித்தன
எல்லா நட்சத்திரங்களும்
உன்
கால் கொலுசாகுவதற்காக?

இன்னும்
இனிக்கின்றன
என் விழிகள்
உன்னை
பார்த்ததிலிருந்து!

பூக்களின்
தலைக்கனம் அழிந்தது
நான்கு இதழ்களால்
உன் கண்கள்
மலர்கின்றபோது!

ஒரு வார்த்தை
நீ
பேசினால்
நூறு பாடல்கள் கேட்ட
திருப்தி
எனக்கு!

நீ
புன்னகைத்தாய்
திடீரெனப் பூத்தன
பூக்காத மரங்கள்!

(தொடரும்)

■ கவிஞர் ஏ.சி.றாஷில்.

## மனத்துணி வோடு எழுந்திரு

நம்பிக்கை கொண்டு எழுந்திரு - நம்பி
நம்பிக்கை கொண்டு எழுந்திரு
துன்பமும் துயரும் தொடர்ந்து வராதென்று
நம்பிக்கை கொண்டு எழுந்திரு.

தூய வழி என்றும் வென்றிடும் என்று
நம்பிக்கை கொண்டு எழுந்திரு.
தொல்லை தருபவர் புல்லாய் நசுங்கிட
நம்பிக்கை கொண்டு எழுந்திரு.

உண்மையும் நேர்மையும் உயர்வைத் தருமென்று
நம்பிக்கை கொண்டு எழுந்திரு.
உழைப்பதைச் செய்பவர் உயர்ந்திடுவர் என்று
நம்பிக்கை கொண்டு எழுந்திரு.

காலமும் நேரமும் கனிந்து வருமென்று
நம்பிக்கை கொண்டு எழுந்திரு.
காரியம் ஆகும் காலம் அதுவென
நம்பிக்கை கொண்டு எழுந்திரு.

அழுதது போதும் ஆர்த்தெழும் கடலென
நம்பிக்கை கொண்டு எழுந்திரு
ஆயிரம் பகைவரும் அனைத்தும் பொடிபடும்
நம்பிக்கை கொண்டு எழுந்திரு

விதியை எழுதும் கைகள் உனதென
விரைந்தே நம்பி எழுந்திரு
மதியும் பலமும் உன்னிரு விழியென
மனத்துணி வோடு எழுந்திரு.

■ க.கோணேஸ்வரன், திருமலை.

## ஈசன் படைத்த தேவரசோ?

சிரித்த பவள முறுவலிலே
சிந்தும் காந்த மின்னல்ஒளி,
எரித்துவிடுமோ... எனை? அன்றி
இன்ப சுகம்தான் அளித்திடுமோ...?
திரித்த முகிலார் சுரிகுழல்கள்
தென்றல் காற்றில் நெளிந்தாட,
உரித்த தேமாம் பழமென்ன,
உயிர்ஓ வியமாய் எதிர்நின்றாள்!

வெட்டி எடுத்த பொற்சிலையோ...?
வெடித்த மின்னற் பொறியனைத்தும்
ஒட்டி, எளிலார் மங்கையென
உதித்த மின்னற் கொடியணங்கோ?
கட்டி நிலவோ...? மன்மதனின்
காதல் அணங்கோ...? கற்பனைக்கே,
எட்டா எழிற்பொன் ஓவியமாய்,
ஈசன் படைத்த தேவரசோ...?

கண்ணே! அருகே வா,உந்தன்
கனியார் அமுதத் தேன்இதழின்,
வண்ணச் சுவை,என்இதயத்தில்
மதுவின் வெறியை ஊட்டுதடி!
என்னே நாணித் தலைகவிழ்ந்தாய்...?
இன்னும் காலம் தாழ்த்துவதேன்...?
கன்னல் மொழியே! வா என்றேன்,
காந்தச் சிரிப்போ டேமறைந்தாள்!

நன்றி: தமிழின்பம்.

■ சி.பொன்னுத்தம்பி

# ஆசன சீதம் ஜீவநாசம்




குடுகுடுப்பைக்காரன், உயிருக்கு ஆபத்து இருக்கிறதென்று சொன்னதிலிருந்து இந்த உலகத்தின் நிலையாமை பற்றிய எண்ணம் குருவுக்கு வந்துவிட்டது. அவர் தன் சீடர்களை நோக்கி, ''காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா'' என்பது எவ்வளவு பெரிய உண்மை. அதனால்தான் மெய் ஞானிகள் 'தூங்கையிலே வாங்குகின்ற மூச்சு சுழி மாறிப்போனாலும் போச்சு' என்று சொன்னார்கள் போலும். நன்மையும், தீமையும் தொடர்ந்து வருவது போலக் காலச் சக்கரம் சுழலும்போது பிறப்பும் இறப்பும் மாறி மாறி வருகின்றன. பிறந்த யாவரும் ஒரு நாள் இறந்தே ஆகவேண்டும் என்பது இயற்கையின் நியதி. இதற்கு நீங்களும் நானும் விதிவிலக்கல்ல. குதிரையின் கிரகம் நம்மையும் பிடித்து ஆட்டுகின்றதென்று நினைக்கிறேன். ராசியற்ற அந்தக் குதிரையை அந்த சந்திரனிடமே கொண்டுபோய் விட்டுவிடலாமா என்று யோசிக்கிறேன்.''

''வேண்டாம் குருவே. அந்தக் குதிரையை நாம் தேடிப்போகவில்லை. குதிரையாகவே நம்மை நாடி வந்தது. இது கடவுள் சித்தம்.'' மட்டி அறிவாளி போல் பேசினான். மற்றவர்களும் அதை ஏற்றுக்கொண்டார்கள்.

''நீங்கள் சொல்வதும் சரிதான். இறைவன் நாட்டப்படியே எல்லாம் நடக்கும். குதிரையை நாம் வைத்துக் கொள்வது என்ற முடிவுக்கு வந்துவிட்டால், நமக்கு முதலில் குதிரை லாயம் ஒன்று வேண்டும்.''

''குதிரை லாயத்தை நாங்கள் உருவாக்கிவிடுகிறோம். கவலையை விடுங்கள்.''

''இதோ, இப்போதே சென்று மரக்கிளைகளை வெட்டி வருகிறேன்.'' என்றவாறே மட்டி கோடாரியுடன் புறப்பட்டான். மீதி நால்வரும் குதிரை லாயம் கட்டும் வேறு பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

மட்டி மடமடவென்று ஒரு மரத்தில் தாவி ஏறினான். மரத்தின் நுனிக்கிளையொன்றில் இருந்துகொண்டு அடிக்கிளையை வெட்டினான். அவ்வழியாக ஒரு பெரியவர் வந்தார். முட்டாள்தனமான இவனது செயலைப் பார்த்து,

''தம்பி, வெட்டுவதை நிறுத்து'' எனக் கத்தினார்.

''இது உன் மரமா, இல்லை உன் பாட்டன் வைத்ததா?''

''மரத்துக்கு உரிமைகொண்டாட வரவில்லை. நீ நுனிக்கிளையிலிருந்து கொண்டு அடிக்கிளையை வெட்டினால் கிளையுடன் கீழே சாய்ந்து விடமாட்டாயா?

''ஓய்! உன் ஜோலியைப் பார்த்துக்கொண்டு போ. அபசகுனமாய்ப் பேசாதே.'' எரிச்சலுடன் சொல்லிவிட்டு வேகவேகமாய் வெட்டினான். அந்தோ பரிதாபம்! கிளையுடன் தொப்பென்று கீழே விழுந்துவிட்டான். நல்லவேளை சிறு காயங்களுடன் தப்பினான். இரத்தம் கசிந்துகொண்டு வருவதையும் அவன் பொருட்படுத்தவில்லை. அவர் சொல்லி வாய் மூடுமுன் கீழே விழுந்துவிட்டோமே. அவர் எவ்வளவு பெரிய ஜோதிடராய் இருப்பார். கண்டிப்பாக அவரிடம் நம் சந்தேகத்தைக் கேட்டே தீரவேண்டுமென்று நினைத்து.

''ஐயா, நில்லுங்கள், நில்லுங்கள்'' என்று கூவிக்கொண்டே அவரை நோக்கி ஓடினான் மட்டி.

கையில் கோடரியுடன் அவன் ஓடிவருவதைக் கண்ட பெரியவர் துண்டைக்காணோம், துணியைக் காணோம் என்று மிரண்டு ஓட ஆரம்பித்தார்.

துரத்தினான் மட்டி.

'இன்று வகையாக மாட்டிக்கொண்டோம், கோடாரியால் ஒரு போடு போட்டு மண்டையைப் பிளக்கப் போகிறான்' என்று நினைத்தவராய் மேலும் மிரண்டு வேகமாய் ஓடினார் பெரியவர்.

விடுவானா மட்டி?

காற்றினும் கடிய வேகத்தில் வந்து அவர் கைகளைப் பிடித்துக் கொண்டு, பெரிதாய் ஒரு கும்பிடு போட்டு,

''மன்னிக்க வேண்டும், நீங்கள் பெரிய மகான் என்று தெரியாமல் பேசிவிட்டேன். பிழை பொறுத்தருள வேண்டும்.'' அவர் கால்களில் விழுந்து வணங்கினான்.

பெரியவருக்கு ஒன்றும் புரியவில்லை.

''நீங்கள் வாக்குப் பலிதம் உள்ள சோதிடர் என்று எனக்குத் தெரியாமல் போய்விட்டது. நீங்கள் சொல்லி வாய்மூடுவதற்குள் நான் கீழே விழுந்துவிட்டேன் பார்த்தீர்களா?'' அந்தப் பெரியவருக்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை.

''ஐயா, நான் நாட்டுக்கும், நமக்கும் ஞானத்தை வழங்கும் அதிவிவேக பரமார்த்தகுருவின் சீடன். நீங்கள் எனக்கொரு உண்மையைக் கூறவேண்டும்.''

சரியான சிக்கலில் நம்மை மாட்டி விட்டுவிட்டு வேடிக்கை பார்க்கப் போகிறான் என்று நினைத்த பெரியவர், முக்கி முனங்கி,

''சொல்லு பார்ப்போம்'' என்றார்.

''எங்கள் பரமார்த்த குரு, எப்போது சாவார்?''

சற்று நேரம் ஆடிப்போன பெரியவருக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

''ஏன் அப்படிக் கேட்கிறாய்?''

''வேறொன்றும் இல்லை. அவருக்கு வயதாகிவிட்டது. அடிக்கடி இருமலும், தும்மலும் வருகிறது. அவர் அதிக நாட்கள் உயிர்வாழ என்ன செய்ய வேண்டுமென்று சீடர்களாகிய நாங்கள் அறிய விரும்புகிறோம். அருடைய சாவின் அறிகுறிகள் என்ன, எவ்விதமான நோய் அவருக்கு வரும்? ஐயன் மீர், தயவு செய்து சொல்ல வேண்டும்'' என்றான்.

'இது என்ன தொந்தரவு? குருடனைப் போய் ராஜமுழி முழிக்கச் சொன்ன கதையாய் இருக்கிறது. சோதிடம் தெரியாது என்று சொல்லிவிட்டால், ஓங்கி ஓர் அறை விட்டாலும் விடுவான்' என்று மனதிற்குள் பயந்த அவர் சற்று நேரம் மௌனமாக நின்றார்.

''பதில் சொல்லுங்கள் பண்டிதரே'' சற்று அதட்டலாகக் கேட்டான்.

அவருக்குப் பதற்றம், நடுக்கம்! எதுவும் புலப்படவில்லை. சற்று அசடுவழிந்த அவர்,

'ஆசனசீதம் ஜீவ நாசம்' என்ற வடமொழிச் சுலோகம் ஒன்றைக் கூறினார். அதைக் கேட்ட மட்டிக்கு ஒன்றும் புரியவில்லை.

''பெரியவரே, இதற்கு என்ன பொருள்?''

''உன் குருவுக்கு ஆசனவாய் எப்போ குளிர்ந்து காணப்படுகிறதோ அதுவே சாவிற்கு அடையாளம்'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து தப்பித்தோம், பிழைத்தோம் என்று ஓடினார்.

மட்டி காயங்களுடன் இரத்தம் ஒழுக ஒழுக வந்து நிற்பதைக் கண்ட குரு மிகுந்த பதைபதைப்புடன் காரணம் கேட்க, அவன் நடந்தவற்றை ஒன்று விடாமல் அப்படியே ஒப்புவித்தான்.

சீடர்களுக்கு அந்தச் சோதிடனின் வாக்கில் நம்பிக்கை வந்தது. ''மட்டிக்கு உடனே பலித்த சோதிடம் உங்களுக்கு மட்டும் எப்படிப் பலிக்காமல் போய்விடும்?'' மிலேச்சன் கேட்டான்.

''இது சாதராண விஷயமல்ல குருவே. நீங்கள் ஆசனவாயில் குளிர்ந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்'' மடையன் சொன்னான்.

''நீங்கள் மலஜலம் கழித்த உடன் கால் கழுவாமல் இருப்பதே நல்லதென்று எனக்குத் தோன்றுகிறது.''

''நானும் அப்படித்தான் நினைக்கிறேன். உங்களுக்கு ஆசனவாயில் குளிர்ந்து இறப்பு ஏற்பட்டால், எங்களால் அதைத் தாங்கிக்கொள்ள முடியாது.''

''நீங்கள் செத்துவிட்டால் வேறொரு குருவுக்கு நாங்கள் எங்கே செல்வோம்?'' மற்ற சீடர்களும் தங்கள் பங்கிற்கு வாயில் வந்ததை எல்லாம் சொன்னார்கள்.

குரு அவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டார்.

அன்றிலிருந்து அவர் மலசுத்தி செய்வதில்லை. *

---

## அழகாக நிறம் தீட்டுங்கள்; 64



தம்பி, தங்கைகளே! அருகே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். மிகச் சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவுசெய்யப்படும் படம், உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விவரங்களுடன் பிரசுரமாகும். எங்கே உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

## சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்ட படம்

### அழகாக நிறம் தீட்டுங்கள்; 61



ஆ...ஷா, தரம் - 03.
கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை, கல்முனை.

### பாராட்டுப் பெறுவோர்...

1. ஆர். அபிலாஷ், தரம் - 5, பார்குசன் உயர் கல்லூரி, இரத்தினபுரி.
2. ஆர். டினோஷ் மேர்ஷிலின், இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு.
3. செல்வி றைசா அஸ்மத், தரம் 3, களு/ஜீலான் நவோதய மத்திய கல்லூரி, ஹேனமுல்ல, யாணந்துறை.

## சிறுவர் கைவண்ணம்




வி. சுஜிகரன்,
மு/ஸ்ரீசுப்பிரமணியவி. சா பழக்குடியிருப்பு.



வை. சஜீவன்,
மு/ஸ்ரீசுப்பிரமணியவி. சா பழக்குடியிருப்பு, முல்லைத்தீவு.



இராமசாமி ராமேஸ்,
உடுப்புக்குளம் அளம்பில், முல்லைத்தீவு.



ஜே. செ. பாத்திமா முஷாசாலீ,
பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம்.
புத்தளம்.

# சிறு விளம்பரங்கள்

## திருமண சேவை

சுலபமான வாழ்கைத் துணைத் தெரிவுக்கு சுயதெரிவுமுறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திடத் திங்கள்.புதன்.வெள்ளி மாலை வேளைகளில் சுயதெரிவு முறைமுன்னோடி சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப் படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழுவேல் அமுதனிடம் தொடர்புகொள்ளுக! தொலைபேசி:2360488, 2360694,4873929.

சக்தி திருமணச் சேவை. யாழ்.கொழும்பு இந்திய வம்சாவளி இந்து, RC உள்ளூர் வெளிநாடு மணமக்களை பெற்றுக் கொள்ளலாம்.Shanthi Marriage Service, # 30, Ramani Mawatha, Negombo. 031 2232130, 0777 043138, 031 5674603.

மலையகத்தில ஜாதி சமயத்திற்கேற்ப திருமணங்கள் இணைத்து தருகின்றோம். எல்லா ஜாதியிலும் மணமக்கள் கைவசம் உண்டு. உடன் நாடுக நுவரெலியா 052 5670132.

## வீடு விற்பனைக்கு

கந்தானையில் பிரதான வீதிக்கு 200 மீற்றர் அருகில் 11 பேர்ச்சில் அமைந்த 03 படுக்கை அறைகள் இணைநத குளிய லறைகள் கொண்ட பூர்த்திசெய்யப்பட்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளுங்கள்: 077 9456330, 072 340 5501, 2244065.

கொழும்புக்கு 100மீற்றர் தூரத்தில் பேலியகொடையில 10.55 பேர்ச்சஸ் 2 Bedrooms, 3 hall சகல வசதிகளுடன் காசாக 32 இலட்சம் மிகுதி 30 இலட்சம் மொத்த விலை 62 இலட்சம் தொடர்பு: 077 4478 357.

கொழும்பு 5 கிருலப்பனை 8.38 பேர்ச்சஸ் 2 B/R வீடு தமிழ் முஸ்லிம்களுக்கு மிகவும் உகந்த அமைதியான சூழலில் உடன் விற்பனைக்குண்டு. மொத்த விலை 92 இலட்சம். Tel. 071 4724264.

கிராண்ட்பாஸ இங்குறுகடை சந்திக்கு அருகில் பிரதான பாதையை நோக்கியவாறு 10 பேரச்சஸ காணி விற்பனைக் குண்டு : 0714117272.

வெல்லம்பிட்டிய தரமாக கட்டப்பட்ட 3 அறைகளைக் கொண்ட புத்தம் புதிய வீடு. எல்லா வசதிகளோடும் விற்பனைககு நடை தூரம் அவிசாவளை / கொழும்பு பிரதான வீதிக்கு வங்கி. சுப்பர் மார்க்கட் வைத்தியசாலை மற்றும் அரசாங்க காரியாலயம் போன்ற வற்றிற்கு அருகில் 203/6. வென்னவத்த வீதி வெலலா மபிட்டிய 0777 995599.

## தேவை

கொலன்னாவையில் லேடிஸ் பேக் தைக்கத் தெரிந்த ஆண்.பெண் தேவை. தனியாகவோ சேர்ந்தோ தைக்கலாம். பேக் ஒன்றுக்கு 40/- ரூபா வழங்கப்படும். தொடர்பு: 078 6367072.

குத்தகைக்கு: கொழும்பு புறக்கோட்டையில் மாதம 5 இலட்சம வருமானமுள்ள லொட்ஜ ஒன்றுக்கு குததகைக்கு பஙகாளர் தேவை. தொடர்பு கொள்ளவும்: 078 6367072.

பஞ்சிகாவத்தையில Motor Spare கடைககு Salesman தேவை. அனுபவம் அவசியமில்லை. தொடர்பு 0777 886527, 49 81015.

எககவுணடஸ கிளார்க் தேவை. 25-30 வயதுடைய இளமையான சுறுசுறுப்பான G.C.E. A/L கல்வி அறிவுடன் ஆங்கில கம்பியூட்டர் அறிவு கொண்ட ஆண்/பெண தேவை. நாளாந்தம் வர்த்தக கணக்குகள் மற்றும் களஞ்சிய கணக்குகள் பராமரிக்க இயலுமானதாக இருக்க வேண்டும். கவர்ச்சிகரமான சம்பளம் உண்டு. தொடர்பு:2438418, 077 31 31 74, 077 31 31 75.

பேலியகொடையில் அமைநதுள்ள எமது அச்சகத்திற்கு கோட மெசின் Operator, உதவியாளர் (Helper), Computer Graphic Designer முன் அனுபவமுள்ளவர்கள் தேவை. தொடர்புகளுக்கு: 2949198.

வத்தளைப் பகுதியில் இந்து தமிழ் மொழி மூல தனியார் பாடசாலை (தரம் 1-5) ஒன்றை 2009 ஜனவரியில் ஆரம்பிக்க பாடசாலை அதிபரும் முகாமையாளருமாகப் பணியாற்ற ஓய்வு பெற்றவர்கள் தேவை. விண்ணப்பங்கள் பாடசாலையை நிர்வாகிக்கும் முழுமையான அனுபவமும் அறிவும் உடையவராய் இருத்தல் வேண்டும். சுயவிபரப்பத்திரம் மற்றும் சான்றிதழ்களுடன் கீழ்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். இல. 54-4வது மாடி வாலுக்காராம வீதி, கொழும்பு -03.

மலேசியாவில் முக்கிய நகரங்களில் அனுபவம்வாய்ந்தவர்களோடு சேர்ந்தும் தனியாகவும் தொழில்செய்ய விருப்பமானவர்கள் உங்கள் முதலானதை சரியான வழியில் பயன்படுத்தி வெற்றியடைய விருப்பமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும். ஹோட்டல் அம்போட் எக்ஸ்போட் போன்ற தகுந்த தொழில்கள் செய்ய ஆலோசனை வழங்கப்படும். தொடர்பு: Tel: No. 0060 123 414512, 078 6054492.

நாவலப்பிட்டியில பிரபல புடவை கடைக்கு அனுபவமுள்ள, அனுபவமற்றஆண். பெண் விற்பனையாளர்கள்(Sales Boys / Girls) தேவை. உணவு.தங்குமிட வசதியுடன் நல்ல சம்பளம். நேரில் வரவும். இல 12.Gampola Road, Nawalapitya. Tel:054 2223027, 071 6815023.

புதிதாக அமையவிருக்கும் ஹோட்டல் ஒன்றிற்கு கெசியர்,சமையல்,ரொட்டி வெயிட்டர்.ஆகியோர் தேவை வீதி. கொழும்பு 15. Tel:077 8003783, 0777 895309.

கொழும்புக்கு அருகாமையில் உள்ள பல சரக்கு கடையொன்றிற்கு நன்கு அனுபவமுள்ள K.P. தேவை. (தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவர்கள்) தங்குமிடம் சாப்பாடு இலவசம் வயது எல்லை 18 - 35 இடைப்பட்டவர்கள். தொடர்புகொள்ள:0777 5131 45.இரவு 8.00 - 10.00 வரை.

கொழும்பு - 2 இல் உள்ள பிரபல தனியார் விநியோக நிறுவனத்திற்கு கணக்குப் பிள்ளை. கம்பியூட்டரில் வேலை செய்பவர்கள் தேவை 0716106049, 0713529947.

உணவு வகைகள் தயாரிக்கும் இடத்திற்கு சைக்கிள் ஓடக்கூடிய 22 வயது பொடியன் தேவை. சம்பளம் 10,000/- தங்கி வேலை செய்யவேண்டும். தங்குமிட வசதியுண்டு. மலையகத் தமிழர் மட்டும் விண்ணப்பிக்கவும். தெகிவளை / கல்கிசை பகுதிகளிலுள்ள பெண் ஒருவர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம். 82/8. ஸ்ரீ மகா விகார றோட். களுபோவிலை. Tel: 2730 447.

பாதுகாப்பு வேலை வாய்ப்பு உடனடியாக நிரப்புவதற்காக OIC,JSO போன்றவற்றுக்காக செக்கியூரிட்டி வேலை வாய்ப்புகள் உள்ளன. அதிக சம்பளம் கிளடியேட்டர் இன்டர்நஷனல் (தனி) நிறுவனம். இல 519/7. எல்விட்டிக்ல மாவத்தை நார ஹேன்பிட்டி.

40 வயதுக்கு மேற்பட்ட ஆண் Office Clerk வேலைக்கு உடன் தேவை. தெஹிவளை சுற்றுவட்டாரத்தவர் மட்டும் விண்ணப்பிக்கவும். (Interview நேரம் 2.00 p.m to 5.00 p.m ) Dr. Razul Manzur. No. 198/2A, Hill Street, Dehiwala. 060 2172645, 071 413 6254, 078 5178019.

தினசரி ஒரு லட்சம் வியாபாரம் செய்யக்கூடிய ஹார்ட்வெயார் கடைக்கு குறைந்த பட்சம் ரூ. 20 லட்சம் லட்சம் முதலிடக்கூடிய பங்காளர் தேவை. அதேபோல், Construction Company ஒன்றுக்கு குறைந்த பட்சம் 10 லட்சம் முதலிடக்கூடிய பங்காளர் தேவை. நிர்வாகத்தில் ஈடுபடக்கூடிய பங்காளர் தேவை. நிர்வாகத்தில் ஈடுபடக்கூடியவர்கள் விரும்பத்தக்கது. 077 1375434.

## வாடகை

கொழும்பு 15. மட்டக்குளிய முஸ்லிம் பாடசாலை முன்னால் மெயின் றோட்டுக்கு அருகாமையில் Saloon னோடு உள்ள தோட்டத்தில் இரண்டு அறைகளுடன் 79/14 A, St. Mary's Road இல் வீடு வாடகைக்கு உண்டு. வாடகை 8000/- ஆறுமாத முற்பணம். ஞாயிறு தினங்களில் நேரில் வரவும். TP: 0777 118540.

மாளிகாவத்தை தொடர்மாடியில் கீழ் வீடு வாடகைக்கு விற்பனைக்குண்டு. தண்ணீர், மின்சாரம் ,ரெலிபோன். Parking Place, Tutory வசதி உண்டு A/225/11, NHS, Colomb 10. 2390494, 0723 292197, 077 6639786.

கிருலப்பனை, 46/1.சோமாதேவி பிளேசில் சகலவசதிகளுடனான வீடு வாடகைக்குண்டு. Tel:2512151.

சொய்சாபுர தொடர்மாடியில் 'C' Type வீடு முதலாம் ஆம் மாடியில் வாடகைக்குண்டு. தொடர்பு: 0777 550332. 12 p.m. யிற்கு பின் தொடர்பு கொள்ளவும்.

வத்தளையில் மிளகாய் அறைக்கும் ஆலை ஒன்று குத்தகைக்குண்டு. தொடர்பு: 071 8080147.

மட்டக்களப்பு பார் வீதியில் (மாமங்க பிள்ளையார் கோவிலுக்கு செல்லும் சந்திக்கு அருகாமையில் ) 20 அடி நீளமுள்ள புதிதாக கட்டிய இரண்டு கடைகள் (2 in 1) வாடகைக் குண்டு. தொடர்பு: 079925540, 065 222 4806.

Wattala, Hendala, Thimbirigasaya Cross Road இல் சகல வசதிகளுடன் கூடிய Room உள்ள வீடு வாடகைக்கு உண்டு. ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியிலிருந்த பின்னேரம் 5 மணி வரை பார்வையிடலாம். மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க: 29365 93, 0777 165083.

மட்டக்குளியில் முதலாம் மாடியில் 2 படுக்கை அறைகள் தனியாக தனியாக முகப்பு வாயில் வாகன தரிப்பிடம் உடைய வீடு குத்தகைக்குண்டு. தொடர்பு கொள்க ஞாயிறன்று இல 34. டாக் எஸ்டி பெர்னாண்டொ மாவத்தை. கொழும்பு 15. 2527 802 ,077 3644118.

களுபோவில.தெஹிவளை மேல்மாடியில் டயில் பதிக்கப்பட்ட இரண்டு அறைகள் சகல தளபாடங்களுடன் வாடகைக்குண்டு. 36B.Wijayaba Mawatha.Hospital Road. Kalubowila. 2764074.

வீடு.காணி குத்தகைக்கு. வத்தளையை அண்மித்த சிறந்த குடியிருப்பு பிரதேசத்தில் 5.6.7 பேர்ச்சஸ் காணி தேவை. அத்துடன் மூவர் அடங்கிய சிறிய குடும்பத்திற்கு வாடகைக்கு வீடு தேவை. 0713269021.

Maradana சந்திக்கருகாமையில் தொழில் புரியும் Muslim பெண்களுக்கு மாணவிகளுக்கு தங்குமிட வசதி உண்டு.131/85, Dematagoda Road, Maradana. Colombo 10. Phone: 2675325.

Seeduwa Lease (குத்தகைக்கு). 2 பகுதி பங்களா மிகப்பெரிய 10 அறைகள்ளுடன் 200P.முகப்பாக நீரேரியைக் கொண்டது. ஹோட்டல்.களஞ்சியசாலை அல்லது எந்த வியாபாரத் தேவைகளுக்கும் உகந்தது. ஒரு பகுதியை வதிவிடமாகவும் பயன்படுத்தலாம். 120P. கட்டிடங்களும் கட்ட அபங்லுமான நிலப் பகுதி 27P நிலம் 2ஆவது துண்டு. கொழும்பு பிரதான வீதிக்கருகில் களஞ்சியசாலை. வியாபாரம் அல்லது குடியிருப்புக்கு. 0776932370, 077 5980474.

காலி வீதிக்கருகில் புதிய தொடர்மாடியில் 3 அறை வீடு அனைத்து தளபாட வசதிகளுடன் குறுங்கால வாடகைக்கும் வேறாக தொடர்மாடியில் 2 அறைகளுடன் Luxury Unit தனிவழிப்பாதை அனைத்து வசதிகளுடன் நாள், வார வாடகைக்கு. 077 29288 09.

1000 சதுர அடி வீடு பம்பலப்பிட்டியில் வாடகைக்கு. 6 மாதம் அல்லது ஒரு வருட முற்பணம் அவசியம். தொடர்புகொள்ள: 077 3184519.

## கல்வி

Edexcel Cambridge and Srilankan Syllabus English Medium Classes Grade 1 to A/L. All Subjects. தமிழ் Medium Classes, All English Professional Courses French Classes and, Trust Education, 6A, Kerawalapitya Junction, Hendala, Wattala.071 75792 42.

A/L, AAT மாணவர்களுக்கு Accounting O/L மாணவர்களுக்கு Commerce BBA Financial Management ஆசிரியரால் தனியாகவோ குழுவாகவோ கொழும்பில் கற்பிக்கப்படும். TP: 077 6569682.

பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியரால் உயிரியல் பாடம் கற்பிக்கப்படும். தனியாகவோ, கூட்டாகவோ வகுப்புகள் எடுக்கப்படும். குறிப்பாக வெள்ளவத்தை, நீர்கொழும்பு பகுதிகளில் விரும்பத்தக்கது. மீட்டல் வகுப்புகள், பயிற்சி வகுப்புகளும் உள்ளடக்கப்படும். தொடர்புக்கு: 071 5634438.

A/L Physics, மாணவர்களுக்கு கொழும்பு பிரபல பாடசாலை ஆசிரியரால் கற்பிக்கப்படும். English Medium Physics Tel:071 57 59 624, 077 7794324.

கண்டியில் Theory and Revision English Medium G.C.E. O/L, A/L (Local) IGCSE, AS,A2, (Edexel), Business Studies and Accounts Hot Line: 077 800636, 081 222 2599. B.Fernando

தமிழ்மொழி தரம் 2 முதல் 6 வரை மாணவர்களுக்கு சகல பாடங்களும்( ஆங்கிலம் உட்பட) புரியக்கூடிய வகையில் அனுபவமிக்க ஆசிரியரினால் கற்பிக்கப்படும். International School மாணவர்களுக்கும் தமிழ்மொழி கற்றுக்கொடுக்கப்படும். (மாளிகாவத்தை கச்சேரி சமீபம்) Tel:072 4807 061.

Chemistry, Biology for London O/L Edexel As, A2 மற்றும் Local O/L G.C.E. (A/L) கொழும் பில் வீடு வந்து கற்பித்தல் Educational Tool will be provided. அழையுங்கள் வித்யா. சுழற்றுங்கள்: 0777 730838.

A/L மாணவர்களுக்கான Chemistry, Biology மற்றும் 9 தொடக்கம் O/L Science, IT and Maths வீடுவந்து கற்பிக்கப்படும். M.R. Zia. B.Sc 071 3536077, 067 2224205, 011 25 92960.

## சேவை

ஐந்து மாநிலங்களுக்கூடான யாத்திரை திருச்சி. மதுரை. உச்சிப்பிள்ளையார். நவக்கிரக ஆலயங்கள். பஞ்சபூதத்திருத்தலங்கள். அறுபடை வீடுகள். ஆஞ்சநேயர் ஆலயங்கள்.திருப்பதி உட்பட 4 விஷ்ணு ஆலயங்கள்.மேல்மருவத்தூர். மைசூர் சாமுண்டீஸ்வரி உட்பட பத்துக்கு மேறபட்ட அம்மன் ஆலயங்கள். திருவண்ணாமலை உட்பட பத்து சிவன் ஆலயங்கள். சாயி பாபா. பொற்கோயில் உட்பட 70இற்கு மேற்பட்ட ஆலயங்களை தரிசிப்பதுடன். மைசூர் பிருந்தாவனம். ஊட்டி. பூம்புகார். கன்னியாகுமாரிஉட்பட தமிழ்நாடு அனைத்து ஆலயங்களையும் தரிசிக்கலாம். 10 பேர் 18 நாட்கள். ஆரம்பம் 10.10.2008 இல் 07.08.2008இற்கு பின்பு தொடர்புகொள்ளவும். (முன்பதிவு செய்யவும் 16 நாட்கள்) 05/12/2008 இல் வட இந்தியா யாத்திரை ஆரம்பமாகின்றது. விபரங்களுக்கு: கலாநிதி ஸ்ரீரங்கநாதன்: 0777 680 102, 0724 222989. 077 3108724 (சனா)

முதியோர் பராமரிப்பு குறைந்த செலவில் சிறந்த சுழலில் வைத்தியவசதி உளவளத் துணை. பொழுதுபோக்கு என்பவற்றுடன் ஆண்.பெண் இருபாலரும் பராமரிக்கப்படுவர். தொடர்பு: 5129387.

உங்கள் வைபவங்களுக்கு ஏற்றவகையில் நீங்கள் விரும்பிய கறிகளுடன் (சைவ. அசைவ) வீட்டுச் சமையலாக சமைத்துக் கொடுக்கப்படும். அத்துடன்சிற்றுண்டி வகைகளும் செய்துகொடுக்கப்படும். மேலதிக விவரங்களுக்கு தொடர்பு : 011 4986752.

உங்களிடம் வங்கியில் அடகு வைத்து மீளப்பெறமுடியாத தங்கநகைகளை நாம் வந்து மீளப்பெற்று விலைக்கு வாங்கப்படும். தொடர்புக்கு 071 3462691.

பூப்புனித நீராட்டு விழா. Reception. மற்றும் பல்வேறு வைபவங்களுக்கான Makeupகள் உங்கள் விருப்பத்திற்கேற்றவாறு மிகவும் அழகாக குறைந்த கட்டணத்தில் செய்துவிடப்படும். தொடர்புகளுக்கு: விசாலிக்கா 078 6385644.

அதிநவீன வசதிகளுடன்தனிப்பட்ட அறைகளுடன் தனியான முதியோர் பராமரிப்பு இல்லம் . வயோதிபர் ஆண் / பெண் இருபாலருக்கும் ஏற்ற அமைதியான சூழலில் உணவு. தங்குமிடம். மருத்துவம் மற்றும் எல்லாவிதமான இதர வசதிகளுடன் கொழும்புக்கு அண்மையில் வத்தளையில் அமைந்துள்ளது. கட்டணம் மற்றும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள: Kind Care Elder's Home, 17/1, George Mawatha, Mabola. Wattale. Mob : 071 4819033, tel 2942 554.

## வைத்திய ஆலோசனை

உளவளத்துணை (Psychological Counseling). நிம்மதி இன்மையா? தூக்கமின்மையா? காதல் பிரச்சினையா? படிக்க முடியவில்லையா? உங்கள் பிரச்சினைகளிலிருந்து விடுதலையடைந்து நீங்கள் ஒரு சாதனையாளராக உருவாக சிறந்த உளநல ஆலோசனைகள் (Psychological Counselling) வழங்கப்படும். தொடர்புகளுக்கு: No.16 - 1/2, Fernando Mawatha, Colombo - 06. 071 5778656, 011 45 05532.

பைத்தியம் மனநோய் புத்தி பேதலிப்பு ஹிஸ்டீரியா. நரம்புத்தளர்ச்சி போன்ற இருதயம், மூளை சம்பந்தமான அனைத்து நோய்கட்கும். கைகண்ட சித்தமருத்துவம்.தொடர்பு: Dr.S.H.M. Razeen ( Siddha) தொடர்பு. 0777 247824,060 2670 675.

பிரபலஇந்தியா மருத்துவமேதை கொழும்பில் ..... இளஞ்செழியன் அவர்கள் மூட்டு வலி.கழுத்து வலி. தோல் வலி. இடுப்பு வலி. ஆஸ்துமா. ஆண்மைக்குறைவு. குழந்தையின்மை. மற்றும் நாட்பட்ட வியாதிகளுக்கும் சிகிச்சையில நிபுணத்துவம்பெற்றவராக விளங்குகின்றார். டாக்டரை ஆகஸ்ட் 26 - செப். 1 வரை நேரில் சந்தித்து மருத்துவ சிகிச்சை பெறலாம். இல. 7 - 1/15. உம்பிச்சி பிளேஸ். ஆட்டுப்பெட்டித் தெரு. கொழும்பு - 13. 077 418 3080.

## பழுது பார்த்தல்

சகலவிதமான தொலைகாட்சிப் பெட்டிகள் (TV) உங்கள் வீடுகளுக்கே வந்து துரிதமாகவும் உத்தரவாதத்துடனும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு (St.Jude Electronics) S.டிலான்: 2388247/07 22 199334.

TopCooler Service உங்கள் குளிர்சாதனப் பெட்டி(Fridge) சரியானமுறையில் இயங்கவில்லையா? தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் அ.லோகேந்திரன் : 2734309,4204188.

சகலவிதமான குளிர்சாதன பெட்டிகள் (Fridge), A.C மற்றும் மின்சார உபகரணங்கள் அனைத்தும் ஒருவருடகால உத்தரவாதத்துடன் உடனுக்குடன் வீடுகளுக்கு வந்து திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: 077 1248204, 0715820429.

Gas Cooker Service Undertaken All Models உங்கள் வீடுகளுக்கு வந்து பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். தொடர்பு M.Nizam, B.I.F.13, Armour Street, Colombo - 12. Tel: 0777 537018.

Cell Phones Brand New/ Used Phones மற்றும் பாவித்தவைகள் மாற்றித் தரப்படும். Easy Payment Terms Contact : 077192 3050.

## சொற்சிலம்பம் போட்டி இல. 330

சொற்சிலம்பம் 330 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித்தினம் செப்.14 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றிபெற்றவர்களின் பெயர்கள் செப்.21 ஆம் திகதி சுடர்ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.328 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும்,மூன்றாவது பரிசாக 100ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல்மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல.330

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | | 5 | 6 |
| 7 | | | | | ■ | 8 | |
| 9 | | | ■ | 10 | | | ■ |
| ■ | 11 | | 12 | | ■ | 13 | 14 |
| 15 | ■ | 16 | | ■ | 17 | | |
| 18 | 19 | | ■ | 20 | | | |
| 21 | | ■ | 22 | | | ■ | |
| ■ | 23 | | | ■ | 24 | | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 330

**இடமிருந்து வலம்**

1. வயது.
4. ஒவ்வொருவருக்கும் எழுதப்பட்டது.
7. பிழையைச் சரி செய்வது.
8. சா/ இற.
9. வெட்டுவது, குத்துவது, அறுப்பது எல்லாவற்றுக்குமான கருவி.
10. அநேகர்.
11. கவலை.
13. கூட/ சேர்ந்த/ கூட்டல் குறி.
16. இன வர்க்கம்.
17. பாரம்/ மேன்மை.
18. ஊர்வன வகை. இதுவும் மூர்க்கனைப் போல கொண்டது விடாது.
20. முளைக்க/ ஆரம்பிக்க.
21. பழங்களின் கூட்டம் / கொத்து.
22. விடாய்.
23. பதபகு உறுப்பில் ஒன்று.
24. தோள்/ முன்கை.

**மேலிருந்து கீழ்**

1. கூடவாக/ மிதமிஞ்சிய/ மிக.
2. ஒன்றின் உட்பொருள்/ விளக்கம்.
3. மருத்துவமனை.
4. தூண்/ கம்பம்.
5. திறனாய்வு.
6. மூன்று/ விளக்கில் எரிவது.
12. மன்மதன் காதலி.
14. நிலத்திற்கு விரிப்பது.
15. பாக்குமரம்.
17. இனிப்பான தாவரம்.
19. தலைமை தாங்கும் மாது.
20. உள்/ மன / உட்புற.
22. பணிவிடை செய்பவள்.

## சொற்சிலம்பம் போட்டி இல.328

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 க | 2 தி | ர் | 3 கா | 4 ம | ம் | ■ | 5 அ |
| 6 த | ரு | ■ | 7 து | ரு | ■ | 8 ச | ரி |
| 9 க | டு | 10 கு | ■ | 11 க | ரு | த் | து |
| ளி | ■ | 12 ம | 13 க | ன் | ■ | த | ■ |
| ■ | 14 க | ர | டி | ■ | 15 ந | ம் | 16 ப |
| 17 அ | ர | ன் | ■ | 18 சா | க | ■ | ண் |
| 19 தி | ண் | ■ | 20 வ | ரு | ம் | 21 ப | டி |
| 22 க | டி | கா | ர | ம் | ■ | 23 சி | கை |

## சொற்சிலம்பம் போட்டி இல. 328

1. திருமதி வ.பாலசுப்பிரமணியம், பிரதான வீதி, தம்பிலுவில் - 01.
2. திருமதி ஆர்.எம்.பாலேந்திரா, இல. 10 A/2 கேன்முல்ல, கொச்சிக்கடை.
3. த. சாம்பசிவம், B4 - F20 புளுமெண்டல்- தொடர்மாடி, கொழும்பு - 13.

1. த. நாகையா, கல்முனை.
2. ஏ.பி.யூ.வெல்வை, புத்தளம்.
3. எஸ். ஜெயச்சந்திரராசன், வவுனியா.
4. க. சர்ஜனா, யாழ்ப்பாணம்.
5. தாமோதரம் வடிவேல், செங்கலடி.
6. துஷானா எட்வேட், திருகோணமலை.
7. எஸ். என். மணி, நுவரெலியா.
8. சி. நீரஜா, மட்டக்களப்பு.
9. பே. நாவலன், வவுனியா.
10. நஸ்லான் ஹரிஸ், பேருவளை.
11. தி.திருஞானசம்பந்தன், மாங்குளம்.
12. ப. புவனேஸ்வரன், தலவாக்கலை.
13. ச. வேதநாயகம், புளியங்குளம்.
14. ப.பத்மஸ்ரீ, திருகோணமலை.
15. பெ. புஸ்பராணி, கொழும்பு -.15.

### நான் கண்ட பாரதி...

( 10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடங்கிய நூல் ஒன்றினை 'பாரதி ஆச்ரமம்' என்ற நிறுவனத்தின் பெயரால் வெளியிட்டார்.

அந்த நூலிலேதான் பாரதியாரின் வாழ்க்கை வரலாறு முதன் முதலாக, மிகச் சுருக்கமாக எழுதப்பட்டிருந்தது.

அதை எழுதியவர், பின்னர் சிறந்த தமிழ் ஆராய்ச்சி அறிஞராக விளங்கிய நாவலர் சோமசுந்தர பாரதியார் எம்.ஏ., பி.எல். அவர்களாவர்.

நாவலர் சோமசுந்தர பாரதியார் நமது வரகவி சுப்பிரமணிய பாரதியாருடன் இளம் பராயத்தில் உடன் மாணவராகப் பயின்றவர்.

பாரதியாரைப் பற்றி நாவலர் சோமசுந்தரர் ஓரிடத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்:

"......இவரைத் (பாரதியாரை) *தமிழகம் அநாதரவு செய்தது. அப்படிச் செய்தது இவருக்குக் குறையும் இல்லை; தமிழர்க்குப் புதுமையுமில்லை. புதுச் சிறு விளக்குகளைக் கண்டு அதிசயிக்கும் மாந்தர் செம்பரிதி ஒளிகண்டு புகழ்வதில்லை. சிற்றுண்டிச் சுவைக்கு மகிழ்பவர், அமிர்தம் சிறந்த ருசியுடையது என்று அதிசயிப்பதில்லை... இவ்வுயர் புலவரை, அளப்பரிய அவர் தலைமைப் புலமைப் பெருமிதமிகுதியால் மட்டுமே நமதுலகம் அறிய முடியாததாயிற்று போலும்*"

1922 ஆம் ஆண்டில் நாவலர் சோமசுந்தரர் எழுதிய மேற்படி வாசகத்திலிருந்தே, நமது வரகவி பாரதியார் இறந்த சமயத்தில் கூட அவர் சரியாக மதிக்கப்படவில்லை, மரியாதை செய்யப்படவில்லை என்பது புலனாகின்றது.

பத்து ஆண்டுகள் கழியும் வரை தமிழகத்தில் இதே நிலை தான் நிலவியது. பாரதியாரின் மேதா விலாசம் குடத்திலிட்ட விளக்காகவே இருந்து வந்தது.

அதை, குன்றின் மேல் ஏற்றிய விளக்காக ஆக்குவதற்கு ஒருவர் தேவைப்பட்டார்.

பாரதி மறைந்து சுமார் 12 ஆண்டுகளுக்குப் பின்னர் -

சுவாமி விபுலாநந்தர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைப் பேராசிரியராகப் பதவியேற்றுப் பணியாற்றிய சுமார் மூன்று ஆண்டுக் காலமே பாரதியாரின் புகழுக்கு ஒரு புது மலர்ச்சி ஏற்பட்ட காலம் ஆகும்.

பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து படித்த, பட்டம் பெற்ற, பேராசிரியரான ஒரு பற்றற்ற துறவியின் குரல் பாரதியை ஏற்றிப் போற்றுகிறது என்று தெரிந்ததும் தமிழ்நாடு சற்று விழித்துத் திரும்பிப் பார்த்தது!

இந்தப் புதுப் பார்வையைத் தொடர்ந்து ஏனைய சம்பவங்கள் எப்படித் தொடர நிகழ்ந்தன என்பதை அடுத்த வாரக் கட்டுரையில் பார்ப்போம்.

### நிறவெறிக்கு....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கறுப்பினத்தவர் ஜனாதிபதி என்றால் அவரை அவர்கள் ('வெள்ளையர்கள்') நிச்சயம் கொல்வார்கள்" என தெரிவித்ததையும் ஆய்வாளர் நினைவுகூர்ந்துள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் தேர்தலில் போட்டியிடுவது குறித்து சிந்தித்ததையும் உயிர் அச்சம் காரணமாக அவர் அந்த எண்ணத்தை கைவிட்டதையும் குறிப்பிட்ட ஆய்வாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் ஒபாமாவின் உயிருக்கு ஆபத்து என்ற விடயம் தவிர்க்க முடியாதபடி இடம்பெற்றமையும் சுட்டிக் காட்டப்படவேண்டியதாகும்.

கடந்த மே மாதத்தில் பொபி கென்னடியின் படுகொலையை நினைவுபடுத்தியதற்காக ஹிலாரி கடுமையாக விமர்சிக்கப்பட்டார்.

(குத்துச்சண்டை வீரரான பெர்னார்ட் ஹொப்கின்ஸ், "ஒபாமாவை ஜனாதிபதியாக வருவதற்கு விடமாட்டார்கள். அப்படி அனுமதித்தாலும் கூட அது குறுகிய காலத்திற்கே நீடிக்கும். ஆகக்குறைந்தது ஒரு மாதத்திற்கு" எனக் குறிப்பிட்டார்.

ஒபாமாவின் நிறமே அவர் இலக்கு வைக்கப்படுவதற்கு காரணம் என்றாலும் அதற்கு அப்பால் அமெரிக்க சமூகத்தில் இன்றும் காணப்படும் வன்முறையுடன் கூடிய நிறவெறியே காரணம்.

மேலும் ஜனாதிபதிகள் கொலை செய்யப்படுவது குறித்து அமெரிக்காவுக்கு நீண்ட பாரம்பரியமும் உள்ளது. 43 ஜனாதிபதிகளில் நால்வர் கொலை செய்யப்பட்டனர். 17கொலை முயற்சிகளும் இடம்பெற்றுள்ளன. கடந்தவாரம் கைதுசெய்யப்பட்டவர்கள் ஆபிரகாம் லிங்கனையும், ஜேம்ஸ் கார்பீல்டையும் கொலை செய்தவர்களைப் பின்பற்றியிருக்கமாட்டார்கள் என்ற கருத்தும் காணப்படுகின்றது.

ஜனாதிபதி படுகொலை முயற்சிகளில் ஈடுபடுபவர்களின் நோக்கமும் மாறுபட்டதாகக் காணப்படுகின்றது. எனினும், கடுமையான பகையுணர்ச்சி, சீற்றம், பிரபலமாக விரும்புதல் மற்றும் வரலாற்றின் போக்கை தீர்மானிக்க விரும்புதல் என்பன இவர்களின் பொதுவான குணாதிசயங்களாகக் காணப்படுகின்றன.

மேலும் இவர்கள் வயது குறைந்தவர்களாகவும் ஏதேனும் ஓர் அளவில் போதைப் பொருள் பாவனைக்கு உட்பட்டவர்களாகவும் விளங்குவதுடன் முன்னர் ஜனாதிபதிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை அப்படியே பின்பற்றுபவர்களாகவும் காணப்படுகின்றனர்.

அமெரிக்காவின் முதலாவது அரசியல் படுகொலை நாடக அரங்கொன்றில் இடம்பெற்றது. இதன்பின்னர் இது பரவலாக பின்பற்றப்படுகின்றது. இனந்தெரியாத நபர் ஒருவர் பொது இடத்தில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு ஜனாதிபதியை கொலை செய்வதும், உடனடியாக அந்த இடத்திலிருந்து தப்பிச்செல்வதும், பின்னர் கைது செய்யப்படுவதும் வழமையாகியுள்ளது.

அமெரிக்க உளவியலாளர் ஒருவர் இந்த படுகொலைகள் ஒருநாடகம் போல பேணப்படுகின்றன என்கிறார்.

ஒபாமாவிற்கு அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பை கருத்தில் கொள்ளும்போது, அவரை நெருங்குவதே கடினம். எனினும் கைது செய்யப்பட்ட குழுவினர் அதனை முயன்று பார்க்கத் துணிந்தனர் என சுட்டிக் காட்டும் ஆய்வாளர்கள் இதுவோர் ஒத்திகையாகவும் இருக்கலாம் என்கின்றனர்.

ஜனாதிபதியை கொல்வது மிகக் கடினமான விடயம் என்றபோதிலும் அது அமெரிக்கர்களின் வாழ்க்கையில் பிரித்துப் பார்க்க முடியாத விடயமாகிவிட்டது. ✱

### மணமாகாத...

(16ஆம் பக்கத் தொடர்ச்சி )

காரணிகளாக உள்ளன. பல சந்தர்ப்பங்களில் கல்வித் தகுதி, அவலட்சணமான தோற்றம், கெட்டப்பழக்கங்கள் ஆகியவற்றைப் பின்னுக்குத் தள்ளி சாதி முக்கியத்துவம் பெற்றுவிடுகிறது. நிர்ப்பந்தத்தின் பேரில் செய்யப்படும் இந்தப் பொருத்தமில்லாத திருமணங்களில் விவாகரத்துக்கான சாத்தியங்கள் அதிகம்.

பொதுவாக இதுபோன்ற பொருத்தமில்லாத திருமணத்தால் விவாகரத்து பெறும் பெண்கள் மறுமணம் செய்ய அச்சப்படுகின்றனர். அதனால், சமுதாயத்திலிருந்து ஒதுங்கி ஒரு ரகசியமான வாழ்க்கை வாழும் நிப்பந்தத்துக்கு ஆளாகின்றனர். தனிமையில் வசிக்கும் வயது முதிர்ந்த பெண்கள் குழப்பத்துக்கு ஆளாவதும், தற்கொலை செய்து கொள்வதும் அதிகரித்திருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

சமூகத்தின் நிபந்தனைகளுக்கு ஆளாகும் தனிமையான பெண்கள் பலவித மனப் போராட்டங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இது அவர்களின் மனநலத்தை பாதித்து பயம், முடிவெடுப்பதில் குழப்பம், எதிர்காலம் பற்றிய அதிக பட்ச கவலை, தூக்கமின்மை, ஒழுங்கற்ற மாதவிலக்கு ஆகிய பிரச்சினைகளையும் ஏற்படுத்திவிடுகிறது. எரிச்சல், அதிக கோபம் ஆகியவை பலவீனமான மனதின் வெளிப்பாடுகள். மிகுந்த பிரச்சினைக்கு ஆளாகிய பெண்களுக்கு வலிப்பு நோய் கூட ஏற்படலாம். ✱

### குழந்தை...

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி )


இரத்த ஓட்டமும் பயனும் கிடைக்கும்.

**ரிலாக்சேஷன் எனப்படும் ஓய்வு:**

தமிழில் சொல்வதானால் ஓய்வு என்பதை விட ஹாயாகச் சுதந்திரமாக இருப்பதுதான் ஓய்வு. ஒவ்வொரு நாளும் சிறிது நேரமாவது அப்படி இருப்பதால் மனதுக்கும், உடலுக்கும் புத்துணர்ச்சி கிடைக்கிறது. எப்படியும் அவ்வாறு இருப்பதற்கான நேரத்தைத் தேடிக் கொள்ளத்தவறக் கூடாது. இவ்வாறு ஓய்வுபெறக் கணவரின் துணையைப் பெற்றுக்கொள்வதும் நல்லது.

பிள்ளை பெற்ற பின்னும் இளமையுடனும், உடல் நலத்துடனும் குறிப்பாக மகிழ்ச்சியுடனும் இருக்கும் ரகசியம் இதுதான் என்று அடுத்தவர்களுக்கும் எடுத்துச் சொல்லலாம். ✱

# இயந்திர மனிதனுக்குச் சவாலாக செயற்கை உயிரியல் மனிதன்?



கணினித்துறையின் வளர்ச்சியுடன் உருவாக்கப்பட்ட இயந்திர மனிதன் 'ரோபோ' பற்றி நீங்கள்அறிந்திருப்பீர்கள். மனிதனைப் போலவே வடிவமைக்கப்பட்டு கணினி மற்றும் இலத்திரனியல் சாகசங்களால் மனிதன் போலவும் மனிதனுக்கு மேலாகவும் செயற்படக்கூடியவாறு இன்று வளர்ச்சியடைந்த நாடுகளில் பல ரோபோக்கள் இருப்பதையும் அவற்றின் செயற்பாடுகள் மூலம் பல வேலைகளை இலகுபடுத்துவதையும் பத்திரிகை மற்றும் ஊடகங்கள் மூலம் அறிகிறோம்.

ரோபோ எனப்படும் இயந்திர மனித உருவாக்கத்தின் பின்னர் தற்போது அறிவியல் உலகம் உயிரியல் மனித உறுப்புகளை உருவாக்குவதில் வெற்றி கண்டுள்ளது. இரசாயன செயற்கை மனித உருவாக்கம் பற்றியும் தீவிரமாக ஆய்வுசெய்து இறைவனுக்கும் இயற்கைக்கும் சவால்விடுகிறது.

செயற்கை உயிரினமாக இரசாயன மனிதனை உருவாக்குவதில் தாமதம் ஏற்படுமாயினும், உயிரியல் மனிதனை மனித தண்டுக் கலங்களின் (Stern cells) உதவியுடன் அவயம் அவயமாக உருவாக்கி அவற்றைப் பொருத்தி இலத்திரனியல் உதவியுடன் செயற்பட வைத்தல் என்பது விரைவில் சாத்தியமாகும் நிலை தென்படுகிறது.

குளோனிங் உயிரினம் போலவோ, இரசாயன உயிரியல் செயற்கை மனிதன் போலவோ இந்த உயிரியல் மனிதனுக்கு உயிரூட்ட முடியாது. எனினும், இயந்திர மனிதனைப் போல உயிரியல் மனிதனையும் இயங்க வைக்கமுடியும்.

ரோபோவுக்கும் இந்த உயிரியல் மனிதனுக்கும் ஒரே ஒரு முக்கியமான வித்தியாசம், இயந்திர உறுப்புக்களுக்குப் பதிலாக மனித உடலில் உள்ள உறுப்புக்கள் போல அவயங்கள் இருப்பது ஆகும். இந்த உறுப்புகள், இறந்து அழிந்துவிடாவண்ணம் பராமரிக்கப்படமுடியும்

டாக்டர்.ச.முருகானந்தன்

அண்மைக்காலமாக நவீன மருத்துவத்துறையில் பாரிய வளர்ச்சிப்படிகள் ஏற்படுத்தப் படுகின்றன. அவற்றில் ஒருமுறைதான் தண்டுக் கலங்களைப் பிரித்தெடுத்து நோயால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நட்டு விருத்தியாக்கி குணப்படுத்தும் முறை. மனித கரு உருவாகும் வேளையிலேயே பரம்பரை அலகுகளில் தொடரும் நோய்களை நீக்கவும் இம்முறை பயன்படுத்தப்படுகின்றது. இப்போது செயற்கை உறுப்புகளைப் பொருத்தி சிகிச்சை அளிப்பதற்குப் பதிலாக தண்டுக் கலங்கள் மூலம் உருவாக்கும் உயிரியல் உறுப்புகளைப் பொருத்தி சிகிச்சையளிக்கும் முறையை விஞ்ஞானிகள் சாத்தியமாக்கி உள்ளனர்.

தண்டுக் கலங்கள் தம்மைத்தாமே புதுப்பிக்கும் ஆற்றல் கொண்டவை. சோதனைக்கூடத்தில் உருவாகி வளர்ச்சிபெறும் ஆற்றல் மிக்கவை. இந்த அடிப்படையில்தான் மனித உடலில் ஏற்படும் சில கொடிய நோய்களுக்குக் காரணமான பாதிப்படைந்த மரபணுக்களை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக தண்டுக் கலங்களை பாதிப்பற்றவர்களிடமிருந்து பெற்று நோயாளியின் உடலில் பொருத்திவிட்டால் அவை வளர்ச்சியடைந்து பெருகி பாதிப்புற்ற உடலுறுப்பினுள் ஊடுருவி நோயை வேருடன் களைகிறது. உடலுறுப்பு அல்லது பரம்பரை நோய் குணமடைந்து ஓர் நிரந்தரத் தீர்வு ஏற்பட வழிபிறக்கிறது. மரபணு மாற்றுச் சிகிச்சையும் இந்த வகையிலேயே செயற்படுத்தப்படுகின்றது.

இந்த வகையில் மனித உறுப்புக்களை தண்டுக் கலங்களிலிருந்து உருவாக்கி இணைத்துச் செயற்படுத்தும் சாத்தியக்கூறுகள் பற்றி ஆராயப்படுகின்றது. ஒவ்வோர் உறுப்பாக உருவாக்கி அதைச் செயற்படத்திக் காட்டுவதில் ஏற்கனவே வெற்றி கண்டுள்ளார்கள். மனிதனின் சகல உறுப்புக்களையும் தண்டுக்கலங்களில் இருந்து உருவாக்கி முற்று முழுதாக உயிரியல் மனிதனை ஒன்றிணைத்து உருவாக்குதல் அதிக செலவை ஏற்படுத்தக்கூடியது. பயன்பாடும் அவசியமற்றது. எனவே, இந்த தொழில்நுட்பம் செயற்கை உறுப்புகளுக்குப் பதிலாக உயிரியல் உறுப்புகளைப் பயன்படுத்துவதில் உபயோகிக்கப்படுகிறது. உதாரணமாகத் தற்போது அவயம் இழந்தவர்களுக்கு பொருத்தப்படும் பிளாஸ்ரிக் உறுப்புகளுக்குப் பதிலாக நிஜமான உறுப்பை ஒத்ததாக உயிரியல் தொழில்நுட்பம் மூலம் உருவாக்கிய உறுப்பைப் பயன்படுத்தலாம். இது உள்ளுறுப்புகளுக்கும் பொருந்தும்.

இவ்விதமான உறுப்புக்களை பொருத்துவதன் மூலம் மனித மூளை நரம்புத் தொகுதியின் கட்டுப்பாட்டுக்குள் இவற்றைக்கொண்டு வரமுடியும். இரத்தச்சுற்று மற்றும் முற்றுமுழுதாக மனிதனின் உடலோடு இசைந்துபோதல் என்பன சாத்தியமாகின்றது.

செயற்கை உறுப்புகளைப் பொருத்தும் போது உயிரியல் உறுப்புகளைப் பொருத்துவதனால் நோயின் குறைபாடு அல்லது அவய குறைபாடு இருந்தமை தெரியாதவாறு இயற்கையாக ஒன்றிவிடுகிறது. இதனால், எதிர்காலத்தில் வலதுகுறைந்தவர்கள், ஏனைய குறைபாடுகள் உள்ளவர்கள் என்று எவருமே இல்லாத நிலை ஏற்படுகிறது.

இயந்திர மனிதனைப் போல் முற்றுமுழுதாக ஓர் உயிரியல் மனிதனை உருவாக்குதல் லாபகரமானது அல்ல என்பதாலும் இன்னும் தீர்க்கப்படாத இணைப்பு, ஒருங்கிணைந்த, கணினி மின்னியல் தொடர்புகள் பற்றிய மேலதிக ஆய்வு தேவைப்படுவதனாலும் முற்றுமுழுதான உயிரியல் செயற்கை மனிதன் தற்போதைக்கு இயந்திர மனிதனுக்கு போட்டியாக வருதல் அசாத்தியமே. ★

---

அரசின் பிரசாரமும்......

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் படைகள் பூநகரி நோக்கி எவ்வளவு வேகமாக முன்நகர முடியுமோ அவ்வளவு வேகமாக முன்நகர்ந்து பருவ மழைக்காலத்திற்கு முன் பூநகரியைக் கைப்பற்ற திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, அடுத்து வரப்போகும் வாரங்கள் படைகளின் நடவடிக்கைகளுக்கு ஆப்பாகும் வாரங்களாக அமையலாம். ஏனெனில், படைத்தரப்பே தாங்கள் அதிக இழப்புக்களைச் சந்திப்பதாக கூறியிருக்கின்றது.

தற்போது அனைவரையும் பரபரப்புக் குள்ளாக்கியிருக்கும் விடயம் வான்புலிகளின் தாக்குதலாகும். கடந்த 26ஆம் திகதி இரவு திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் வான்புலிகள் நடத்திய தாக்குதலில் படைகளுக்கு ஆளணி, ஆயுத இழப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதுவும் படைகளின் பிரசாரப் போரை பிசுபிசுக்க வைத்துவிட்டது. காரணம் ''வான்புலிகள் இனித் தாக்குதலை நடத்த முடியாது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் அனைத்தும் எமது ஷெல் வீச்சு எல்லைக்குள் வந்துவிட்டன. வான்புலிகளின் விமானங்கள் மேலெழுந்தால் ஷெல்லாலேயே அந்த விமானங்களை அழித்துவிடுவோம்'' எனக்கூறி சிங்கள தேசத்தை மட்டும் அல்ல சர்வதேசத்தைக் கூட ஏமாற்றி வந்தது அரசு.

அத்துடன் வான்புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதலில் தமக்கு எதுவித இழப்பும் இல்லை என கெகலிய ரம்புக்வெல கூறி இருக்கிறார். இது பற்றி திருகோணமலை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கும்போது காலை ஆறு மணிவரை 14 கடற்படையினரின் சடலங்களைத் தாங்கள் கண்டதாகத் தெரிவித்தன. அத்துடன் எமது தமிழ் ஊடகங்கள் 40 படையினர் கொல்லப்பட்டனர் என்று தெரிவித்தன. இதில் எது உண்மை என்பது சரியாக அறிய முடியவில்லை. ஆனால், வைத்தியசாலையிலிருந்து தெரிவித்த் குரல்கள் 14 எனத் தெரிவித்தன.

வன்னியில் படைகள் இதுவரை இருவகை உத்திகளையே பயன்படுத்தின. அதாவது நிலங்களை தாம் மீட்கும் போது அப்பிரதேசத்தில் உள்ள புலிகள் அழிந்து விடுவார்கள் என்பது ஒன்று. புலிகளை அழித்தால் நிலங்கள் தானாக மீட்கப்படும் என்பது மற்றது. இதில் படைகளால் நிலங்களை மட்டுமே மீட்க முடிந்தது. படைகள் நினைத்தபடி புலிகளை அழிக்க முடியவில்லை. அவர்கள் தந்திரோபாயமாக தமது படைவளங்களுடன் பின்நகர்ந்தே வருகின்றனர். ஒவ்வொரு களமுனையிலும் புலிகள் தந்திரோபாயமாகப் பின்நகரும் போது படைகளுக்கு கணிசமான இழப்புகளை ஏற்படுத்திவிட்டே செல்கின்றனர். மாறாக புலிகளின் வளங்கள் (நிலத்தைத் தவிர) எதனையும் படைகளால் கைப்பற்ற முடியவில்லை. படைகள் இந்த நடவடிக்கைக்கு கொட்டிய பணம் மதிப்பிட முடியாதது.

நாளை களமுனை நிலைமைகள் தலைகீழாக மாறினால் நிலைமையை சிந்தித்துப் பாருங்கள், நாட்டின் பொருளாதாரம் எதுவரை சென்றுவிடும் என்று. ஆனால் புலிகள் தமது படைபலத்தை பாதுகாப்பாக நகர்த்தி இறுதி யுத்தம் நடைபெறும்போது பயன்படுத்தினால் படைகளின் நிலைமை சொல்ல வேண்டிதில்லை. அத்துடன் வன்னி மீதான நடவடிக்கைக்கு புலிகள் கடும் எதிர்ப்பை தந்திரோபாயமாகக் காட்டியதனால் படைகளின் முன்னணி வலுவுள்ள அணிகள் எல்லாம் களமிறக்கப்பட்டிருந்தன. அப்படைகளே தற்போது அதிகம் சேதப்பட்டு இறந்தும் களமுனைக்கு வரமுடியாமலும் உள்ளன.

ஆனால் புலிகள் தமது போரிடும் ஆற்றல் மிக்க படையணிகளை இதுவரை பாதுகாப்பாகவே வைத்திருப்பதனால் அவர்கள் ஒரு பெரும் தாக்குதலை மேற்கொள்ளும்போது படைத்தரப்பில் போரிடும் ஆற்றல் மிக்க படையினரின் எண்ணிக்கையில் நிச்சயமாக பெரும் வீழ்ச்சி இருக்கும். அதன்போதே புலிகளின் மவுனத்தையும், தந்திரோபாயப் பின்நகர்வையும் சிங்கள தேசம் உணரும். அத்தருணம் எப்போது என்பதே அனைவரினதும் பெரும் கேள்வியாக உள்ளது. அதுவரை புலிகளின் பலம் குறித்த மிக மோசமான ஊகங்கள் அனைவரிடமும் எழத்தான் செய்யும். ★

*நன்றி: பதிவு.*

---

# அழகியல்

Aestheticism என்ற ஆங்கில அல்லது மேலைநாட்டுக்கலை இலக்கியக் கோட்பாட்டை 'அழகியல்' என்று நாம் அழைக்கலாம்.

எமது மொழியைப் பொறுத்தமட்டிலே எமது மொழி பேசுபவர்களுக்கு ஓர் அழகியல் கோட்பாடு இருக்கிறதா? இருக்காவிட்டாலும் தமிழர் அழகியல் பற்றி அறியக்கூடியதாக இருப்பதாக ஏ.என்.கிருஷ்ணவேணி கூறுகிறார்.

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் நுண்கலைத் துறைத் தலைவராகப் பணிபுரிகிறார். கலாநிதிப் பட்டம் பெற்ற இவர் வடமொழி, தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பரிச்சயம் பெற்றிருப்பது ஒரு வரப்பிரசாதம்.

அண்மையிலே இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் (24-08- 2008 இராமகிருஷ்ண மண்டபம்) இவர் ஒரு பேச்சை நிகழ்த்தினார். இவர் தமது உரையை கச்சிதமாகவும் விளக்கமாகவும் அதேசமயம் எடுத்துக் கொண்ட பொருளில் இருந்து விலகிச் செல்லாமலும் உச்சரிப்புத் தெளிவுடனும் பேசுவதைப் பல சந்தர்ப்பங்களில் நான் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன்.

★★

அழகியல் பற்றி அழகாகப் பேசக்கூடிய மற்றொரு அறிஞர் தகைமைசார் சபா ஜெயராசா. இவரும் மேலை/கீழை நாட்டுக் கலை, இலக்கிய, சமூகக் கோட்பாடுகளை (Concerts) நன்கு அறிந்தவர்.

கே.எஸ்.சிவகுமாரன்

கல்வித்துறை சம்பந்தமாக விசேஷமாகப் பேசக்கூடிய மற்றொரு அறிஞர் பேராசிரியர் சந்திரசேகரம்.

பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் ஏனைய அறிஞர்களுள் தகைமைசார் பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் மௌனகுரு ஆகியோர் தலைசிறந்த பேச்சாளர்கள் என்பது எனது கணிப்பு.

கலாநிதி செ.யோகராசா, ஸ்ரீபிரசாந்தன் ஆகியோர், எடுத்துக்கொண்ட பொருளின் வரம்புக்குள் நின்று கொண்டு பல தரவுகளை நியாயப்படுத்திப் பேசவல்லவர்கள். கலாநிதி துரைமனோகரன், கலாநிதி மகேஸ்வரன் போன்றோரின் ஆய்வுகளும் சுவாரஸ்யமான முறையில் அமைவதுண்டு.

ஏனைய பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பேசும் முறையை அவதானிக்க எனக்குச் சந்தர்ப்பம் அதிகம் கிடைக்கவில்லை.

தகைமைசார் பேராசிரியர்கள் கா.சிவத்தம்பி, எஸ்.தில்லைநாதன் ஆகியோரின் பேச்சில் அறிவு பரிவர்த்தனை செய்யப்படுவதைக் காணலாம்.

கலாநிதி ஏ.என்.கிருஷ்ணவேணி தமிழர் அழகியல் பற்றி எவ்வாறு விளக்குகிறார் என்று இனிப் பார்ப்போம்.

''சமஸ்கிருத கவிதையியலூடாக வளர்ந்து வந்த இந்தியக் கலை, அழகியற் கொள்கைகள் 'அலங்கார சாஸ்திரம்' என்ற பெயரினால் அழைக்கப்படுவது போன்று தமிழ் அழகியல் தனித்துறையாக வளரவில்லை. ஆயினும், அண்மைக்கால ஆய்வுகள் தொல்காப்பியத்தை ஓர் இலக்கண நூலாக மட்டுமன்றி ஒரு கவிதையியல் நூலாகவும் வெளிப்படுத்தியதன் மூலம் தமிழர் அழகியல் பற்றி அறிய முடிந்தது'' எனக் கூறுகிறார்.

அவர் மேலும் தெரிவிப்பதாவது: ''கவிதைக் கலையானது மொழியை அடிப்படையாகக் கொண்டது. மொழிக்கு வகுக்கப்பட்ட இலக்கணத்தின் அடியாக அழகியல் பற்றிய கருத்துக்களை நோக்கலாம். சமஸ்கிருத மொழியில் 'சொல்லும் பொருளும் இணைந்தது கவிதை' என்று இலக்கணம் கூறப்படுகிறது.'' - என்றார்.

பிறிதொரு சந்தர்ப்பத்திலே மேலைநாட்டார் எவ்வாறு அழகியலை நோக்கினர் என்று பார்ப்போம். ★

**1958 ஆம் ஆண்டு இலங்கையில் இனக்கலவரம் ஏற்பட்டு நூற்றுக்கணக்கான தமிழ்மக்கள் கொலைசெய்யப்பட்ட சமயம் கொழும்பில் இருந்தும் தென் இலங்கையின் ஏனைய பகுதிகளில் இருந்தும் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் சென்ற தமிழ்மக்களுக்கு யாழ்ப்பாணம் பாதுகாப்பான பிரதேசமாக இருந்தது. ஆனால், 1983 கலவரத்தின் போது யாழ்ப்பாணமும் பாதுகாப்பான பிரதேசமாக இருக்கவில்லை. தொடர்ந்தும் அந்த நிலைமையே இருந்து வருகிறது. 1958 கலவரத்தின்போது கல்கிஸையில் வசித்த அ.முத்துலிங்கம் தனது அனுபவத்தை விவரிக்கிறார்.**

# ஐயா சொன்னதில் ஒரு பொய்; ஓர் உண்மை

நாங்கள் அப்போது இலங்கையில் கல்கிஸையில் குடியிருந்தோம்.

அது தலைநகரிலிருந்து சிறிது தூரத்தில் இருந்ததால், அங்கே தலைநகரில் இருந்த வசதிகள் கிடையாது. குழாய்த் தண்ணீர் இல்லை, கிணற்றுநீர்தான். அவரவர் வீடுகளில் கோழிகளும் ஆடுகளும் வளர்த்தார்கள், பின்னால் வாழைத்தோட்டம் போட்டார்கள். முன்னால் ஈரப்பலா மரமும் கறிவேப்பிலை மரமும். இவற்றை ஒருவரும் நடுவதில்லை. தானாகவே வளர்ந்தன.

நாங்கள் வாடகை வீட்டில் தங்கியிருந்தோம். எங்கள் வீட்டுச் சொந்தக்காரர் ஒரு சிங்களவர். பெயர் பீரிஸ். அவர் எப்போதும் தலையிலே ஆமை ஓட்டினால் செய்த வளைந்த சீப்பு ஒன்றை அணிந்திருப்பார். ஏதோ தலையைச் சீவும்போது பாதியிலேயே அவசர வேலை ஒன்று வந்துவிட்டது போல அதை உச்சியிலேயே குத்தி வைத்திருப்பார். தலையைச் சீவி முடித்ததும் அவர் சீப்பைக் கழற்றியதே இல்லை. மிகவும் நல்ல மனுஷர். நாங்கள் அவ்வப்போது சந்திப்பது கிணற்றடியிலேதான். வீட்டின் சொந்தக்காரரும் நாங்களும் அதைப் பொதுவாகப் பாவித்தோம். 'போமஸ்துதி' என்பார், தொடர்ந்து புன்சிரிப்பு. அவருக்குத் தமிழ் தெரியாது. எனக்குச் சிங்களம் தெரியாது. அது வசதியாகப் போனது.

ஒரு ஞாயிற்றுக்கிழமை மதிய நேரம். இது நடந்து இப்போது சரியாக 50 வருடங்கள் ஆகின்றன. என்றாலும், எனக்கு அந்த நாள் ஞாபகம் இருக்கிறது. அது பின்னாளில் பிரபலமாகப்போகும் ஒரு ஞாயிற்றுக்கிழமை. நான் கிணற்றடியில் நின்றபோது சுனிதா வந்தாள். வீட்டுக்காரரின் மகள். வயது பதினாலு இருக்கும். அவள் இடை எந்தநேரமும் பூவரசங்கம்புபோல ஆடிக்கொண்டு இருக்கும். கண்கள் நேராகப் பார்க்காமல் ஓரமாகப் பார்க்கும். அன்று அவள் ஓரமாகக்கூட பார்க்கவில்லை. யாரோ முன்பின் தெரியாத ஆளைப் பார்ப்பது போல என்னைப் பார்த்தபடி வாளியைத் தூக்கிக்கொண்டு தன் முறைக்காகக் காத்து நின்றாள். வழக்கமாக நல்ல ஒரு புன்சிரிப்பை வெளியே விடுவாள். அன்று அதுவும் இல்லை. நான் கிணற்றுக்கயிற்றையும் வாளியையும் கொடுத்தபோது வெடுக்கென்று பற்றிக்கொண்டு தலையைத் திருப்பினாள்.

அப்போதே எனக்கு விஷயம் புரிந்திருக்கவேண்டும். என்னுடைய மூளை அந்த நாட்களில் மிகவும் மந்தமாகவே வேலை செய்தது.

பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்தபோது தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்தார். தமிழரசுக்கட்சி இதை எதிர்த்து வவுனியாவில் மாநாடு நடத்தியது சிங்களவர்களுக்குப் பிடிக்கவில்லை. பொலன்னறுவை ரயில் நிலையத்தில் சிங்களவர்கள் ரயிலுக்குள் புகுந்து தமிழர்களைத் தாக்கினார்கள். அதைத் தொடர்ந்து, ஹிங்குராகொட என்னும் ஊரில் சிங்களக் காடையர்கள் எட்டுமாதக் கர்ப்பிணியான ஒரு பெண்ணை வெட்டிக் கொன்றார்கள். 1958 ஆம் ஆண்டு மே மாதம் அந்த ஞாயிறு இரவு கலவரம் மெள்ள மெள்ள ஊர்ந்து கொழும்புக்கு வந்தது. அது சுனிதாவுக்குத் தெரிந்திருந்தது. எனக்குத் தெரியவில்லை.

இரவு பத்துமணி இருக்கும். பலவிதமான செய்திகள் வரத்தொடங்கின. வீதிகளில் சனங்கள் உரத்துக் கூவிக்கொண்டு கூட்டம் கூட்டமாக ஆர்ப்பாட்டம் செய்தவாறு சென்றார்கள். ஆட்களின் ஓலமும் தூரத்திலிருந்தே கேட்டது. நாங்கள் இருந்த பகுதியில் எல்லாம் சிங்களவர்கள்தான். மூன்றே மூன்று தமிழ்க் குடும்பங்கள். அவையும் தூரத்தூர இருந்தன. எங்கேயோ வீட்டை உடைக்கும் சத்தம் காற்றிலே வந்தது. கூக்குரல் கூடப் பக்கத்திலே போலத் துல்லியமாகக் கேட்டது.

அண்ணர் என்னைப் பார்த்து பக்கத்து வீட்டுக்குப் போய்ப் பீரிஸை அழைத்து வரச்சொன்னார். நான் அவர்கள் வீட்டுக்குப் போய் கதவைத் தட்டினேன். அந்த நேரத்தில் எனக்குக் கொஞ்சம் கை நடுங்கியது உண்மை. உள்ளே பெரிய சிரிப்பும் ஆரவாரமுமாக ஒரே சத்தம். அவர்கள் உள்ளே போட்ட கும்மாளத்தில் நான் கதவு தட்டிய சத்தம் எனக்கே கேட்கவில்லை. மறுபடியும் கதவைத் தட்டப் போன போது, சுனிதா படீரென்று கதவைத் திறந்தாள். ஏதோ அடக்கமுடியாத நகைச்சுவைக்கு விழுந்துவிழுந்து சிரித்தவள், அப்படியே எதிர்பாராமல் என்னைக் கண்டு சிரிப்பை அடக்கமுடியாமல் பாதியில் நிறுத்தினாள்.



பெரிய ஆரவாரமும் கும்மாளமும் திடீரென்று நின்று நிசப்தம் உண்டாகியது. நான் வந்த காரியத்தைப் பீரிஸிடம் சொன்னேன். அப்போதுதான் அவருக்கு நாங்களும் அங்கே இருக்கிறோம் என்பது ஞாபகம் வந்ததுபோலத் திடுக்கிட்டார். உடனே தன் வளைந்த சீப்பை எடுத்து ஒரு கிரீடத்தை அணிவதுபோல நிதானமாகத் தலையிலே சூட்டிக்கொண்டு என் அண்ணரைப் பார்ப்பதற்காக வந்தார்.

அண்ணர், பீரிஸுக்கு நிலைமையை விளங்கப்படுத்தினார். எந்தநேரமும் எங்கள் வீடு தாக்குதல்களுக்கு உள்ளாகலாம். எங்கள் உயிரையும் உடைமைகளையும் அவர்தான் பாதுகாக்கவேண்டும் என்றார்.

பீரிஸ் அப்போதுதான் தன் நினைவுக்கு வந்தவர்போல ஒரு புது மனிதராக மாறினார். எங்கள் பாதுகாப்புக்கு தான் உத்தரவாதம் என்றார். அவர் திரும்ப வீட்டுக்குப் போகவில்லை. ஒரு நாற்காலியை எடுத்து வீட்டுக்கு வெளியே போட்டு அன்றிரவு முழுக்க அங்கேயே தங்கினார். தூங்கவே இல்லை. உள்ளே நாங்களும் தூங்காமல் விடிவதற்காகக் காத்திருந்தோம். அடுத்தநாள் காலை, அந்த மூன்று தமிழ்க் குடும்பங்களில் ஒரு குடும்பத்தின் வீடு உடைந்து சிதிலமாகி விட்டது என்றார்கள். ஒரு குடும்பத்து ஆட்கள் இரவோடு இரவாக மறைந்துவிட்டார்கள். எஞ்சியது நாங்கள் மட்டும்தான்.

ஒரு பொலீஸ் வாகனத்தில் எங்களையும் இன்னும் சில தமிழ்க் குடும்பங்களையும் அகதிமுகாமுக்கு அழைத்துச் சென்றார்கள். ஒரே ஒரு பெட்டிதான் எடுத்துவரலாம் என்று கட்டளை. அந்த வீட்டில் நான், அண்ணர், மச்சாள், தங்கச்சி, தம்பி என்று பலரும் இருந்தோம். எங்கள் உடைமைகளில் எதைப் பெட்டியில் அடைப்பது, எதை விடுவது என்பது தெரியவில்லை. நான் உடுத்த உடுப்போடு புறப்பட்டேன். என் பங்குக்கு ஒரே ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டேன்.

அந்த வீட்டுக்குத் திரும்பி வருவோம் என்பது நிச்சயமில்லை. அடுத்தவேளை உணவு எப்போது, எங்கேயிருந்து வரும் என்பது தெரியாது.

அகதி முகாமில் 2,000 பேர் வரை இருந்தார்கள் என்று நினைக்கிறேன். இன்னும் பல முகாம்கள் இருந்தன என்று பின்னர் கேள்விப்பட்டேன். இப்போது சரியாக 50 வருடங்கள் கழித்து நினைத்துப் பார்க்கும்போது, அந்த முகாமில் நடந்தது ஒன்றும் எனக்குச் சரியாக ஞாபகம் இல்லை. ஆனால் ஒரே ஒரு காட்சி நினைவுக்கு வருகிறது. இத்தனை வருடங்கள் கழித்தும் நினைவில் நின்றதால், அது முக்கியமானதாக இருக்கவேண்டும்.

ஒரு கறுத்த பெண்மணி, பெரிய உடம்பு, வயது 40 இருக்கலாம். கால்களை அகட்டி நீட்டி, முழங்கால் மட்டும் சேலையைச் சிரைத்து உட்கார்ந்திருப்பார். அவருக்குப் பக்கத்திலேயே முழு போத்தல் நிறைய நல்லெண்ணெய் இருக்கும். அதை அவர் தலையிலேயே தேய்த்து ஆற அமர முடியைச் சீவி இழுப்பார். அகதிமுகாமில் இருந்த அத்தனை நாட்களும் அவர் அதைச்செய்யத் தவறவில்லை. ஒருபோத்தல் நல்லெண்ணெய் மிகவும் முக்கியமானதாகப்பட்டிருக்க வேண்டும். தலைவாரி முடித்ததும், நிரைக்கு ஆட்கள் வந்து கையை நீட்டிப் பிச்சை எடுப்பதுபோல அவரிடம் நல்லெண்ணெய் வாங்கிக்கொண்டுபோய் உச்சியில் தேய்ப்பார்கள்.

அன்று ஒரு தொண்டு நிறுவனம் அகதிகளுக்கு இலவசமாக உடைகள் வழங்கியது. ஏதோ ஒரு வெளிநாட்டில் யாரோ போட்டு முடித்த உடைகள்தான். அதற்காக ஆட்கள் சண்டைபோட்டு, ஒருவர்மேல் இன்னொருவர் ஏறிநின்று பெற்றுக்கொண்டார்கள். உடுத்த சேலையுடன் வெளிக்கிட்ட அக்காவுக்கு ஒரு கம்பளிப்போர்வை கிடைத்தது. எனக்கு நாலு சைஸ் பெரிசான இரவு ஆடையின் மேற்சட்டை மட்டுமே அகப்பட்டது. கீழ்க் கால்சட்டை யாருக்குப் போனதோ தெரியாது. அந்த மேற்சட்டையின் கடைசி பட்டன் என் கைகளுக்கு எட்டாது. அவ்வளவு தூரத்தில் கிடந்தது.

மிகச் சந்தோஷமாக அதை நான் பகலிலும் இரவிலும் அணிந்துகொண்டேன். ஒரு வாரம் கழித்து, எங்களைக் கப்பலில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினார்கள். அரசாங்கத்தால் ரயில் பயண பாதுகாப்புக்கு உத்தரவாதம் கொடுக்க முடியவில்லை என்று பின்னர் அறிந்தோம்.

நான்குநாள் கப்பல் பயணம். எங்கே போகிறோம் என்று யாராவது கேட்டால், எங்கள் தேசத்துக்கு என்று பதில் சொன்னோம். அது ஓர் எண்ணெய்க் கப்பல். நடக்கும்போது ஆட்கள் அடிக்கடி வழுக்கி விழுந்தார்கள். மணமோ சொல்லமுடியாது. ஆட்களின் வியர்வை மணம், கடல் மணம், எண்ணெய் மணம் அத்துடன் பலர் தலை சுற்றி வாந்தி எடுத்ததால், அந்தமணமும் சேர்ந்துகொண்டது. வாழ்நாள் முழுக்க மறக்கமுடியாத ஒரு கலவையான மணம்.

சனங்கள் ஆடு மாடுகளைப்போலக் கிடைத்த இடங்களில் படுத்துக்கொண்டார்கள். ஒருவர் படுத்து எழும்பியதும் வேறு ஒருவர் அந்த இடத்தைப் பாய்ந்து பிடித்துக்கொள்வார். இவ்வளவும் நடக்கும்போது, நான் பாட்டுக்கு என்ஜின் சத்தம் காதைச் செவிடாக்கும் ஓர் ஒதுக்குப்புறமான இடத்தில் அமர்ந்து, கொண்டுவந்த புத்தகத்தைப் படித்துக்கொண்டு இருந்தேன். அந்தப் புத்தகம் டானியல் டெப்போ என்பவர் எழுதிய ரொபின்சன் குரூஸோ. அது ஞாபகத்தில் இருப்பதற்குக் காரணம் என்னுடைய அந்தச் சூழலுக்கு அது அப்போது மிகவும் பொருந்தி இருந்தது. இந்த நாவலை ரொபர்ட் னொக்ஸ் எழுதிய இலங்கை வரலாற்றுக் குறிப்பில் இருந்து எழுதியதாக பின்னாளில் படித்ததுண்டு. அப்போது அது எனக் குத் தெரியாது. ரொபர்ட் னொக்ஸ் வெள்ளைக்காரன். கண்டி அரசனிடம் பிடிபட்டு 19 வருடகாலம் சிறைத்தண்டனை அனுபவித்தவன். பின்பு எப்படியோ தப்பி ஓடிப் போய்த் தன் அனுபவங்களைப் புத்தகமாக எழுதினான்.

இந்த நாவலில் வரும் ஒரு சம்பவம், இப்போது நான் அனுபவித்த தனிமைக்குப் பொருத்தமானதாக அமைந்தது. குரூஸோ ஓர் ஆளில்லாத தீவில் பல ஆண்டுகள் தனியாகச் சீவிக்கிறான். அவனுக்கு விலங்குகள், பாம்புகள், பறவைகள், பூச்சிகள் என்று எதற்கும் பயமில்லை. ஒரு நாள் கடற்கரையில் மனிதக் காலடியைக்கண்டு மிரண்டு போகிறான். பீதி பிடித்தது. என்ன செய்யலாம் என்று தெரியாது நடுங்குகிறான். அப்போது எனக்கு ஓர் உண்மை துலங்கியது. மனிதனுடைய உண்மையான எதிரி இன்னொரு மனிதன்தான். நாங்கள் 2,000 பேர் ரயிலில் போகமுடியாமல் கப்பலில் போவதற்குக் காரணம் இன்னொரு மனிதனிடம் எங்களுக்கு இருந்த அச்சம்தான்.

மத்தியான நேரத்தின்போது ஒரு தட்டை ஏந்திக்கொண்டு மறியல் கைதிபோல கப்பலில் வரிசையில் நிற்கவேண்டும். என் முறை வந்தது. இரண்டு கரண்டி எண்ணி அள்ளி என் தட்டில் போட்டான் வெள்ளைச் சீருடையில் நின்ற அந்தச் சிவப்பு இளைஞன். அது மஞ்சள் நிறத்தில் சோறு போலவே இருந்தது. சரியாக அந்தநேரம் பார்த்து பருப்பு அண்டாவில், பருப்பு முடிந்துவிட்டது. கொஞ்சம் பொறு என்று சைகை காட்டி விட்டு அவன் உள்ளே போனான். நான் நீட்டிய கையோடு யாரோ ஒருவர் போட்டு முடித்த நீளமான இரவுச் சட்டையை அணிந்துகொண்டு நெடுநேரம் அங்கே நின்றேன். அப்போது நான் எனக்குள் சொல்லிக்கொண்டேன். ''இந்த நாளை ஞாபகம் வை. உன் வாழ்நாளில் இதுவே ஆகக் கீழேயான தருணம். இனிமேல் இப்படி ஒரு கணம் உன் வாழ்க்கையில் வராமல் பார்த்துக்கொள்!''

நாங்கள் யாழ்ப்பாணத்து அகதித் துறைமுகமான பருத்தித்துறையில் போய் இறங்கியபோது, எங்களை வரவேற்கப் பெரிய கூட்டம் கூடியிருந்தது. ஏதோ போரிலே வென்று நாங்கள் நாட்டுக்குத் திரும்புகிறோம் என்பதுபோல வீரத் திலகமிட்டு மரியாதை செய்தார்கள். யாழ்ப்பாணத்தில் ஒருமாத காலம் தங்கியிருந்தோம். நிலைமை சீரானபோது, திரும்பவும் கொழும்புக்குப் புறப்பட்டோம். என்னுடைய படிப்பை முடிக்கவேண்டிய கட்டாயம் எனக்கு. ஐயா அதை விரும்பவில்லை. 'எதற்காகத் திரும்பவும் போகிறீர்கள்? ஒருமுறை அடித்து ருசிகண்டவன் நிற்பாட்டமாட்டான். மீண்டும் அடிப்பான். நீங்கள் திரும்பவும் இந்த நாட்டுக்கு வரவேண்டும். இது பாதுகாப்பான நாடு. இதை ஒருவரும் எங்களிடம் இருந்து பறிக்கமுடியாது' என்றார்.

32 வருடங்களுக்குப் பிறகு 1990 ஆம் ஆண்டு கேணல் கிட்டு, சுவிட்ஸர்லாந்தில் என்ன பேசுவார் என்பது எனக்கு அப்போது தெரியாது. ஒரு கூட்டத்தின் முடிவில் வெள்ளைக்கார நிருபர் ஒருவர் எதிர்க்கேள்வி போட்டு கிட்டுவை மடக்கினார். 'நீங்கள் தமிழீழம் தமிழீழம் என்று சொல்லிப் பேசுகிறீர்கள். இந்தத் தமிழீழம் எங்கே இருக்கிறது. இதன் எல்லைகள் என்ன?'

கிட்டு ஒருகணம் திகைத்து நின்றார். சிறிது அவகாசம் எடுத்துத் தன்னை மீட்டுக்கொண்டு இப்படிப் பதிலளித்தார். 'இலங்கைத் தீவின் வரைபடத்தையும் சிறிது வண்ணக் கலவையையும் ஒரு தூரிகையையும் கையிலே எடுத்துக்கொள்ளுங்கள். இலங்கையில் எந்தெந்தப் பகுதிகளில் குண்டுகள் விழுகின்றனவோ, எந்தெந்தப் பகுதிகளில் பீரங்கி வெடித்து அழிவுகள் நடக்கின்றனவோ, எந்தெந்த இடங்களில் தமிழ்ப் பெண்கள் சிங்கள இராணுவத்தினரின் வன்முறைக்கு ஆளாகி அவலப்படுகிறார்களோ அந்தந்த இடங்களை எல்லாம் வரைபடத்தில் வண்ணம் தீட்டுங்கள். முடிவில் வண்ணம் பூசப்பட்ட அந்தப் பகுதிதான் தமிழீழம். அதுதான் எங்கள் எல்லைகள்.'

கிட்டு சொன்னதையும் ஐயா 50 வருடங்களுக்கு முன்னர் சொன்னதையும் ஒன்றாகச் சேர்த்து இப்போது யோசித்துப் பார்க்கிறேன். ஐயா கூறியதில் ஒன்று பொய்த்தது. ஒன்று உண்மையானது. சிங்களவர்கள் தொடர்ந்து அடிப்பார்கள் என்பது உண்மையானது. ஆனால், எங்கள் நாடு பாதுகாப்பானது என்பது பொய்த்தது. உலகிலேயே மிகவும் பாதுகாப்பற்ற பிரதேசமாக யாழ்ப்பாணம் மாறிவிட்டது.

யாரோ போட்டுமுடித்து தானமாகக் கிடைத்த இரவுச் சட்டையை நான் பல வருடங்களாக பல தேசங்களுக்கு ஒரு ஞாபகத்துக்காகக் காவித்திரிந்தேன். ஒரு காலத்தில் நான் வளர்ந்து பெரியவனாகி அந்த உடையை நிரப்புவேன் என்று நினைத்தேன். அது நடக்வே இல்லை. அந்த உடையும் ஒரு நாட்டைவிட்டு இன்னொரு நாட்டுக்கு மாறும் இடைவெளியில் எங்கோ.... எப்போதோ.... ஏதோ ஒரு தருணத்தில் என்னைவிட்டுத் தப்பியது. ★

*நன்றி: விகடன்*




## முன்கதைச் சுருக்கம்

சிக்காக்கோ நகரின் ஒதுக்குப் புறமான ஓரிடத்தில் நியூமூன் வைத்தியசாலை அமைந்திருக்கிறது. கொஞ்சம் தொலைவில் நர்சுகளின் விடுதி இருக்கிறது. மர்ம மனிதனொருவன் நள்ளிரவில் இந்த விடுதிக்குள் நுழைகிறான். பல திகில் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. நர்சுகள் உட்பட ஒரு ரோந்து பொலிஸ்காரன், பிரதேச பொலிஸ் அதிகாரி எனப் பலர் அவனால் கொலை செய்யப்படுகின்றனர்.

ஏன்? என்ன காரணம்?

சிறைச்சாலை அதிகாரியின் அழகிய இளம் மனைவியுடன் றோபோ என அழைக்கப்படும் மர்மமனிதன் உறவுகொள்வதை அதிகாரி கண்டுவிடுகிறான். ஆத்திரமடைந்த அவன் ரகசியமாக தன் மனைவியை கொன்று விடுகிறான். பிணத்தை பெட்டியில் அடைத்து சிறைக்கைதியான றோபோவையே கொண்டுசெல்ல வைக்கிறான். குற்றத்தை றோபோ மீதே சுமத்த வைக்கிறான். பொலிஸாரினால் கடுமையாகத் தாக்கப்பட்ட றோபோ வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்படுகிறான்.

அங்கே என்ன நடைபெறுகின்றது...?

மூன்று நாட்கள் கடந்து விட்டன. றோபோ ஒரு சவம் போலவே கட்டிலில் கிடந்தான். மரக்கட்டை போன்று அவனுடல் அசைவற்றுக் கிடந்தது.

றோபோவின் உடல் நிலை பற்றிய வைத்திய அறிக்கை தொங்கவிடப்பட்டிருந்தது.

'ஆம்ஸ்ரோங் எனும் இந்நோயாளியின் நரம்புகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஆண் உறுப்பு கடுமையாக சிதைந்துவிட்டது. அதனை அகற்றுவது அவசியம். இல்லையெனில் உயிரிழப்பு ஏற்படலாம். நோயாளியை காப்பாற்றுவதே மிக முக்கியமானது. மூளையின் இயக்கம் குறைந்து விட்டது. அதனால் உணர்வு திரும்புவது கஷ்டமானது. உணர்வினை திரும்பச் செய்வதற்கான சகல மருத்துவ பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உணர்வினை பெறும்வரை நோயாளியின் உடல் அசைவில் கவனம் செலுத்தப்படுகிறது. உடலின் ஏதாவது ஓர் உறுப்பின் அசைவு அவதானிக்கப்பட்டுக்கொண்டே இருத்தல் வேண்டும்.' இவ்வாறு அவ்வறிக்கை காணப்பட்டது.

அமுராவும் ஜீனாவும் அந்த அறிக்கையை அடிக்கடி வாசித்து மனப்பாடமாக்கியிருந்தார்கள்.

தனிமையில் அந்த அறைக்குள் றோபோவின் சவம் போன்ற உடலை அவதானித்துக் கொண்டே இருப்பது ஒரு திகில் நிகழ்வாகவே இருந்தபோதும் தொடர்ச்சியாகவே அவதானித்துக் கொண்டிருந்ததனால் பழகிவிட்டது. இருள் லேசாக அகல்வது போன்று பயமும் கொஞ்சம் கொஞ்சமாக அகன்றுவிட்டது.

ஆனால், அமுராவும், ஜீனாவும் கிளிங்டனதும், டாக்டர் வில்லியத்தினதும் கூட்டுச் சதியினையும், அவர்கள் திட்டமிட்டு நடத்திக் கொண்டிருக்கும் நாசகார படுபாதகச் செயலையும் புரிந்துகொண்டார்கள். இந்தக் கயவர்கள் ஒரு நீண்ட கால திட்டத்துடன் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று புரிந்தது.

இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் றோபோவை ஒரு மரக்கட்டை போல் இவ்வுலகின் தரிசனத்திற்காக காட்சிப்பொருளாக்கப்போகிறார்களோ என்ற அச்சம் இருவரையும் ஆட்டுவித்துக் கொண்டிருந்தது. ஆனாலும், இவர்களிடம் எதிர்ப்பைக் காட்ட முடியுமா? அம்பேல் ஆக்கி விடுவார்களே!

இன்னும் எத்தனை நாட்களுக்கு இப்படி?

ஒரு வேளை இப்படி ஒரு பாட்சா காட்டிவிட்டு அப்படியே ஆசாமியைப் பரலோகம் அனுப்பிவிடுவார்களா?

இவ்வாறெல்லாம் கேள்விகள் நீர்க்குமிழிகளாக மனதில் எழுந்து உடைந்தன.

அன்று இரவு றோபோவின் உடலில் லேசான அதிர்வுகள் ஏற்படுவதைப் போன்ற பிரமை அமுராவிற்கு ஏற்பட்டது. அவள் மட்டும் அறையில் இருந்தாள். ஜீனா டின்னர் முடித்து வருவதற்காகப் போயிருந்தாள்.

'சுவிட் ட்ரீம்' என்ற நாவலில் கவனத்தை மூழ்கடித்துவிட்டிருந்த அமுரா, ஏதோ சலனம் ஏற்படவே திரும்பிப் பார்த்தாள். புத்தகத்தை மேசையில் போட்டுவிட்டு கட்டிலில் கிடக்கும் றோபோவின் அருகில் சென்றாள்.

கால்களிலிருந்து கழுத்துவரை அவனை மூடிவிட்டிருந்த போர்வையில் கண்கள் பதிந்தன. மூச்சு இழையோடுவதற்கான ஒக்ஷிஜன் கருவி நாசியையும், வாயையும் கௌவிப் பிடித்துக் கொண்டிருந்தது. கண்கள் மூடியிருந்தன.

முகத்தில் பார்வை பதிந்தது. சில வினாடிகள் நகர்ந்தன. அவள் சலனமற்று நின்றுகொண்டிருந்தாள். 'பாவம்! எவ்வளவு கம்பீரமான மனிதன் இவனுக்கா இவ்வளவு பெரிய கொடூரத்தைச் செய்கிறார்கள்! ஓ! ஜீசஸ்!' என்று மனம் கதறுகின்றது.

அப்போது -

முகச்சதை லேசாக நடுங்குவது போலிருந்தது. குளிர்ச்சியில் வெடவெடக்கும் ஒரு பட்சியின் உடல் நடுக்கம் போல் அது தெரிந்தது.

அதே விதிர் விதிர்ப்பு அமுராவின் உடலிலும் 'சில்'லென விரைந்தோடியது. 'தாமரை இலையில் நீர் மணி'யென விரைந்த அவ்வோட்டம் உடல் முழுவதையும் 'சடக்'கெனப் பிடித்து உலுக்குவதுபோல 'திடீ'ரென ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

அழுத்தமாக ஒட்டிவிடப்பட்டிருந்தன போன்று காணப்பட்ட றோபோவின் கண்ணிமைகள் 'சட்'டென பிளந்து கொண்டன. இரு கூரிய ஈட்டிகளென கண்மணிகள் அமுராவை 'உர்ர்'ரென வெறித்தன! ஏன் இப்படிச் செய்தாய்?! என்று அவை உறுமுவனபோல் விறைப்புடன் காணப்பட்டன.

அமுரா நடுநடுங்கிப் போனாள். வேகமாக பின்னோக்கி நகர்ந்தாள்.

டாக்டர் வில்லியம் ஒரு கட்டளை இட்டிருந்தான்.

'அமுரா! ஜீனா! இதோ பாருங்கள்! எந்தக் கணமும் இவனுடலில் அசைவு காணப்பட்டாலோ அல்லது கண்ணிமைகள் திறந்து கொண்டாலோ இந்த இன்ஜெக்ஷனை செலுத்திவிட வேண்டும். இல்லையென்றால் அவன் இறந்து விடுவான். கவனமாக இருங்கள். நான் சொன்னதை கவனமாக நெஞ்சில் பதித்துக் கொண்டு எச்சரிக்கையாகவிருங்கள். இல்லை அவனைக் கொன்ற பழிபாவம் உங்களைச் சேர்ந்துவிடும். அப்புறம் என்ன நடக்கும் தெரியும்தானே!'

டாக்டர் வில்லியத்தின் எச்சரிக்கை அமுராவின் நினைவிற்கு வந்தது.

அவள் ஓடிப்போய் இன்ஜெக்ஷனை எடுத்தாள்.

ஆனால் -

அவன் அருகில் செல்லவே மனம் பயப்பிராந்தியில் விதிர்த்தது. உடல் நடுங்கியது. அத்துடன் ஏதோ ஓர் அனுதாபப் பால் நெஞ்சில் கசிந்தது.

றோபோவின் கண்கள் மறுபடியும் மூடப்பட்டுவிட்டன. உடல் அதிர்வுகள் அடங்கிவிட்டன.

அமுரா நினைத்தாள்,

'டாக்டர் வில்லியம் சொல்வதை நம்பமுடியாது. அவன் றோபோவை அணு அணுவாக சாகடிக்கும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கான். எவரும் சந்தேகிக்காத வகையில் எம்மூலமே அதனை நிகழ்த்திவிடப்பார்க்கிறான். உண்மையிலே இந்த இன்ஜெக்ஷன் அவனை உயிர் வாழச் செய்வதற்காக அல்ல. மீண்டும் உயிர்ப்பு பெறும் உணர்வுகளை அடக்கவே.'

இப்படியெல்லாம் அமுராவின் மனம் சொல்லிற்று. அவள் இன்ஜெக்ஷனை இருந்த இடத்திலே வைத்து விட்டாள். றோபோவிற்கு உணர்வு மீண்டெழுந்த விசயத்தை ஜீனாவிடம் சொல்லலாமா வேண்டாமா என்ற மனக்குழப்பம் அவளை ஆட்டுவித்தது.

மனதில் குழப்பமும், கலக்கமும் சேர்ந்து கொள்ளவே அவள் பித்துபிடித்தவள் போல் தனது மேசையருகில் போய் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு 'சுவிட் ட்ரீம்' நாவலை தொட்டும் பார்க்காமல் கட்டிலில் கிடக்கும் றோபோவின் அசைவற்ற உடலையே வெறிக்க ஆரம்பித்தாள்.

காதருகில் -

''அமுரா!'' என்ற அழைப்போசைக் கேட்டதும் திடுக்கிட்டாள்.

டின்னரை முடித்துவிட்டு ஜீனா வந்திருந்தாள். மேஜையின் மீது கிடந்த 'சுவீட் டீரீம்' நாவல் அவள் கையிலிருந்தது.

''என்னடி? 'சுவிட் ட்ரீம்' வாசித்ததும். ஜோன்சன் நினைவு வந்துவிட்டதா? கவலையை விடு அநேகமாக நாம் நாளைக்கு போய்விடலாம் என்று நினைக்கிறேன். அந்த கிழடன் கிளின்டனிடம் சொல்வதை கேட்டுக் கொண்டிருந்தேன்.'' என்றாள்.

''ஓ! அப்படியா?'' அமுரா தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவள் போல மலங்க மலங்க கண்ணிமைகளை படபடத்தாள்.

''சரி! சரி! போய் டின்னரை முடித்துவிட்டு வா. எனக்கு தூக்கம் வருது. கொஞ்சம் சாய்ந்து எழும்ப வேண்டும்.'' என்று லேசாகக் கொட்டாவி விட்டுக் கொண்டே சொன்னாள்.

சுவர்க்கடிகாரம் 10 மணியை அடித்தது.

அமுரா டின்னருக்குப் போய்விட்டாள்.

ஜீனா அதிகமாக சாப்பிட்டு விட்டாளோ தெரியவில்லை. அவளுக்கு கொட்டாவி கொட்டாவியாக வந்தது. தூக்கம் கண்களை பிடுங்கியது. 'என்ன சிலிப்பிங் டப்லெட்ஸ் போட்டுவிட்டேனா?' என்று அவள் தனக்குத்தானே கேட்டுக் கொண்டாள். 'சுவிட் ட்ரீம்ஸ்' நாவலை கையில் எடுத்தாள். பக்கங்களை புரட்டினாள், கண்களை ஓட்டினாள். எழுத்துக்கள் மங்கலாகவே தெரிந்தன.

மேசையில் தலை கவிழ்ந்துவிட்டது. 'கிர்'ரென தூக்கம் விழுங்கிக்கொண்டது.

அப்ப்பா! என்ன இப்படி ஓர் அசுரத்தூக்கம் தெரியவில்லையே. அவள் ஆழ்ந்த தூக்கத்தில் லயித்துவிட்டாள்.

அப்போது -

றோபோவின் கண்கள் திறந்துகொண்டன. அவனுடல் லேசாக நிமிர்ந்தது. அவன் திரும்பி ஜீனா மேசையில் தலைசாய்ந்து படுத்துக் கிடப்பதைப் பார்த்தான். சுற்றும் முற்றும் கண்கள் சுழன்றன. தனது போர்வையை விலக்கிக்கொண்டு கட்டிலை விட்டு எழும்புவதற்கு பிரயத்தனம் செய்தான்.


வெளியில் காலடிச் சப்தம் கேட்டது.

சட்'டென மறுபடியும் கட்டிலில் சாய்ந்து கொண்டான். கதவை திறந்து கொண்டு டாக்டர் வில்லியமும் கிளின்டனும் உள்ளே நுழைந்தார்கள். இருவரும் வேகமாக கட்டிலை நோக்கி நடந்தார்கள்.

றோபோ -

சவம் போல் கிடந்தான்.

(தொடரும்)







5 குடும்பங்களுக்கு சொகுசு கப்பலில் விநோத சவாரி
600 குடும்பங்களுக்கு லெஷர் வேர்ல்ட் சவாரி
செலிங்கோ லை∴ப்
குடும்ப சவாரி 2
இந்த அதிர்ஷ்டம் யாருக்கு?
தற்போதுள்ள மற்றும் புதிய செலிங்கோ லை∴ப் ஆயுள் காப்புறுதி உரிமையாளர்களுக்கு.
நீங்கள் செலிங்கோ லை∴ப் காப்புறுதியாளரா?
மேலதிக விபரங்களை செலிங்கோ லை∴பின் விற்பனை ஆலோசகர் அல்லது கிளை காரியாலயங்கள் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
அல்லது அழையுங்கள் 011 - 2 461 461.
செலிங்கோ லை∴ப்
செலிங்கோ இன்சுவரன்ஸ் பிஎல்சி
சிறியதோ பெரியதோ எதையுமே காப்பது - செலிங்கோ
134, காலி வீதி, கொழும்பு 3. கம்பனிப் பதிவு இலக்கம் - PQ 24 தொலைபேசி: (011) 2 461 461 இணையத்தளம்: www.ceylincolife.com




ஜப்பானிய இளம்பெண்களிடம் வித்திரமான அலங்காரமோகம் அதிவேகமாகப் பரவிவருகிறது. இறந்த பூச்சி, வண்டுகளை அள்ளி தலையில் அப்பிக்கொள்வதுதான் அது. ஷோக்கோ நகாகாகா என்ற பிரபல மாடல் அழகிக்கும் இந்த அலங்கார ஸ்டைல் பிடித்துப் போய் பூச்சிகளை அள்ளி தலையில் போட்டுக்கொள்ள, பேஷன் வேகம் மேலும் சூடு பிடித்துவிட்டது. இவர் ஒரே மாதிரி பூச்சி, ஒரே மாதிரி பாணி என்றில்லாமல் அடிக்கடி அலங்கார விதத்தையும், பூச்சி வண்டுகளையும் மாற்றிக்கொண்டே இருக்கிறாராம்.

மகப்பேறு இல்லாத பெண்மணிகளிடம் ''வயிற்றில் பூச்சி, புழு ஏதாவது?'' என்று சிலர் கேட்பார்கள். ஜப்பானியப் பெண்களோ தலையில் புழு, பூச்சிகளோடு அலைகிறார்கள். செலவில்லாத அலங்காரம்தான்... ஆனால், ஜப்பானியப் பெண்கள் பக்கத்து நாடான சீனா பக்கம் போனால் கவனமாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால், தலையைப் பிடித்து உலுக்கி, பொறுக்கி வறுத்துத் தின்றுவிடுவார்கள்! (உவ்வே என்கிறீர்களா?)

## வேலி...

(13ஆம் பக்கம் பார்க்க)

நிமிஷமா உயிர் வாழறவங்க. இவனுக்குக் குழிபறிக்க எத்தனையோ பேர் காத்திருக்காங்க. இவன்லாம் மாறிடுவான், செத்திடுவான். ஆனா, விஞ்ஞான அறிவு என்னிக்கும் இருக்கும். அதை தடைசெய்யமுடியாது. தடைசெய்யக்கூடாது. என்னிக்காவது ஒரு நாளைக்கு நீ எழுதி வைக்கிற குறிப்புகளுக்குத் தேவை இருக்கும். மதி, நீயும் உன் புருஷனும் உங்களுடைய இயந்திர வாழ்க்கையில இருந்து ஓர் ஆறுதல் பெற இது ஒரு வழின்னு வெச்சுக்கோயேன்'' என்று அட்டைப் பெட்டியைக் கொடுக்க, மதி ஆசையுடன் வாங்கிக்கொண்டாள்.

அதைப் பின்னறையில் கொண்டு போய் வைத்தாள். ''வாங்க என்ன, பார்த்துக்கிட்டே நிக்கறீங்க? அவங்க வர்றதுக்குள்ளே வேலியைக் காட்டிட்டு வந்துடலாம். சோலைக்குள்ள வளையுது பாருங்க அதுதான் மறைவான இடம்...''

''வழி சொல்லிடலாமே மதி.''

''பயந்து சாவாதீங்க. பயப்படாமயே சாவலாம் வாங்க.''

''வேண்டாம் மதி. நான் போய்க்கிறேன். வழி சொன்னாப் போதும்.''

''நீங்க வர்றீங்களா இல்லையா இப்ப? இல்லன்னா நான் இவர்கூட ஓடிப் போயிருவேன்!''

மூன்றுபேரும் கிளம்பியபோது இருட்டியிருந்தது. இன்னும் பாரா துவங்கவில்லை. பகுதி பகுதியாக நாலாயிரம் வீடுகளையும் முடிப்பதற்கு நேரம் ஆகும். முதல் பிளாக்கில் வெளிச்சம் தெரிந்தது. ஒலிபெருக்கி தெளிவில்லாமல் ஒலித்துக்கொண்டிருந்தது.

''ஆரம்பிச்சுட்டாங்க. சரியான சமயத்தில்தான் கிளம்பிட்டோம். யாரும் பார்க்கலியே?''

''யாரும் இந்த நேரத்துக்கு வெளியவே வரமாட்டாங்க. நீங்க வாங்க!'' என்று மதி முன்னால் சென்றாள்.

''மதி! இந்த உதவிக்கு என்ன கைம்மாறு...''

''அதெல்லாம் வேண்டாங்க. நாங்கதான் உங்களுக்கு நன்றி சொல்லணும், வாழ்க்கையில ஒருநாளைக்குக் கொஞ்சம் துடிப்புக் கொடுத்ததுக்காக, மாறுதல் தந்ததுக்காக.''

வெளிக் கதவைத் திறந்துகொண்டு வீதியில் இறங்கினதும் அந்தவண்டியின் முன்வெளிச்சம் பட்டென்று எங்கள் மூவரின் மேலும் விழுந்தது.

''நகராதே! கையைத் பின்தலையில் கோத்துக்கொள்! சுடப்படுவாய்!'' என்றது ஒலிபெருக்கி.

மனோகர் அதைக் கேட்டதும் தெருவில் மிக வேகமாக குறுக்கே ஓட, 'டிர்ர்ட்' என்று வசீகரமான ஓர் ஒலி கேட்க, குண்டடிபட்டு அப்படியே உறைந்து தடுக்கி ஒருகணம் கோமாளி போலத் தடுமாறித் தெருநடுவில் விழுந்தான்.

கொஞ்ச நேரத்தில் ராத்திரி ஒளியில் அவன் மார்புக்குக் கீழே நல்ல ரத்தக் குளம் பரவ, மதி, ''பாவிகளா! பாவிகளா!'' என்று வீறிட்டுக்கொண்டு அவரருகே ஓட, ''மதி போகாதே, சுட்டுடுவாங்க!'' என்று நான்கூவ...

அவர்கள் சுடவில்லை.

'இரண்டு பேரும் வீட்டுக்கு அழைத்து வரப்பட்டோம். அந்த இளம் புயற்படையினன் என் மகனைப் போல் இருந்தான். புதிதாகக் குளித்திருந்தவன் போல புன்முறுவலுடன், ''இங்க வருவான்னு கண்டுபிடிச்சுட்டோம். உங்களைக் கொல்ல எங்களுக்கு உத்தரவில்லை. எங்கே அந்த உயிர்னு மட்டும் சொல்லிருங்க.''

''தெரியாது'' என்றாள் மதி.

'இதப் பாருங்க தாயே, அது என்னன்னு உங்களுக்குத் தெரியுமா? தலைவர் பேச்சைக் கேட்டிங்கல்லே? அதை உடனே அழிக்கும்படியா எங்களுக்குத் தலைநகரில் இருந்து உத்தரவாகியிருக்குது. சீக்கிரம் சொல்லுங்க. பத்துமணி செய்திக்குள்ளே விஷயம் முடிஞ்சுடணும். எனக்குப் பதக்கம் கிடைக்கும். சொல்லுங்க தாயே!''

''தெரியாது'' என்றாள் மதி.

''சரிதான்! அநாவசியத்துக்கு உங்களைத் துன்புறுத்தணும்னு விருப்பம் போல இருக்கு. வாங்கய்யா! முதல்லே...'' என்று அவன் தன் பையிலிருந்து எதையோ எடுத்து மடக்கியிருந்ததை பிரிக்க, அது ஒரு கத்தரிக்கோல் போலப் பளபளத்தது.

''எப்படி விருப்பம் சொல்லுங்க? ஐயா காதைக் கத்தரிக்கலாமா, இல்லை அம்மாவின்?''

உடன் இருந்தவன், ''பெண்களுக்குத்தான் முதலிடம்,'' என்றான்.

''வேண்டாம், வேண்டாங்க! சொல்லிர்றேன்.''

''சொல்லாதீங்க! என்னதான் செய்யறாங்க பார்க்கலாமே!''

''அதான் சொன்னேனேம்மா''

''வேண்டாங்க வேண்டாங்க. அந்த அறையிலே அட்டைப் பெட்டியில இருக்குது. அட்டைப் பெட்டில...''

''பாத்தீங்களா, அது சமர்த்து! நல்ல குடிமகனுக்கு அடையாளம்.''

அவர்கள் அறைக் கதவை உடைத்து உள்ளே செல்ல, மதி என்னைக் கோபத்துடன் பார்த்து, 'எதுக்காச் சொன்னீங்க? இப்ப என்ன ஆயிடும்? கொஞ்சம் இரத்தம் சிந்தித்தான் பார்ப்பமே! அதைவிட வேற என்ன? செத்தால்தான் என்ன?''

இந்த இளைஞன் எட்டிப்பார்த்து, ''இல்லைங்க! சாகவிடமாட்டோம். செத்துட்டா கதை முடிஞ்சுருதே! அந்தப் பாக்கியம் உங்கமாதிரி ஆளுங்களுக்கெல்லாம் கிடையாதுங்க. மெல்ல மெல்லத்தான் சித்திரவதை செய்வோம். அதுக்குத்தான் அவசியம் இல்லாம ஊதிட்டாரே! எடுடா பெட்டியை!''

அவர்கள் பெட்டியை எடுத்து வந்து மையத்திலே வெளிச்சத்தில் திறந்துபார்த்தார்கள். ''என்னடாது பழுப்பா பச்சையா?''

குழந்தையை ஆர்வத்துடன் எட்டிப்பார்த்தார்கள்.

''உயிர் உண்டா இதுக்கு?''

''கொஞ்சம் நெளியுது பாருங்க.''

''உடனே கொன்னுரும்படி, அழிச்சுரும்படி சொல்லியிருக்காங்க.''

''எப்படிக் கொல்லலாம்?''

''கத்தரி இருக்குதே. வெட்டிடலாம். அவ்வளவுதான். ஐயா காதைத்தான் வெட்டமுடியலை!''

''வேண்டாம், வேண்டாம்'' என்று மதி ஈனஸ்வரத்தில் சொன்னதைக் கேட்காமல் அந்த இளைஞன் அதை அட்டைப் பெட்டியிலிருந்து கையில் எடுத்து, பளபளக்கும் கத்திரியால் குறுக்கே இரண்டாக வெட்டினான்.

வெட்டப்பட்ட இரண்டு துண்டங்களும் கீழே விழுந்துவிட, ''அட, ரொம்பச் சுலபமா இருக்குதே! காயிதம் மாதிரி. கிழிச்சிருக்கலாம் போலிருக்குதே.'' கையைப் பார்த்துக்கொண்டு, ''பிசுபிசுங்குது, ஏங்கம்மா கூழா?''

மதி கீழே விழுந்ததை வசீகரத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இப்போது வெட்டப்பட்ட இரண்டு துண்டங்கள் நான்காகி நெளிந்து... நெளிந்து... மறுபடி பிரிந்து எட்டாகின.

''என்னடாது! எல்லாத்தையும் அள்ளுங்கடா... மிதிங்கடா'' என்று அவர்கள் சொல்வதற்கு முன் எட்டு, பதினாறு, முப்பத்திரண்டு, அறுபத்து நான்கு என்று பரபரவென்று அறை முழுவதும் அந்தப் பிண்டங்கள் பரவத் துவங்கின. சுவரில்... நாற்காலியில்... அந்த இளைஞனின் முதுகில்... எங்கும்... எங்கும்...

என் காலில் குறுகுறு என்றதை உதறித் தள்ள, அது கையில் பற்றிக் கொண்டு வலிக்காமல் என் ரத்தத்தை உறிஞ்சுவது இதமாக இருந்தது. (முற்றும்)

# ராசி பலன்

08-09-2008 முதல் 14-09-2008 வரை

பொ. சந்திரலிங்கம்

### மேஷம்



அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். பண உதவி பெற வாய்ப்புண்டு. அதிஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

### ரிஷபம்



கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

### மிதுனம்



மிருகசீரிடம் 3,4. திருவாதிரை, புணர்பூசம் 1,2,3

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. பண உதவி பெறமுடியும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை உருவாகலாம்.

### கடகம்



புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### சிம்மம்



மகம், பூரம், உத்தரம் 1

காரியத் தடை இருக்கும். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை, வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை வரக்கூடும்.

### கன்னி



உத்தரம் 2,3,4. அத்தம், சித்திரை 1,2

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகைகொள்ளக் கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### துலாம்



சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். தாய் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளில் லாபம் அதிகரிக்கும். பிதா நலமில்லை. அதிஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### விருச்சிகம்



விசாகம் 4, அனுசம், கேட்டை

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### தனுசு



மூலம், பூராடம், உத்தராடம் 1.

காரியத் தடை விலகும். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

### மகரம்



உத்தராடம் 2,3,4. திருவோணம், அவிட்டம் 1,2

காரியத்தடை இருக்கும். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை, வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளில் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### கும்பம்



அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3

காரியத் தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகியிருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.

### மீனம்



பூரட்டாதி 4. உத்தரட்டாதி, ரேவதி

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக் கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.




உலகமே வியக்கும் வகையில் ஒலிம்பிக் போட்டிகளை சீனா பிரமாண்டமாக நடத்தி முடித்திருக்கின்றமை அனைவரும் அறிந்தவிடயம். இந்த ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்பதற்காக ஆயிரக்கணக்கான வீரர்களும், அதனைப் பார்ப்பதற்காக லட்சக்கணக்கான பார்வையாளர்களும் சீனாவுக்குச் சென்று சுமார் ஒருமாதம் வரை தங்கி யிருந்துவிட்டு வந்தார்கள் தானே...! அவர்களுக்காக சீனாவின் ஹோட்டல்களில் வைக்கப்பட்டிருந்த சில 'ஸ்பெஷல்' உணவுவகைகள்தான் இவை.

என்னென்ன அயிட்டங்கள் என்று தெரிகிறதா...? கொஞ்சம் நன்றாக உற்றுப் பாருங்கள். பாம்பு, கொடுக்கன், புழு, வண்டு, பல்லி, தேள், பூச்சி...!

என்ன...வாய் ஊறுகின்றதா...?

'சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்' என்றொரு பழமொழி இருக்கிறதல்லவா...? அதனை அப்படியே மாற்றிவிட்டார் இந்த ஓவியக் கலைஞர். ஓவியம் வரைவதற்கு சுவரும் வேண்டாம் வண்ணப் பூச்சுக்களும் வேண்டாம் வெறும் புழுதி மட்டுமே போதும் என்று நிரூபித்திருக்கிறார் இவர். வாகனங்களின் கண்ணாடியில் பதித்திருக்கின்ற தூசிப் படலத்திலேயே கண்ணைக் கவரும் ஓவியங்களை வரைந்து, பார்ப்போரை மெய்சிலிர்க்க வைத்திருக்கிறார் இந்த ஹொங் ஹொங் நாட்டு ஓவியக் கலைஞர்.






நமது நாட்டில் பொதுஇடங்களிலும் சனசந்தடி மிகுந்த பகுதிகளிலும் வாகனங்களை நிறுத்துவதற்கு உரிய இடவசதிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதில்லை. அப்படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும் நம்மவர்கள் அதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் கண்ட கண்ட இடங்களிலும் வாகனங்களை நிறுத்தி வைத்துவிட்டுப் போவதைப் பார்க்கிறோம். ஆனால், ஜேர்மன் நாட்டில் ஒரு வாகனத் தரிப்பிடத்தை எப்படி அமைத்திருக்கிறார்கள் பாருங்கள்...! குறிப்பிட்ட சிறிய ஓரிடத்தில் பல நூற்றுக்கணக்கான வாகனங்களை நிறுத்தக்கூடிய வகையில் எப்படி அமைத்திருக்கிறார்கள் இந்தத் தரிப்பிடத்தை...? உலகம் எங்கே போய்விட்டது, நாங்கள் எங்கே நிற்கிறோம்...?





HOTEL WESTEERN PVT LTD

உங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம். ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள். வித்தியாசத்தை உணர்வீர்கள்.

No.35, Frankfurt Place, Bambalapitiya, Colombo - 04.
T.P:+94 11 2507161, +94 11 2507163, +94 4518485
Fax:+94 11 4518481 E-mail:info@hotelwesteern.com
Website:www.hotelwesteern.com